பக்கங்கள் - 24

# புதுவிதி

PUTHU VITHI

அறிமுகவிலை 20/=

முந்தையர் ஆயிரம் காலடி
பரவிய தெருவெல்லாம்
புல்லெழுந்து மூடியது,
நானும் நீயும் இவையறிவோம்.
இறந்து போன பூக்களை,
கைவிடப்பட்டுப்போன பாடலடிகளை...
நினைவு கூரப்படாத கணங்களை
அறிவோம்.

○ பா.அகிலன்

புதுமை : 01 | 30 ஜூலை 2016 | விதி : 07

# காணி பிடுங்கும் சாமி




## கச்சான்... கடலை... காலங்கள்...!

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

தொடர்கதை

# ஆறாவடு

07

சயந்தன்



**புக்காரா குத்திக்கொண்டு வந்ததும், டப் என்ற சின்னச் சத்தமும் இருபது முப்பது செக்கன் இடைவெளிகளுக்குள் நடந்தன. விமானத்தின் அடிப் பகுதியில் கரும்புகையும் நெருப்புச் சுவாலையும் பீறிட்டுக் கிளம்பின. தொலைவில் மரங்களுக்குப் புறத்தே நெருப்புக்கோளம் எழுத அந்தக் கணத்தில் இயக்கத்திடம் ஏவுகணைகள் இருப்பது எனக்கு உறுதியானது.**

சண்டையென்று வந்துவிட்டால் என் துப்பாக்கியிலிருந்து ரவுண்சும் வாயிலிருந்து தூசணங்களும் பாய்ந்து கொண்டே இருக்கும். ரவுண்ஸை அளவாகப் பாவிக்கச் சொல்லி இயக்கத்துக்குள்ளே விதிமுறையொன்றிருந்தது. தூசணத்திற்கு அப்படியொன்றும் இருக்கவில்லை. இயக்கத்துக்கு வரமுதலே உள்ள நாட்டுத் தூசணமெல்லாம் எனக்குத் தண்ணிபட்ட பாடாயிருந்தது.

என்னால் அதைக் கட்டுப்படுத்த முடியவில்லை. எனக்கு மட்டுமென்றில்லை நிறையப் பேருக்கு இந்தப் பிரச்சினை இருந்தது. இதனாலேயே சண்டை வீடியோக் களை எடிற் செய்யும் போது சத்தங்களை நீக்கி பாட்டுகளைப் போட வேண்டியிருப் பதாக நிதர்சனம் போராளிகள் சொல்வார்கள். இந்தச் சண்டையும் முழுவதும் பாட்டு களாலேயே நிரம்பியிருக்கும் என்று நான் நம்பத்தகுந்ததாக இருந்தது.

நிலம் கொஞ்சமாய் வெளித்தபோது தலைக்கு மேலே புக்காரா விமானங்கள் வந்திருந்தன. சண்டையில் விமானங்கள் வந்த பிறகு ஆமிக்காரர்கள் உஷாராகி விடுகிறார்கள். நாங்கள் நெல்வயலொன்றின் வரப்பின் கீழே நிலையெடுத்திருந்தோம்.



வயல் நாசமாகியிருந்தது. நெற்கதிர்கள் கருகிப் புகைந்து கொண்டிருந்தன. எனக்குப் பக்கத் தில் நின்றவனுக்கு இடுப்பைக் கிழித்துக் கொண்டு துப்பாக்கி ரவுண்ஸோ, ஷெல் சன்னமோ பறந்திருக்க வேண்டும். கையால் பொத்திக் கொண்டு விழுந்த அவனது வயிறு முழுவதும் ரத்தச் சேறாகிக் கிடந்தது.

இராணுவம் கைவிட்டுப்போன மண்மூட்டை மறைவொன்றுக்குள் அவனை இழுத்து வளர்த்தி என் இடுப்பில் கட்டியிருந்த சாரத்தால் வயிற்றைச் சுற்றிக் கட்டினேன். அவனது சயனைட்டைக் கழட்டி எடுத்தேன். அவன் "அம்மா.. அம்மா" என்றும் "அடியுங் கோ... விடாதேயுங்கோ" என்றும் மாறி மாறி கத்தினான். பிறகு அவனைப் பின்னுக்குத் தூக்கிச் சென்றார்கள். இனி அவனை மறந்து விடுவேன்.

இப்படித்தான் பூநகரிச் சண்டையில் கிட்டத்தட்ட சண்டையெல்லாம் ஓய்ந்து விட்டபிறகு ஒரு ஷெல் விழுந்தது. சற்று முதல் பம்பலடித்துக் கொண்டு நின்ற எங்களில் ஏழு பேரைக் காணவில்லை. துண்டு துண்டாகிக் கிடந்தார்கள். புகை மூட்டம் தணிந்த போது கொஞ்சம் தூரவாக "அண்ணோய் அண்ணோய்" என்ற குரல் மட்டும் கேட்டது. நான் ஓடியபோது பங்கருக்குள் பிள்ளையொருத்தி தலையை உயர்த்த முயற்சித்தபடி கிடந்தாள். அவளுக்கு என் தங்கச்சியின் வயதிருக்கலாம். இரண்டு கால்களும் முழங்காலுக் குக் கீழே சிதைந்துபோய் கால் தசைகள் இறைச்சி யைப் போல் பிளந்து விரிந்து கிடந்தன. ஒரு கையைத் தூக்க முடியாத அளவிற்கு தோள் பட்டையில் இரத்தமாயிருந்தது. முகத்தில் தூசியும் மண்ணும் அப்பியிருந்தன. இரண்டு தொடைகளையும் சுற்றி இறுக்கிக் கட்டி விட்டு அவளது சயனைற் கயிற்றை வெட்டி அகற்றினேன். தனது ஒரு கையால் என் கையைப்பிடித்துக்கொண்டு அதைத்தந்துவிடும்படி அவள் கண்களால் கெஞ்சினாள். அவளை இரண்டு கைகளிலும் தூக்கிக்கொண்டு வெளியே ஓடினேன். அவளை நான் மறக்கவில்லை.

சண்டையில் நின்ற நேரங்களில் காயம் படலாம் என்றோ, செத்துப்போவேன் என்றோ நினைப்பெதுவும் எனக்கு வருவதில்லை. சண்டைகளுக்குப் பிறகு சில சமயம் யோசிப்பதுண்டு. வீரச் சாவடைந்த போராளிகளின் இறுதி ஊர்வலங்களில் அந்தச் சவப் பெட்டிகளில் நானே படுத்திருப்பது போன்ற நினைப்பு ஓடும். அப்பொழுது கண்களில் நீர் முட்டிக் கொண்டு வரும். நான் சாவினை விரும்பவில்லை என்று நினைத்துக் கொள்வேன்.

அதற்காக சண்டையில் கவர் எடுத்து நிற்கிற ஆள் இல்லை, சண்டைகளில் நானொரு விறைத்த மண்டையன். என் முதற் சண்டையே ஒரு பெரும் சண்டையாய் அமைந்தி ருந்தது. ஆனையிறவைச் சுற்றியபொட்டல் வெளிக ளுக்குள் அது நடந்தது. அப்படியொரு நேரடிச் சண்டை எனக்குப் புதியது. இயக்கத்துக்கும் புதியது. சண்டைக் காலம் ஒரு மாதத்தை நெருங்கியபோது எங்களது பக்கத்தில் சாவுத்தொகை முன்னூறு, நானூறு, ஐநூறு என்று அதிகரித்துக் கொண்டே போனது.

ஆனையிறவில் அதுவரை இருந்த எண்ணூறு இராணுவத்தினர், எண்ணாயிரம் ஆக உயர்ந்ததோடு நாங்கள் சண்டையை நிறுத்தப் பின்வாங்கினோம். அந்தச் சண்டைக்கு ஒபரேஷன் ஆ.க.வெ.என்று அண்ணை பெயர் வைத்திருந்தார். அப்படியென்றால் ஆகாய கடல் வெளிச் சமர் என்று அர்த்தமாகும். சிலர் அதனை ஆனையிறவு கட்டைக்காடு வெற்றிலைக் கேணிச்சமர் என்றும் சொல்கிறார்கள். அதற்குப் பிறகு வென்ற சண்டைகளின் பெயர்களை மட்டும் இயக்கம் வெளியில் விட்டது. தோற்கிற சண்டைகளுக்குப் பெயர் இல்லை.

ஆ.க.வெ.வெற்றிக்குப் பிறகு பூநகரியில் தவளை, மண்கிண்டி மலையில் இதயபூமி, கிளாலியில் யாழ்தேவி, இப்போது அளவெட்டியில் புலிப்பாய்ச்சல், அவ்வப்போது நொட்டல்கள் நொருடல்கள் என்று சண்டைகள், சண்டைகள்... சண்டைகள்... சண்டைகளை நான் விரும்பத் தொடங்கினேன்.

புக்காரா குத்திக்கொண்டு வந்ததும், டப் என்ற சின்னச் சத்தம் கேட்டதும் இருபது முப்பது செக்கன் இடைவெளிகளுக்குள் நடந்தன. விமானத்தின் அடிப் பகுதியில் கரும்புகையும் நெருப்புச் சுவாலையும் பீறிட்டுக் கிளம்பின. தொலைவில் மரங்களுக்குப் புறத்தே நெருப்புக்கோளம் எழுந்த அந்தக் கணத்தில் இயக்கத்திடம் ஏவுகணைகள் இருப்பது எனக்கு உறுதியானது.

இயக்கத்தில் இருப்பதால் இயக்கத்தைப் பற்றி எல்லாம் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறார்கள் அப்படியில்லையென்றால் சிரிக்கிறார்கள். மூன்று மாதத்திற்கு முன்னர் இயக்கம் இரண்டு அவ்ரோக்களைச் சுட்டபோது ஏவுகணைகள் வந்து சேர்ந்ததாக அரசல் புரசலாகக் கதையெழுந்திருந்தது. ஆனால் அது என்னதென்றோ எங்கே வைத்துச் சுட்டது என்றோ இயக்கம் மூச்சும் விடவில்லை. இதோஇப்போதும் இந்த வயலுக்கும் மரங்களுக்கிடையிலும் தான் எங்கேயோ புக்காராவைச் சுட்டிருக்கிறார்கள். எனக்குத் தெரியவில்லை.

இப்படித்தான் மாத்தையா விடயத்திலும் இயக்கத்தில் நிறையப்பேருக்கு என்ன நடந்தது என்று தெரியாது. "அவருக்கு றோவோடு தொடர்பு, அவர் கிட்டுவைக் காட்டிக்கொடுத்தார். அவர் அண்ணைக்கு கட்டிலுக்குக் கீழே குண்டு வைக்கத் திட்டமிட்டார்" என்று சனங்கள் பேசிக்கொள்வதுதான் எனக்குத் தெரிந்திருந்தது.

அன்று மத்தியானம் தாண்டி புக்காரா விழுந்த இடத்திற்குள் நுழைந்தோம். உருளைத் தகரம் ஒன்று இரண்டாகப் பிளந்து கிடந்து புகைந்து கொண்டிருந்தது. விமானமொன்றை இப்பொழுது தான் இவ்வளவு கிட்டத்தில் பார்க்கிறேன். அதை ட்ரக்டரில் ஏற்றிக்கொண்டு போனார்கள். இயக்கக் கண்காட்சிகளில் இவற்றை வைத்தால்தான் நிறையச் சனம் பார்க்க வருகின்றார்கள்.

சண்டை தணிந்து கொண்டு வந்தது. இராணுவம் முன்னைய இடங்களையும் தாண்டி ஓடியிருந்தது. அங்காலே அராலி வட்டுக்கோட்டையிலும் அவர்கள் பின்வாங்கியிருந்தார்கள். அன்றைக்கு இரவு புலிகளின் குரலில் "முன்னேறிப் பாய்வதென்ன அம்மா நீ பின்னாலே ஓடுவதேன் சும்மா" என்ற பாட்டு ஒலிபரப்பானது.

ஆனால் சந்திரிக்கா ஒரேயடியாகப் பின்னாலே ஓடிவிடவில்லை. யாழ்ப்பாணம் அவவின் கனவாயி ருந்தது. அதற்காக ரத்வத்தை பலாலியிலேயே படுத்தெழும்பியிருப்பார் என்று நினைக்கிறேன். பத்தாயிரம் ஆமியைப் பலாலியில் குவித்து புத்தூருக் குக்கூடாக நகரைக் குறிவைத்து அவர்கள் முன்னேறத் தொடங்கியிருந்தார்கள். நாங்கள் புத்தூரில் வாழைத் தோட்டங்களில் ஆமிக்காரங்களுக்குள் நுழைந்தோம். மீண்டும் கண் மண் தெரியாமல் சண்டை தொடங்கியது.

(வலிகள் இன்னும்...)

# கம்பியிடப்பட்ட வாழ்வு



சிக்மலிங்கம் றெஜினோல்ட்

"நல்லாட்சி எண்டால் என்ன?" இருந்தாற்போல காலையிலேயே ஒரு குண்டைத் தூக்கிப்போட்டார் தியாகண்ணை.

தியாகண்ணையின் கேள்விக்கு என்ன பதிலைச் சொல்வதென்று தெரியவில்லை. அவர் கண்டபடி அரசியல் கதைக்கிற ஆளில்லை. ஆனால் ஆய்வாளர்களை விட அத்தனை அசைவுகளையும் தெரிந்த ஆள். எல்லாவற்றையும் அறிந்து வைத்திருப்பார். நாட்டு நடப்புகள் அத்தனையும் ஆளுக்கு அத்துபடி.

இந்த மாதிரியான சந்தர்ப்பத்தில் பதிலைச் சொல்லாமல் ஒரு அசட்டுச் சிரிப்பை சிரித்து விடுவதே நல்லது. அப்படித்தான் ஒரு மைத்திரிச் சிரிப்பை மெல்ல விட்டேன்.

"யோவ் நான் கேள்வி கேட்கிறன், நீர் இளிச்சுக் கொண்டிருக்கிறீர்...?" என்றார் தியாகண்ணை. வழமைக்கு மாறான சூடு. பெரும்பாலும் இந்த மாதிரி இறுக்கமாக அவர் யாரோடும் கதைப்பதில்லை.

என்னுடைய சிரிப்பு உலர்ந்து போனது. அவரையே பார்த்துக் கொண்டிருந்தேன். ஆள் கொஞ்சம் பதற்றமாக இருந்தார். கையில் ஒரு பை. அதற்குள் மொத்தமான பைல் ஒன்று. அந்தப் பைலுக்குள்ளிருந்து கடிதங்களை எடுத்தார். எடுத்து அவருடைய தொழிற்பட்டறையில் இருந்த மேசையில் ஒவ்வொன்றாக வைத்தார்.

## பதிலில்லாக் கடிதங்கள்

மகிந்தவுக்கு எழுதிய கடிதங்கள். கோத்தபாயவுக்கு எழுதிய கடிதங்கள். கிளிநொச்சி மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதிக்கு எழுதிய கடிதங்கள். பிரதேச கொமாண்டருக்கு எழுதிய கடிதங்கள். பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எழுதிய கடிதங்கள். மாவட்டச் செயலருக்கு எழுதிய கடிதங்கள். பிரதேச செயலருக்கு எழுதிய கடிதங்கள். கிராம அலுவலருக்கு எழுதிய கடிதங்கள். மனித உரிமைகள் அமைப்புக்கு எழுதிய கடிதங்கள்... இந்து கலாசார அமைச்சருக்கு எழுதிய கடிதங்கள்.... மீள்குடியேற்ற அமைச்சுக்கும் அமைச்சருக்கும் எழுதிய கடிதங்கள்.... அதாவது இவர்களுக்கெல்லாம் எழுதிய கடிதங்களின் பிரதிகள்.... இந்தக் கடிதங்களோடு இணைக்கப்பட்ட காணியின் வரைபடம். கூடவே உறுதி. முதல் தாங்கள் இருந்த போது எடுத்திருந்த வளவின் மங்கலான போட்டோக்கள் இரண்டு. அங்கே இருந்த சிறிய கோயிலின் பழைய போட்டோ ஒன்று. எல்லாவற்றையும் எடுத்துப் பரப்பி வைத்தார்.

## யாரால் முடியும் படையினரைக் கலைக்க?

எனக்கு விளங்கியது. அவருடைய காணியில் இன்னும் அத்து மீறியிருக்கும் படையினரை விலக்கச் சொல்லி, இத்தனை பேருக்கும் எழுதிய கடிதங்களும் தன்னுடைய காணிதான் அது என்பதற்குரிய சான்றாதாரங்களும்தான் அவை என்று.




என்னதானிருந்தாலும் காணியிலிருந்து அவரால் படையை விலக்க முடியுமா? இப்படிக் கடிதங்களைத்தான் எழுத முடியும்.

இவ்வளவு கடிதங்களையும் எழுதுவதற்காக அவர் எத்தனையோ பேரிடம் அலைந்திருக்கிறார். தமிழில் எழுதி, அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, பிறகு அதை அச்சிட்டு, போட்டோக் கொப்பி எடுத்து...

இதுகளுக்காகவே அவர் செலவழித்த நேரமும் காசும் பாதிக்காணி விலைக்கு வரும்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ காலத்திலிருந்து இப்போதைய தலைவர் மைத்திரி வரையில் எல்லாருக்கும் எல்லா விதமாகவும் கடிங்களை அதாவது, தன்னுடைய நியாயமான கோரிக்கையை எழுதிவிட்டார்.

## இன்னும் பலம் பெறும் இராணுவ முகாம்

ஆனால், படைமுகாம் இன்னுமின்னும் வலுத்துக் கொண்டே போகுது. உள்ளே புதிய கட்டட வேலைகள் நடக்கிறது. முன்பிருந்த பனையோலை வேலியைப் பிடுங்கி எறிந்து விட்டுப் புதிதாக மதிலைக் கட்டுகிறார்கள். மதிலின் மத்தியிலே பெரியதொரு கோட்டை வாசலைப் போல கோபுரமும் பிரமாண்டமான கேற்றும் வேறு.

எல்லாத்தையும் ஏதோ தங்களுடைய சொந்தக் காணியில் கட்டுவதைப்போல ஒருவிதமான கூச்சமும் தயக்கமுமில்லாமல் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். தியாகண்ணைக்கு இதுகளைக் காணக் காண நெஞ்சில் நெருப்பு மூளுகிறது.

பழைய ஆட்சி மாறி, புதிய ஆட்சி - நல்லாட்சி வந்தது என்றார்கள். நல்லாட்சியில் தனக்கொரு நல்ல தீர்வு கிடைக்கும். முகாமைப் பிடுங்கிக் கொண்டு காணியைத் தந்து விடுவார்கள் என்று முழுமையாக நம்பியிருந்தார் தியாகண்ணை.

மைத்திரியின் சிரிப்பு அப்படித்தான் சொன்ன மாதிரி இருந்தது. ரணிலும் சம்பந்தனும் வேறு சிரித்துப் பேசிய படங்களை அடிக்கடி பத்திரிகைகளில் பார்க்கும்போது இந்த நம்பிக்கை இன்னும் வலுத்தது.

## நம்பிக்கையின் மீது இடி

அந்த நம்பிக்கையின் மேல் கல்லைத் தூக்கிப் போட்டு விட்டது அரசாங்கம். அந்தக் கல் இப்போது தியாகண்ணையின் நெஞ்சிலே இடியாக விழுந்திருக்கு.

தியாகண்ணையின் கண்கள் கலங்கியிருக்கின்றனவா அல்லது கோபத்தில் சிவந்திருக்கின்றனவா என்று சரியாகத் தெரியவில்லை. ஆனால், ஆள் நெருப்பாக நின்றார்.

அது அவருடைய பாட்டனின் பாட்டனுக்கும் முந்திய காணி. அவர்கள் பரம்பரை பரம்பரையாக, தலைமுறை தலைமுறையாக அந்தக் காணியிலேயே குடியிருந்து வருகிறார்கள். முதுசக்காணி.

காணிக்குப் பரம்பரை உறுதியுண்டு. அந்தக் காணியிலே இருநூறு ஆண்டுக்கும் முந்திப் பாட்டனார்களால் கட்டப்பட்ட காளிகோயிலும் உண்டு. முன்பு வளவில் தென்னை, மா என்று மரங்கள் நின்றன. வீடும் பட்டறையும் இருந்தது. ஊரும் உறவுமாகக் கூடி வாழ்ந்த வாழ்க்கையிருந்தது.

இப்பொழுது, தியாகண்ணையின் காணியோடு சேர்த்து முருகையாவின் காணி, அருந்தவலிங்கத்தின் காணி, சண்முகமண்ணையின் காணி என பத்துப்பன்னிரண்டு பேருடைய காணிகளில் பென்னாம் பெரியதொரு முகாமை அமைத்திருக்கிறார்கள் படையினர். ஊரில் பாதியே படை முகாமாகி விட்டது.

இதொன்றும் இரகசியமாக நடக்கவில்லை. வெளிவெளியாகவே நடக்கிறது. ஏ-9 வீதிக்குப் பக்கத்தில், நீங்கள் எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கும் போதே இந்தக் காரியம் நடந்திருக்கிறது. இப்படி மற்றவர்களின் காணியை இன்னொரு தரப்பினர் வெளிவெளியாகவே அத்து மீறுவதென்றால், அது

(08 ஆம் பக்கம் பார்க்க...)

புதுவிதி



# காணி பிடுங்கும் சாமி

அரவான்

பாலைவனம். நீண்டதூரம் பயணித்த மனிதன் ஒருவன் இரவு இளைப்பாற எண்ணினான். பேரீச்சை மரம் ஒன்றின் கீழ் ஒட்டகத்தைக் கட்டிவிட்டு சற்றுத் தள்ளி கூடாரம் ஒன்றை அமைத்து அதன் முன்னே குளிர் காயத் தீ மூட்டினான். சற்று நேரத்தில் கூடாரத்துக்குள் உறங்கப்போனான். எனினும் அவனால் தூங்க முடியவில்லை. காரணம் ஒட்டகத்தின் இடைவிடாத ஓலம். பாலை வனத்துக்கு ஓர் இயல்புண்டு. பகலில் எவ்வளவுக்கு அனலடிக்கிறதோ அவ்வளவுக்கு இரவில் குளிர்வாட்டி எடுக்கும். அந்தக் குளிர்தாங்க முடியாமல் தான் ஒட்டகம் ஓலமிடுகிறது. தன்னை ஏற்றி வந்த ஒட்டகம் இப்படி குளிரில் உறைவதைக்காண மனிதனால் சகிக்க முடியவில்லை. எனவே தன் கூடாரத்துக்குள் ஒட்டகத்தை அழைத்துவந்தான். ஒட்டகமும் குளிர் நீங்கி அமைதியானது. சற்று நேரத்தில் அவன் உறங்கிப்போனான். ஆனால் திடீரென உடலில் குளிர் காற்றுப்படவே திடுக்கிட்டு விழித்தான். அப்போது தான் கூடாரத்தை விட்டுத் தன்னை ஒட்டகம் தள்ளிவிட்டிருப்பது புரிந்தது. மீண்டும் உள்ளே செல்ல அவன் முயன்ற போது ஒட்டகம் தன் காலால் அவனைப் பலமாக உதைத்து வெளியே தள்ளியது. அப்போது கூடாரம் அறுந்து முன்னே எரிந்து கொண்டிருந்த நெருப்பில்பட்டு கருகிப்போனது. அன்றைய இரவை குளிர்கொட்டும் பாலையில் அந்த மனிதன் நடுங்கிக் கொண்டே கழித்தான்.

இந்தக் கதையில் வருவதைப் போல இடம் கொடுத்தால் மடம்பிடிக்கும் வேலையை ஒட்டகத்தை விடவும் புத்தர் சிலைகள் கனகச்சிதமாகச் செய்கின்றன. எங்கெல்லாம் பௌத்த பேரினவாதம் காலூன்ற வேண்டுமோ அங்கெல்லாம் சொல்லாமல் கொள்ளாமல் புத்தர் சிலைகள் முளைப்பது வாடிக்கைதான். அதன் பின்னர் அந்தப் புத்தர் சிலையை ஆராதிக்கும் சாட்டில் ஒரு பிக்குவும் அவரைப் பராமரிக்கும் சாட்டில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த சிலரும் அங்கு குடியேறி விடுவார்கள். காலப்போக்கில் அது புத்தருக்கான காணியாகிவிடும். ஆரம்பத்தில் இதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள் பின்னர் இன்னொரு இடத்தில் இன்னொரு புத்தர் சிலை முளைக்க இங்கே காட்டிய எதிர்ப்பை மறந்தவர்களாக புதிய புத்தர் சிலையை எதிர்க்கச் சென்று விடுவார் கள். இப்படி போருக்குப் பின்னர் தமிழர் பிரதேசங்களில் முளைத்த புத்தர் சிலைகள் ஏராளம்.

இவையெல்லாம் சட்டம் ஒழுங்கு என்பவற்றுக்கு அமைவாக நடக்கும் காரியங்கள் அல்ல. எனினும் இது குறித்து முறையிட்டாலோ அல்லது எதிர்ப்புத் தெரிவித்தாலோ தடுக்க வேண்டியது அரசின் கடமை. ஆனால் முறைப்பாடுகள், எதிர்ப்புகள் என்பன தெரிவிக்கப்படும் போது எந்த அரசு முறைகேடுகளைத் தடுத்து நிறுத்த வேண்டுமோ அதே அரசே இந்தப் புத்தர் சிலைகளுக்குப் பாதுகாப்பு வழங்கி விட்டு எதிர்ப்புத் தெரிவிப்போர் மீது வழக்குத் தொடர்கிறது. இலங்கைச் சட்டத்தில் புத்தர் எது செய்தாலும் அது சரிதான் போலும். புத்தருக்கு எதிராக எவரும் சுட்டு விரலை நீட்ட முடியாது. நீட்டினால் அது பயங்கரவாதக் குற்ற மாகிவிடும்.

திருகோணமலை கன்னியா வெந்நீர் ஊற்றுக்கள் இராவணனின் தாயாரின் இறுதிக் கிரியைகளுக்காக உண்டாக்கப் பட்டவை என்றே ஐதீகங்கள் கூறின.

(06 ஆம் பக்கம் பார்க்க...)

## திருக்கேதீஸ்வரத்தில்...(2012)

சைவர்களின் வரலாற்றுச் சிறப்பு மிக்க தலமான திருக்கேதீஸ்வரம் பாலாவித் தீர்த்தக்கரையில் பெரியளவிலான புத்தர் சிலை ஒன்று நிறுவப்பட்டது. 'தொல்பொருள் திணைக்களத்துக்குச் சொந்தமான காணி' என்று அறிவித்தல் பலகை ஒன்றும் அங்கு நாட்டப்பட்டது. எந்த ஒரு காலத்திலும் அங்கு புத்தர் சிலையோ அல்லது பௌத்த மதமோ அல்லது சிங்கள மக்களின் இருப்போ நிகழாதவிடத்து அந்தப் புத்தர் சிலைக்கு தொல்பொருள் திணைக்களம் ஆதரவளிப்பதுடன், அதனைப் பேணியும் வருகின்றது. ஆக மொத்தத்தில் தொல்பொருள் திணைக்களத்தின் அனுசரணையோடே புத்தரின் ஆக்கிரமிப்பும் நிகழ்கின்றது.

## உருத்திரபுரத்தில்... (2014)

கிளிநொச்சி உருத்திரபுரம் சிவன்கோவில் அமைந்துள்ள பகுதிக்கு அருகில் 2014 ஆம் ஆண்டு படையினரால் தொன்மையான விகாரையின் எச்சம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. வழமை போலவே அதையும் தொல்பொருள் திணைக்களம் அதன் பொறுப்பில் எடுத்துக்கொண்டது. வெளியார் எவரையும் உள் நுழையவிடாமல் தடுத்தபடியே அங்கு ஆய்வுப் பணிகள் தொடர்ந்தன. ஆனால் கண்டுபிடிக்கப்பட்ட கட்டடச் சிதைவு புராதன சிவனாலயத்தின் எச்சங்களே என்று அப்பகுதி மக்கள் கூறுகின்றார்கள்.



## கீரி மலையில்... (2016)

பெரும் விளம்பரப்படுத்தல்களோடு கட்டம் கட்டமாக வலி. வடக்கு நிலங்கள் விடுவிக்கப்பட்டு வருகின்றன. ஒரு பரப்புக் காணியை விடுவிப்பதற்கே பெரும் ஆர்ப்பாட்டங்கள் ஆரவாரங்கள், அறிக்கைகள் என்பன போன்ற அமர்க்களங்கள் நிகழ்கின்றன. இப்படி கட்டங்கட்டமாக வழங்கப்படும் காணிகளிலும் புத்தரின் பிரசன்னம் தாராளமாகவே உண்டு. இந்தப் புத்தர் சிலைகளை அகற்றுவதா? இல்லையா? என்ற குழப்பத்தில் மக்கள் உள்ளார்கள். குறிப்பாக கீரிமலை, நகுலேஸ்வரம் பகுதியில் கடற்படையினரின் முகாம் அருகே உள்ள காணிகள் கையளிக்கப்பட்ட போதும் அங்கிருந்த புத்தர் சிலையும் அவருக்கு நிழல் கொடுத்த அரச மரமும் இன்னமும் மக்களை அச்சுறுத்திய படியே உள்ளன.

## கொக்கிளாயில்... (2014)

முல்லைத்தீவு கொக்கிளாயில் அரச வைத்தியசாலை அமைப்பதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட காணியின் ஒரு பகுதியையும், தனியார் ஒருவருக்குச் சொந்தமான காணியையும் இணைத்து பிக்கு ஒருவர் பிரமாண்டமான புத்தர் சிலையையும், விகாரை ஒன்றையும் கட்டி வருகிறார். இதனை சட்ட ரீதியாகத்தடுக்க எடுத்தமுயற்சிகளை மீறி விகாரை கட்டுவதை பிக்கு தொடர்ந்தபடியே உள்ளார்.

## நயினாதீவில்... (2016)

யாழ்ப்பாணத்தின் நயினாதீவில் 75 அடி உயரமான புத்தர் சிலை ஒன்றை அமைக்கும் முயற்சிகளை நாகதீப விகாரையின் விகாராதிபதி முன்னெடுத்திருந்தார். அதனை அரசாங்க அதிபர் தடுத்து நிறுத்தினார். எனினும் "நயினாதீவில் புத்தர் சிலையை அமைக்க எந்தத் தடையும் விதிக்கப்படவில்லை. குறித்த புத்தர் சிலை அமைக்க கரை யோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவத் திணைக்களத்தின் அனுமதியை வழங்கவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது" என்று வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே தெரிவித்துள்ளார். எனவே கட்டாயம் வெகு விரைவில் நயினாதீவில் 75 அடிப்புத்தரைக் காணக் கூடியதாக இருக்கும். அதன் பின்னர் நயினாதீவு முற்று முழுதாக நாக தீபமாக அல்லது புத்தர் தீவாக மாறிவிடலாம்.

## சாம்பல் தீவில்... (2016)

திருகோணமலை சாம்பல் தீவில் இராணுவச் சோதனை நிலையம் அமைந்திருந்தது. அது தற்போது கைவிடப்பட்ட போது அங்கு வைத்திருந்த புத்தர் சிலையையும் கொண்டு இராணுவத்தினர் சென்றனர். புத்தர் இருந்த இடத்தில் புத்திசாலித்தனமாக ஒரு பிள்ளையார் சிலையை அவ்வூர் மக்கள்வைத்தார்கள். ஆனால் அன்றிரவு பிள்ளையார் புத்தரின் பரிவாரங்களால் சங்காரம் செய்யப்பட்டார். மீண்டும் இன்னொரு பிள்ளையார் அங்கு சிலையாக வைக்கப்பட்டார். அவரும் அடுத்த நாள் அழிக்கப்பட்டார். அவரையும் புத்தரின் அபிமானிகளேஅழித்தார்கள் என்பதை மக்கள் கண்டிருக்கிறார்கள். புத்தர் இருந்த இடத்தில் வேறுஒருவர் அமரக் கூடாது என்பதா அல்லது புத்தர் மீண்டும் அங்கு நிலம்பிடிக்க வரப்போகிறார் என்பதா இந்த உடைப்புகளின் நோக்கம்?

புதுவிதி
PUTHU VITHI

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com
T.P: 021 493 7777

## ஆளுநருக்கு இது அழகா?

மழைவிட்டும் தூவானம் விடாத கதையாக யாழ். பல்கலைக்கழக மோதல் சம்பவத்தின் பின்னரான நிலைமைகள் இருக்கின்றன. இரு தரப்பு மாணவர்களுக்கிடையேயான மோதலை எப்படியாவது இன வன்முறை போன்று சித்திரிக்க சுயநல அரசியல் வாதிகள் சிலர் முயன்றனர். கடைசியில் அதில் தோல்வியும் கண்டனர்.

இந்த நிலையில் வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே இந்த விவகாரத்தில் நடந்து கொண்ட, நடக்கின்ற விதம் இனவாத அரசியல் வாதிகளின் செயலையும் மிஞ்சிவிட்டது. மோதலின் போது இரு தரப்பு மாணவர்களுக்கும் காயம் ஏற்பட்டிருந்தது. இரு பக்கத்திலும் தவறுகள் இருந்தன. இவர்கள் தான் குற்றவாளிகள் என்று அறுதியாகத் தெரியவர முன்னரே, வடக்கு மாகாண ஆளுநர் காயமடைந்த சிங்கள மாணவர்களை பார்வையிட்டு விட்டு தமிழ் மாணவர்களுக்கு எதிரான கருத்துகளைக் கக்கியுள்ளார். இதுவரையில் வடக்கு மாகாண ஆளுநர், குறித்த சம்பவத்தில் அல்லது தொடர்புடைய எந்தவொரு தமிழ் மாணவனையும் நேரில் சந்திக்கவோ அல்லது தொலைபேசியூடாக தொடர்பு கொள்ளவோ இல்லை.

ஒரு மாகாணத்தின் ஆளுநர் என்பவர் இன, மத அரசியல் பேதங்களுக்கு அப்பாற்பட்டவாரக செயற்பட வேண்டும். பல்லின மக்கள் வாழ்கின்ற பிரதேசத்தில் ஒரு இனத்தவரின் நலன்களை மட்டம் பேணிப் பாதுகாப்பதோ அல்லது அவர்களின் அரசியல் பிரதி நிதி போல் செயற்படுவதோ ஒரு ஆளுநருக்கு அழகல்ல.

றெஜினோல்ட் கூரே இன, மத விவகாரத்தில் ஒரு பக்கம் சார்ந்து செயற்படுவது இது முதற் தடைவையல்ல. நயினா தீவு புத்தர் சிலை விவகாரத்திலும் அவர் பௌத்த மத பிரதிநிதி போலவே செயற்பட்டார்; செயற்படுகிறார். வடக்கில் பெரும்பான்மையாக வாழும் மக்கள் கூட்டத்தின் கருத்தைப் புறந்தள்ளிவிட்டு ஒரு விகாராதிபதியின் விருப்பத்தை நிறைவேற்ற வடக்கு ஆளுநர் வரிந்து கட்டிக்கொண்டு செயற்படுகிறார்.

வடக்கு ஆளுநராக றெஜினோல்ட் கூரே நியமிக்கப் பட்ட போது அதனை நல்லதொரு சகுனமாகவே பலரும் கருதியிருந்தனர். ஏனெனில் இதற்கு முன்பிருந்த ஆளுநர்களை விடவும் றெஜினோல்ட் கூரே ஒரு விசேட தகுதியைக் கொண்டிருந்தார். அதாவது அவர் தமிழ் மொழியைப் பேசக் கூடிய, புரிந்து கொள்ளக் கூடிய ஒருவராக இருந்தார். எனவே அவர் தமிழ் மக்களின் மனக்கிடக்கைகளைப் புரிந்து கொண்டு அதற்கேற்ற விதத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்க முனைவார் என்று மக்கள் நம்பினர். ஆனால் அவரோ அதற்கு எதிர்மாறாகவே நடக்கின்றார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் நடந்த மோதலுக்கான காரணத்தைக் கண்டறிந்து, மோதலின் பின்னரான இனமுறுகல் நிலையைத் தணித்து இயல்புநிலையை மீளக் கொண்டு வரவேண்டிய வடக்கு ஆளுநர், எரிகிற நெருப்புக்கு எண்ணெய் ஊற்றுவது போல இனவாதக் கருத்துகளைத் தொடர்ந்தும் வெளியிட்டு வருகிறார்.

இதனாலேயே பல்கலைக்கழக மோதலின் பின்னணியில் ஆளுநரின் கரங்கள் இருக்கலாம் என்று பலரும் சந்தேகிக்கின்றனர். இந்தச் சந்தேகத்தை உறுதி செய்வது போலவே ஆளுநரும் நடக்கிறார். பிரச்சினைகளை தீர்ப்பதை விடுத்து புதிய பிரச்சினைகளை உருவாக்குவது ஒரு ஆளுநருக்கு தகுமா?

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

## தமிழர் – சிங்களவர்

# கலப்பினக் குடிகளே!

கலையரசன்



கிழக்கிந்திய கம்பெனி (VOC) ஆவணத்தில் இருந்து :

“இலங்கைத் தீவை காலனிப் படுத்தி, நிலங்களை அபகரித்த ஐரோப்பியர்கள், அங்கு இந்திய, இந்தோனேசிய அடிமைகளைக் கொண்டு வந்து குடியேற்றி வேலை வாங்கினார்கள்”

★★★

டச்சு கிழக்கிந்தியக் கம்பெனியில் கூலிப் படையாக சேர்ந்திருந்த வீரர்கள் கூட, இலங்கையில் பெருமளவு நிலங்களுக்கு சொந்தக் காரர்களாக இருந்தனர். அவர்கள் போர்த்துகீசிய காலனியாதிக்கவாதிகளின் நிர்வாக முறையை பின்பற்றினார்கள்.

1660 ஆம் ஆண்டளவில், தென்னிந்தியாவில் பெரும் பஞ்சம் நிலவியது. அங்கிருந்த அடிமைச் சந்தையில் பிள்ளைகளை மிகக் குறைந்த விலைக்கு வாங்க முடிந்தது. பள்ளிக்காட்டில் இருந்த கிழக்கிந்தியக் கம்பனி அலுவலகம் ஊடாக வாங்கப்பட்ட 5000 அடிமைகள் இலங்கைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

அப்போது தான் இறக்குமதியான பட்டுப் புழுக்களை கொண்டு புடவைத் தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டன. அதில் வேலை செய்வதற்கு தென்னிந்திய கைவினைஞர்கள் தேவைப்பட்டனர். ஏனையோர் நெல் வயல்களில் வேலை செய்யப் பணிக்கப்பட்டனர்.

★★★

Radermacher என்ற கிழக்கிந்தியக் கம்பனி (VOC) அலுவலகர் எழுதிய குறிப்பொன்றில் இருந்து:

“1753 ஆம் ஆண்டு கொச்சி துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்த கப்பலில் ஏற்றுவதற்கு 161 அடிமைகள் வாங்கப் பட்டனர். ஒவ்வொரு கப்பல் பணியாளருக்கும் எட்டு அடிமைகளை கொண்டு செல்ல அனுமதிக்கப் பட்டிருந்தது. (தென்னிந்தியாவில் இருந்த) ஐரோப்பிய பிரஜைகளும், “சுதந்திரமான” கிறிஸ்தவ சுதேசிகளும் அடிமைகளை கொண்டு வந்து விற்றனர். அங்கிருந்த கிறிஸ்தவ மதபோதகர்களும் அடிமை வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தனர்”

★★★

அமெரிக்க கண்டங்களுக்கு பிடித்துச் செல்லப் பட்ட ஆப்பிரிக்க அடிமைகள் பற்றி அறியாதவர் யாரும் இல்லை. ஆப்பிரிக்காவிலிருந்து அமெரிக்கா வரையிலான, “அட்லான்டிக் அடிமை வாணிபம்” பற்றி ஏராளமான நூல்கள் எழுதப்பட்டுள்ளன. நிறையத் திரைப்படங்கள், ஆவணப் படங்களும் வெளிவந்துள்ளன. ஆனால், ஆசிய அடிமை வாணிபம் பற்றி எந்தத் தகவலும் இல்லை. எந்த வரலாற்று ஆசிரியரும் அது குறித்து அக்கறை காட்டுவதில்லை. இந்த நிலைமை ஏன் ஏற்பட்டது?

சில முக்கியமான காரணங்களை ஊகிக்க முடிகின்றது:

1. கிழக்கிந்தியக் கம்பெனி தனது “வணிக இரகசியங்கள்” எதையும் வெளியே விடாமல் மிகவும் இரகசியமாக வைத்திருந்தது. இப்போதும் இன்னும் வெளிவராத பல இரகசியங்கள் டென் ஹாக் (தி ஹேக்) ஆவணக் காப்பகத்தில் மறைந்திருக்கின்றன. அங்கு ஆய்வு செய்யும் கல்வியாளர்கள் கூட, ஆசிய அடிமை வாணிபம் பற்றி அக்கறை காட்டவில்லை.

2. அமெரிக்கக் கண்டத்திற்கும் ஐரோப்பாவுக்கும் இடையில் அடிக் கடி கப்பல் போக்குவரத்து நடந்து கொண்டிருந்தது. அமெரிக்காவில் கொள்ளையடிக்கப்பட்ட செல்வம் முழுவதும் ஐரோப்பாவை நோக்கி சென்று கொண்டிருந்தது.

3. ஆசிய அடிமை வாணிபம் ஆசிய காலனிகளுக்கு இடையில் மட்டுமே நடந்து கொண்டிருந்தது. அதாவது, மடகஸ்கார் - இந்தியா - இலங்கை - இந்தோனேசியா, இந்த நாடுகளுக்கு இடையில் தான் அடிமைகள் பரிமாறப்பட்டனர்.

அடிமை வியாபாரம் எல்லா இடங்களிலும் ஒரே மாதிரி நடக்கவில்லை. இந்தியாவில் வங்காள விரிகுடாவை அண்மித்த பகுதிகளில், மன்னர்களுக்கிடையில் நடந்த போர்களில் பிடிபட்ட போர்க் கைதிகள் ஐரோப்பியரால் அடிமைகளாக வாங்கப்பட்டனர். மடகஸ்காரில் உள்நாட்டு மன்னர்கள் விற்ற அடிமைகளை, அரேபிய வணிகர்களும், ஐரோப்பிய வணிகர்களும் வாங்கினார்கள். அந்நாட்டு குடிமக்கள் பல்வேறு காரணங்களால் அடிமைகளானவர்கள். உதாரணத்திற்கு, கடனைத் திருப்பிச் செலுத்த முடியாதவர்கள், அல்லது குற்றங்களுக்காக தண்டிக்கப்பட்டவர்கள்.

(மிகுதி அடுத்த வாரம்)

# அலம்பல் ஆச்சி



○ செல்வி

என்ன பிள்ளையள்.. சுகமா இருக்கிறியளோ? கவனமாத் திரியுங்கோ அப்புவவை. கம்பஸ் எண்டா காணாமற்போற காலம் திரும்பியும் வராமை பாத்துக் கொள்ளுங்கோ.. கம்பஸ் பெடியளுக்கு மேலை வழக்குப் போட்டவையாம் எண்டு அறிஞ்சன். இப்ப விளங்குதேயடாப்பா.. அவங்களை 'மோடு மோடு' எண்டு சொல்லிச் சொல்லி நாங்கள் தான் படு மொக்குகளாய்ப் போனம். எங்கடை மாணவர் அமைப்பிலை இருந்து எத்தினை பெடியள் அடிவேண்டி சாகப்பாத்ததுகள்.. கடத்தப்பட்டுதுகள்.. ஆனா விசாரணைக்கெண்டு ஒருத்தரையும் கூப்பிடேல்லை.. ஏனெண்டா.. எங்கடை பெடியளுக்கு அடிச்சதும் கடத்தினதும் சுட்டதும்.. இனந்தெரியாதவர்கள். ஏற்கனவே சண்டையிலை செத்தும்.. காணாமற் போயும்.. புலம்பெயர்ந்தும்.. கட்டைப்புழுக்கை பென்சில் போல கொஞ்ச ஆக்கள் தான் இருக்கிறம்.. அதையும் அழிக்க நினைக்கிறாங்கள். அடுத்தது கம்பசுக்கை புத்தகோயில் கட்ட வெளிக்கிடுவினை.. இப்ப பரவலா எல்லா இடத்திலையும் அந்தாள் தான் இருக்கிது. கம்பசை மட்டும் விட்டுவைக்கப்போயினமோ? அப்ப என்ன செய்யப்போறம்? இப்பவே யோசியுங்கோ..

சிங்கள ஊடகங்களிலை 'யாப்பாணய விசுவ வித்தியாலய' தான் தலைப்புச் செய்தி.. ஆச்சி போன கிழமை கொழும்புக்கு போனவா தம்பியவை.. பொட்டையும் அழிச்சு சங்கிலியையும் கழத்தவேண்டி வரப்போகுதோ எண்ட அளவுக்கு ஊடகங்களிலை யாப்பாணய தான். ஆனா எங்கடை கோழியள் இரண்டு நாளைக்கு கொக்கரிச்சினை. மூண்டாம் நாள் கபாலிக்கு பின்னாலை போற காவாலியளாக் கிடக்கு.. ஊராடேக்கை ஒத்து ஓடோணும் தான்.. கலைப் படைப்புக்களை பாக்கத் தான் வேணும்.. ஆனா ஊர் பத்தியெரியேக்கை பிடில் வாசிக் கிறதோ? கறுப்பு ஆடியின்ரை ஓலத்துக்கு இன்னும் தீர்வு வரேல்லை பிள்ளையள்.. தமிழன் எண்ட ஒரே காரணத்துக்காக மடிஞ்சுபோனவை எங்களை மன்னிக்கமாட்டினம்.

இது கறுப்பு ஆடி தம்பியவை.. எங்கடை ஆக்களின்ரை ஓலங்கள் தென்னிலங்கையில் ஒலிச்ச மாதம்.. சொந்த நாட்டிலையே நாங்கள் அகதிகளாக சிதறியோடிய மாதம்.. நாங்களும் அவனும் வேறை வேறை இனமெண்டதை அண்டைக்கே அவன் உச்சியிலை அறைஞ்சு சொல்லிப் போட்டான்.. நாங்கள் இண்டைக்கும் நல்லிணக்கம் எண்டு பல்லைக்காட்டிக் கொண்டிருக்கிறம்.. எனக்கு நல்லாத்தெரியுமெடா மோனை.. சென்று வா எண்டு மகனைப் போருக்கு அனுப்பிற பரம்பரையெல்லாம் சங்க காலத்தோடையே செத்துப்போய்ச்செண்டு. உலகத்தையெல்லாம் ஆண்ட இனம் எண்டு வாய்ச்சவடால் விட்டுக் கொண்டிருக்கிறம்.. ஆனா சொந்த நாட்டையே ஆளத்தெரியேல்லை எங்களுக்கு.. அங்காலை வீட்டுக்கொருத்தன் நாட்டைக்காக்க போக இஞ்சாலிப்பக்கத்தாலை வீட்டுக்கொருவன் நாட்டைவிட்டு போன இனம் தானே நாங்கள். இல்லாட்டி ஏன் இந்த நிலை எங்களுக்கு? அண்டைக்கு வேலிக்கு கதியால் அடைக்கேக்கை ஒரு குழி தள்ளிப்போச்செண்டா பொல்லெடுத்து பக்கத்து வீட்டுக்காரனோடை சண்டைக்குப்போனம்.. இண்டைக்கு முழு நாட்டையும் எதிரிக்கு தாரைவார்த்துப்போட்டு நிக்கிறம். எங்கடை நிலத்தை அவன் எங்களுக்கே திருப்பித்தர, வீட்டுத் திட்டத்துக்கு பல்லைக்காட்டுற இனமாகிப்போட்டம் எண்டதை நினைக்க நினைக்க பெத்த வயிறு பத்தி எரியுதெல்லே..

சரியடாப்பா.. இந்தக்கிழமை ஒருக்கா கதிர்காமத்துக்கு போகோணும். அடிகிடி விழுதோ தெரியேல்லை.. கதிரகம இன்னும் எத்தினை நாளைக்கு எங்களுக்கெண்டு தெரியேல்லை.. சிங்களவன் இரவல் புடவையிலை கொய்யகம் வைச்சுக் கொண்டு திரிய, நாங்கள் அவனுக்கு உடுக்க சீலையை குடுத்திட்டு இறுமானத்தோடை நிக்கிறம்..

# காணி பிடுங்கும் சாமி

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எந்த ஒரு இதிகாசத்திலும் கன்னியா வெந் நீரூற்றுக்கும் புத்தருக்கும் சம்பந்தம் இருப்பதாக ஒருவரியேனும் சொல்லப்படவில்லை. இந்த நிலையில் சில வருடங்களுக்கு முன்னர் ஒரு குழு தொல்பொருள் ஆய்வுகளுக்காக கன்னியாவில் வந்திறங்கியது. ஒரு நாள்ளிரவு வாகனத்தில் இனந்தெரியாத பொருள் ஒன்று அங்கு கொண்டுவரப்பட்டது. பின்னர் அந்தப் பொருளை எவரும் காணவில்லை. சில மாதங்களுக்குப் பின்னர் அங்கு மேற்கொள்ளப்பட்ட அகழ்வின் போது ஒரு புத்தர் சிலை புதைந்த நிலையில் மீட்கப்பட்ட தாக அறிவிக்கப்பட்டது. எனவே கன்னியா, புத்தருக்குச் சொந்தமாகத் தொடங்கியது. ஏற்கனவே கதிர்காமத்தை விழுங்கியதைப்போல கன்னியாவையும் புத்தர் விழுங்கினார். இப்போது நயினாதீவையும் விழுங்கத் தயாராகிவிட்டார். அதைவிட அரச மரங்கள் தோறும் உயிர்பெறும் புத்தர் சிலைகள், தமிழர்களின் ஏனைய இடங்களையும் புத்தரின் வழிபாடு நிறைந்த புராதன நகரங்களாக அடையாளப்படுத்தப்போகின்றன.

அரச மரங்கள் சந்திகள் தோறும் படையினரால் நடப்படுவதும், முகாம்களுக்குள் வழிபடப்படும் புத்தர் சிலைகள் பின்னர் சிறிய விகாரைகளாக உருமாறுவதும், விகாரைகளைச் சுற்றியுள்ள காணிகள் புத்தருக்கே சொந்தமாவதும் போர் நிகழத்தொடங்கிய காலத்தில் இருந்து போர் முடிந்த பின்னரும் தொடர்கின்ற கதைதான். இந்த நிலையில் புத்தரின் பெயரில் நிகழ்கின்ற காணிபிடிப்பு வேலையை இன்னும் இலகுவாக்க மைத்திரி - ரணில் கூட்டணி புதிய வியூகத்தை வகுத்துள்ளது. அதுதான் வடக்கு மாகாண மீள்குடியேற்ற செயலணி.



அமைச்சர் ரிசாத் பதியூதீன் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள இந்த செயலணியில் வடக்கு மாகாண சபை புறக்கணிக்கப்பட்டுள்ளது. ஒரு மாகாணசபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதியில் நிகழப்போகும் மீள்குடியேற்றங்கள் தொடர்பில் முடிவெடுக்க வேண்டிய அதிகாரம் மாகாண சபைக்கும் உண்டு. அதனுடைய ஆலோசனைகள் இந்த மீள்குடியேற்ற விவகாரத்தில் முக்கியமானவை. ஏற்கனவே மாகாண சபையின் ஆலோசனையைப் பெறாமல் உருவாக்கப்பட்ட 'பொருத்துவீட்டுத் திட்டம்' பின்னர் பொருத்தமற்றதாகி கைவிடப்பட்டிருந்தது. அதேபோன்ற நிலைமை மீண்டும் நடைபெறாதிருக்க, ஆக்க பூர்வமான முறையில் மீள் குடியேற்றங்கள் நிகழ வடக்கு மாகாண சபையின் ஆலோசனைகளும் ஒத்துழைப்பும் அவசியம். ஆனால் அதையெல்லாம் புறந்தள்ளிவிட்டு தங்களின் கைப்பொம்மைகளை இணைத் தலைவர்களாகக் கொண்ட செயலணியை ரணில் - மைத்திரி கூட்டு அமைத்துள்ளது.

இந்தச் செயலணியின் முக்கிய நோக்கங்களில் வடக்கிலிருந்து வெளியேறிய முஸ்லிம்களின் மீள்குடியேற்றல், வடக்கில் உள்ள பாரம்பரிய சிங்கள கிராமங்களில் வாழ்ந்த சிங்கள மக்களின் மீள்குடியேற்றம் என்பனவே இடம்பெற்றுள்ளன. இதில் முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றம் என்ற விடயம் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியது. ஏனெனில் அவர்களும் வடக்கின் குடிகளாக இருந்தவர்களே. ஆனால் வடமாகாணத்தில் பாரம்பரிய சிங்களக் கிராமங்கள் என்ற பதமும் அங்கு வாழ்ந்த சிங்கள மக்களின் மீள்குடியேற்றம் என்ற விடயமும் சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளன. ஏற்கனவே வலிவடக்கு, வன்னி உள்ளிட்ட பகுதிகளில் போரால் இடம்பெயர்ந்த மக்கள் பலர் இன்னமும் மீள்குடியேற்றப்படாத நிலையில் இத்தகைய பாரம்பரிய சிங்களக் கிராம மீள்குடியேற்றம் என்பது முக்கியமான விடயமாகக் காட்டப்படுவது நியாயமா?


உண்மையில் வடக்கில் பாரம்பரிய சிங்களக் கிராமங்கள் என்ற ஒன்று உண்டா? கந்தரோடையிலும், உருத் திரபுரத்திலும் கண்டுபிடிக்கப்பட்ட தூபிகளின் எச்சங்களை வைத்துக் கொண்டே அரசு இவ்வாறு பாரம்பரிய சிங்களக் கிராமங்கள் இருந்ததாகச் சொல்கிறது போலும். ஆனால் தமிழ் பௌத்தர்களின் இருப்பையே அந்த எச்சங்கள் உறுதிப்படுத்தினவே தவிர ஒரு போதும் சிங்களக் குடியேற்றங்கள் தொன்றுதொட்டு இருந்தன என்பதை சொல்லவே இல்லை. பௌத்தர்கள் எல்லோருமே சிங்களவர்கள் அல்லர். இலங்கையில் பௌத்தம் தோன்றிய காலத்திலேயே தமிழகத்திலும் ஒருசாரார் பௌத்தர்களாக இருந்தார்கள். தமிழகத்துக்கும் ஈழத் தமிழர்களுக்கும் இருந்த தொடர்பு நிலை இங்கும் தமிழ் பௌத்தர்களை உருவாக்கி இருந்தது. அதனை வைத்து சிங்களவர்களின் பாரம்பரிய நிலங்கள் வடக்கில் உள்ளன என்று உரிமை கோருவது சிறுபிள்ளைத்தனமானது.

ஆயினும் புன்னகைத்துக் கொண்டே முதுகில் குத்தும் மைத்திரி - ரணில் கூட்டரசு, வழக்கம் போலவே பாரம்பரிய சிங்களக் கிராமங்கள் என்ற போர்வையில் தமிழர்களின் காணிகளைப் பிடிப்பதற்காக புத்தரைப் பயன்படுத்தக் கூடும். எங்கெல்லாம் புத்தர் சிலைகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் சிங்களவர்களின் பாரம்பரிய நிலங்கள் இருந்தன என்று உரிமை கொண்டாடி எதிர்காலத்தில் பரவலான சிங்களக் குடியேற்றங்கள் வடக்கில் நிகழலாம். இதன் மூலம் வடக்கில் மட்டுமே தமது ஆதிக்கத்தைக் கொண்டுள்ள தமிழர்களின் இனப்பரம்பல் வீதத்தைக் குறைத்து பேரினக்குரலை ஓங்கச் செய்ய முடியும். அகிம்சையையும் அன்பையும் போதித்த புத்தரை கடைசியில் காணிபிடிக்கும் சாமியாக்கிவிட்டார்களே அவரின் பக்தர்கள்.

# பல்கலை மோதல்:

கல்கந்தே தம்மானந்த தேரர்
தமிழில்: லறீனா அப்துல் ஹக்.

# தமிழ் மாணவரில் தவறில்லை



(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ்- சிங்கள மாணவர்களுக்கு இடையிலானபிரச்சினையை இரு தரப்பில் இருந்தும் இனவாதக் கண்ணோட்டத்திலேயே பார்க்கும் வகையிலான சர்ச்சைகள் மேலெழுந்துள்ள நிலையில், கல்கந்தே தம்மானந்த தேரர் மிகவும் நிதானமாகவும், தமிழ் மாணவர்களின் பின்புல நியாயங்களை அலசி ஆராய்ந்தும் மிகுந்த பொறுப்புணர்வுடனும் தார்மீக அறத்துடனும் தமது கருத்துக்களை முன் வைத்துள்ளமை மிகப் போற்றத்தக்கது. அவரது உரையில் முக்கியமான கருத்துக் கள் சிலவற்றை மட்டும் இங்கே தொகுத்தளிக்கின்றேன். - மொழிபெயர்ப்பாளர்.)

ஒரு பல்கலைக்கழகத்தில் அது வரை இருக்காத புதிய அம்சம் ஒன்று உள்வாங்கப்படும்போது/ புகுத்தப்படும்போது, பொதுவானதோர் எதிர்ப்பு எழுவது இயற்கையானது.

தோற்கடிக்கப்பட்ட ஒரு சமூகக் குழுமத்தின் பிரதிநிதிகளாகக் கருதிக் கொள்ளும் ஒரு தரப்பைச் சேர்ந்த இவர்களுக்கு, மீண்டும் மீண்டும் இராணுவத்தை அங்கே காண நேரும் போது, தாம் தொடர்ந்தும் ஓர் ஆதிக்கத்துக்குள் அகப்பட்டு சுதந்திரத்தை இழந்திருப்பதாக உணர நேர்வது தவிர்க்க முடியாததாக இருக்கும். இத்தகையதொரு நிலைமை இலங்கையின் எந்த ஒரு பல்கலைக்கழக மாணவர்களுக்கும், ஏன், யாழ். பல்கலைக்கழகத்துக்குச் சென்றுள்ள சிங்கள மாணவர்களுக்கும் நேராத, யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த தமிழ் மாணவர்கள் மட்டுமே எதிர்கொள்ளும் விசேடமான ஒரு நிலையாகும்.

## புரிந்துணர்வுக்கான முன்னெடுப்பு ஏற்படவில்லை

யுத்தம் முடிந்த பின்னர், அதில் பங்குகொண்ட இரு தரப்பினருக்கும் இடையிலான பரஸ்பர கலாசாரப் புரிந்துணர்வு ஒன்றினைக் கட்டியெழுப்பக் கூடிய காத்திரமான முன்னெடுப்புகள் எவையும் மேற்கொள்ளப்படாத நிலையில், சிங்கள கலாசாரத்துக்குரிய அம்சங்கள் யாழ்ப்பாணத்தில் திடீரென அறிமுகஞ் செய்யப்படும் போது, அவற்றைத் தமக்குச் சொந்தமற்ற, முற்றிலும் அந்நியமானவையாக உணர்ந்து பகிஷ்கரிக்கும் போக்குத் தோன்றவே செய்யும். உதாரணமாக, பௌத்த மக்கள் வசிக்காத பிரதேசங்களில் புத்தர் சிலைகளை நிர்மாணித்தல் போன்ற செயல்களை, ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளின் மற்றொரு வடிவமாகவே யாழ்ப்பாண மக்கள் உணரக்கூடும். இதுவும் யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு மட்டுமே உரிய ஒரு தனித்துவமான சூழ்நிலையாகும்.

## கண்டிய நடனத்துக்கு எதிர்ப்பில்லை

இவ்வளவு காலமும் யாழ். பல்கலைக்கழகத்தில் இருந்துவராத கண்டிய நடனம் ஒன்றை இணைக்க முற்படும் போது மேலெழும் இந்த எதிர்ப்பானது வெறுமனே ஒரு கலை வடிவத்துக்கு எதிரான ஒன்றல்ல என்பதையும், அதற்கு அப்பால் மிக ஆழமான பல்வேறு காரணங்கள் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்துள்ளன என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

மேலே, யாழ். பல்கலைக்கழகத் தமிழ் மாணவர்கள் மட்டும் எதிர்கொள்ளும் இந்த தனித்துவமான பிரச்சினை குறித்து பொதுவாக இலங்கையில் உள்ள சிங்கள சமூகத்தவர்களுக்குத் தெரியாது. இதெல்லாம் ஒரு பொதுவான கலந்துரையாடலுக்கு இதுவரை உட்படவே இல்லை. சிங்கள மாணவர்களுக்கு, தமிழ் மாணவர்களின் உண்மையான நிலைவரம் தெரியாத நிலையில்,அவர்கள் ஏனைய பல்கலைக்கழக மாணவர்களைப் போலவே செயற்பட முனையக்கூடும். அதனால் பிரச்சினைகள் எழக்கூடும்.

## தமிழ் மாணவர்களின் பார்வையில்...

சிங்கள மாணவரைத் தமிழ் மாணவர்கள் எவ்வாறு நோக்கக் கூடும் என்பது மற்றொரு முக்கியமான அம்சமாகும். தமக்கு இவ்வளவு தூரம் துன்பங்கள் நேர்ந்துள்ள நிலையில், புதிதாக வந்துள்ள சிங்கள மாணவர்களின் நடவடிக்கைகளைப் பார்க்கும் போது, தம்முடைய இழப்புகள் குறித்து எந்தவோர் உணர்வுமற்ற ஒரு குழுவினரின் பொறுப்பற்ற நடவடிக்கைகளாகவே தமிழ் மாணவர்களுக்குத் தோன்றக்கூடும்.

அங்கு சென்றுள்ள சிங்கள மாணவர்களுக்குத் தமிழ் மொழியில் தொடர்பாட முடியாத காரணத்தால், ஆங்கிலம் ஊடக மொழியாகத் தொழிற்பட்ட போதிலும், அவர்களின் சமூக ஊடாட்டம் வரையறுக்கப்பட்ட ஒன்றாக மாறுகின்றது. இதனால், அங்கு ஏலவே இருந்துவரும், அம்மண்ணின் மக்களின் எதிராளிகளாக உணரப்படும் சிங்களம் பேசும் இராணுவத் தரப்பினருடனான ஊடாட்டமே சிங்கள மாணவர்களுக்கு அதிகம் வாய்க்கும். இது இயல்பானது.அந்தவகையில், தமிழ் மாணவர்கள் தமது பிரச்சினைகள் குறித்த எந்தவித அக்கறையும் அற்ற, தமது எதிரித் தரப்பினரின் நீட்சியாகவே இச்சிங்கள மாணவரைக் கருதக்கூடும். அதுவும் இப் பிரச்சினையின் ஊடே இருக்கும் மற்றோர் அம்சமாக அமையலாம்.

## இரு தரப்பிலும் அடிப்படை வாதிகள்

இவ் அனைத்துக் காரணங்களுக்கும் அப்பால், தமிழ்த் தரப்பிலும் சிங்களத் தரப்பிலும் அடிப்படைவாதிகளாகத் தீவிரமாகச் செயற்படும் ஒரு சிறு குழுவினரேனும் இருக்கவே செய்வார்கள் என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். மேற்கண்ட மிகச் சிக்கலான பின்புலத்தின் கீழ், அத்தகைய தீவிர உணர்வுள்ள அடிப்படைவாதிகள் மேலெழவும், தூண்டப்படவும் போஷிக்கப்படவுமான சூழமைவு தோன்றக்கூடிய வாய்ப்பு அதிகம் என்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

## நிதானமான நோக்கே தேவை

இவற்றையெல்லாம் உற்று நோக்கும் போது, இப்பிரச்சினையை வெறுமனே மேலெழுந்தவாரியாகப் பார்ப்பதற்குப் பதிலாக மிக நிதானமாகவும் நுணுக்கமாகவும் ஆழமாகவும் நோக்கப்படுவதற்கான தேவைப்பாடுகள் உள்ளன என்பதை நாம் ஆழமாகப் புரிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. எனவே, இப் பிரச்சினையை மிகை எளிமைப்படுத்தி, வெறுமனே தமிழ் - சிங்களப் பிரச்சினையாகக் கட்டமைக்காமல் மிக ஆழமாகவும் நுணுக்கமாகவும் நோக்கி, மிக நிதானமாகவும் கவனமாகவும் கையாளப்பட வேண்டும் என்பதைப் புரிந்துகொள்வோம்.




## மேலோட்டப்பார்வை சரியல்ல

இதுவரை நாம், இப்பிரச்சினையை மிக நுணுக்கமான ஒரு கோணத்தில் பார்த்ததுபோல, மற்றொருவருக்கு வேறொரு கோணத்தில் நுணுக்கமாக இதனை அணுக முடியும். ஆக, இப்படியான நுணுக்கமான ஒரு விடயம் தொடர்பில், சிங்கள மாணவர்களை எந்த நியாயமுமின்றித் தமிழ் மாணவர்கள் தாக்கினார்கள் என்று நாம் ஏன் இதனை மிக மேலோட்டமாகப் பார்க்கின்றோம்? இப்படியான ஒரு பிரச்சினை எழும்போது அதனை மிக நுணுக்கமாகவும் கவனமாகவும் ஆராய்ந்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்ட வேண்டிய தரப்பினர் இதில் தலையிடாமல் ஒதுங்கிக் கொண்டு மௌனம் சாதிக்கின்றனர். இந்நிலையில், பிரச்சினையை ஊதிப் பெருப்பித்து, பிரிவினைவாதத்துக்கு வித்திடும் ஒரு கூட்டத்தின் குரல் தமது தேவைகளுக்கு அமைய மிக உரத்து ஒலித்து, இப்பிரச்சினையை மிகை எளிமைப்படுத்தித் தமது நிகழ்ச்சிநிரல்களுக்கு அமைவாகக் கட்டமைக்க முற்படும்போது, அத்தகைய தீவிரப் போக்குடையோரின் குரலைக் குவிமையப்படுத்தியதாகவே ஊடக வெளிச்சமும் குவிகிறது.

கடந்த முப்பது வருட கால யுத்தம் நிகழ்வதற்கான பின்புலமும் இவ்வாறாகவே தோற்றம் பெற்று வளர்ந்தது என்பது மனங்கொள்ளப்படல் வேண்டும். மிகச் சிக்கலானதும் நுணுக்கமானதுமான பின்புலமொன்றில் நிகழும் சிறு சிறு சம்பவங்களை மிகை எளிமைப்படுத்தி, அதனை இரண்டு இனங்களுக்கு இடையிலான பிரச்சினையாக மட்டுமே கட்டமைத்து அதனூடாக இரண்டு தேசிய இனங்களையுமே பிரிவினைக்கு உள்ளாக்கியதன் விளைவே இதுவாகும்.

## மௌனம் வேண்டாம்

ஆகவே, இதுபோன்ற ஒரு பிரச்சினையை மிக நிதானமாகக் கையாள்வதன் மூலம் இனங்களிடையே பிரிவினையைத் தோற்றுவிக்காமல் தீர்த்துக் கொள்ள முடியும். கடந்தகால யுத்தம் ஏற்பட்டமைக்கு, பொறுப்பான முறையில் பிரச்சினையைக் கையாளக் கூடிய தரப்பினர் அதிலிருந்து தம்மை விடுவித்துக்கொண்டு ஒதுங்கியதே காரணம். ஆகவே, இப் பிரச்சினையிலும் உரிய பொறுப்புதாரிகள் மௌனம் சாதிக்காமல் தம் பொறுப்பினை உணர்ந்து முன்வந்து மிக நிதானமாகவும் பொறுப்புணர்வுடனும் செயற்பட்டு இதனைத் தீர்க்க உதவுமாறு நான் மன்றாடிக் கேட்டுக் கொள்கின்றேன்.

அதன் மூலம் மட்டுமே இனியும் ஒரு பிரிவினைவாதம் தோன்றாமல் தடுக்க முடியும். இலங்கையில் உள்ள சிங்கள, தமிழ் உள்ளிட்ட அனைத்துச் சமூகங்களில் இருந்தும் பொறுப்புணர்வுடன் செயலாற்றக் கூடிய புத்திஜீவிகள் தரப்பினரை இப் பிரச்சினையைத் தீர்க்க பொறுப்புணர்வோடு முன்வருமாறு வேண்டுகின்றேன்.

# கேசரி செய்யத் தயாரா?

பழகலாம்
சமைக்கலாம்
உண்ணலாம்

ஏதேனும் விசேஷ தினங்களில் கடையில் வாங்கி கொடுக்கும் இனிப்புப் பண்டங்களை விட நம் கையாலேயே தயார் செய்து அன்பு கலந்து பரிமாறும் பண்டங்களிற்குத்தான் சுவை அதிகம். கேசரியை கடைகளில் வாங்கி உண்டிருப்போம் அதை நம் கையாலேயே இலகுவாகத் தயாரிப்பது எவ்வாறு என்பதை ஒரு கை பார்த்து விடுவோம்.





## தேவையான பொருட்கள்:

- ★ ரவை - 1 கப்
- ★ தண்ணீர் - 2 1/2 கப்
- ★ சீனி - 1 3/4 கப்
- ★ நெய் - 3/4 கப்
- ★ கேசரி கலர்- சிறிதளவு
- ★ ஏலப்பொடி- சிறிதளவு
- ★ முந்திரிப் பருப்பு- ஒரு கைப்பிடி

## செய்முறை:

★ 2 தேக்கரண்டி நெய் விட்டு முந்திரியை நன்கு பொரித்து தனியாக எடுத்துக் கொள்ளவும்.

★ மீண்டும் 2 தேக்கரண்டி நெய் விட்டு ரவை வாசனை போகும் வரை சிவக்க வறுக்கவும்.

★ இரண்டரை கப் தண்ணீரைச் சேர்த்து அடுப்பை நிதானமாக வைத்து நன்கு வேகவைக்கவும்.

★ ரவை நன்றாக வெந்த பின் சீனியை இட்டுக் கிளறவும்.

★ சீனியை இட்டதும் இளகிக் கொண்டு, கிளறக் கிளறக் கெட்டியாகும். அதன் பிறகு, மீதியுள்ள நெய்யையும் விட்டு, கேசரிப் பவுடரைப் போட்டுக் கிளறி இறக்கி, ஏலக்காய்ப் பொடியை சேர்க்கவும். பொரித்து வைத்திருக்கும் முந்திரியைக் கலந்து கொள்ளவும். கேசரியை ஒரு நெய் தடவிய தட்டில் கொட்டி, மேலே முந்திரி தூவி கொள்ளவும்.

★ விருந்தினரை அசத்தும் பண்டிகை காலங்களில் செய்யக் கூடிய செய்வதற்கு எளிமையான, அருமையான இனிப்பு வகை கேசரி. இப்போது நீங்களும் அசத்தத் தயாரா?

# கம்பியிடப்பட்ட வாழ்வு

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடாத்தில்லாமல் வேறு எப்படியாக இருக்க முடியும்?

இந்த அடாத்தைப்பற்றி எத்தனையோ பேருக்கு கடிதம் எழுதியிருந்த போதும் எத்தனையோ பேரைச் சந்தித்திருந்தும் எதுவுமே ஆகவில்லை. பதிலாக இன்னுமின்னும் முகாம் பெருத்துக் கொண்டேபோகிறது.

**மஹிந்தவுக்கே அதிகாரமில்லை**

இப்படித்தான் முன்பும் ஒரு நாள் தியாகண்ணை கேட்டார்.

"ஜனாதிபதியின்ரை அதிகாரத்தைக் குறைக்க வேணும் குறைக்க வேணும் எண்டு கத்திறாங்கள். அந்தாளுக் குத்தான் (மகிந்த ராஜபக்ஸவுக்கு) அதிகாரமே இல்லையே...! என்ரை காணிக்குள்ள இருக்கிற ஆமிக்காரரை வெளியில போக்காட்டிறதுக்கே ஏலாமல் இருக்கிற ஆளைப்போய் வறுத்தெடுக்கிறாங்கள்..." என்று.

இதைக் கேட்ட எங்களுக்குச் சிரிப்புத் தான் வந்தது. இலங்கையின் நிறைவேற்று அதிகார பலமுள்ள ஜனாதிபதி முறைமையையும் சிங்கள மேலாதிக்கவாதத்தையும் இதைவிடக் கேலியாக வியாக்கியானப் படுத்துவ தற்கு எந்தப் பெரிய அரசியல் ஆய்வா ளராலும் முடியாது என்று பட்டது.

ஆனால், தியாகண்ணையின் இந்த வார்த்தைகளுக்குப்பின்னால் இருந்த வேதனையும் கோபமும் சாதாரண மானதல்ல. பெருங் கொதிப்பு அது. உள்ளுறைந்து வெடித்த உண்மை அது.

**கொதிக்கும் காணி உறுதிகள்**

இப்படித்தான் பலாலியிலும் கிளிநொச்சியிலும் கேப்பாபிலவிலும் மயிலிட்டியிலும் கட்டுவனி லும் காணிக்கான உறுதிகளை வைத்துக் கொண்டு பலரும் கொதிப்போடிருக்கிறார்கள். உண்மைக்கும் நீதிக்கும் விதியில்லை என்று கவலையோடிருக்கிறார்கள்.

காணிகளோ படைகளின் காலில். காணி உறுதிகளோ சனங்களின் கையில். இதுதான் நிலைமை. இப்படித் தானிருக்கிறது நல்லாட்சியும் கூட.

இதில் மகிந்த ஆண்டாலென்ன மைத்திரி ஆண்டாலென்ன? நமக்கொரு நன்மையுமில்லை....

இந்தக் காணிகளை எப்பிடி மீட்கிறது? இதுதான் இப்ப பிரச்சினையே! நீதி மன்றங்களை நாடினால், அது தேசிய பாதுகாப்பு விசயம் என்று ஒதுக்கி விடுகின்றன.

மனித உரிமைகள் அமைப்புகளை நாடினால், "கடிதங்களை எழுதித் தாருங்கள். காணிக்கான சான்றாதாரங் களை இணையுங்கள். நாங்கள் உரிய இடங்களுக்கு இதைப்பற்றித் தெரியப் படுத்துகிறோம். சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளிடம் அறிக்கை சமர்ப்பிக்கிறோம்" என்று சொல்லி, எல்லாவற்றையும் வாங்கிக் கொண்டு அனுப்பிவிடுகிறார்கள் மனித உரிமைகள் அமைப்பினர்.

அரசியல்வாதிகளை நாடினால் "இதற்காக முயற்சிக்கிறோம்" என்று சொல்லிக் கடிதங்களை வாங்கிக் கொண்டு வழியனுப்பி வைக்கிறார்கள்.

**சொல்கிறார்கள். செய்கிறார்களா?**

தியாகண்ணையைப் போன்றவர் களால் இதற்கப்பால் என்ன செய்ய முடியும்?

இலங்கையில் சட்டமும் நீதியும் நல்ல முறையில் நடக்கிறது என்று அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த அமெரிக்கப் பிரதானியான நிஷா பிஷ்வால் தொடக்கம் வெளிநாட்டுத் தலைவர்கள், தூதுவர்கள் எல்லோரும் சொல்கிறார்கள். சம்பந்தனும் இதை உறுதிப்படுத்திப் போனவாரம் ஒரு பேட்டியில் குறிப்பிட்டிருந்தார். நாட்டிலே சட்டமும் நீதியும் நன்றாக இருப்பதில் மகிழ்ச்சியடைகிறோம் என்று ஜனாதிபதியும் பெருமைப் பட்டிருந்தார். ஐ.நாவில் கூட இலங்கையின் நீதித்துறையைப் பற்றி நற்சான்றிதழ் வழங்கப்பட்ட மாதிரிப் பேசியிருக்கிறார்கள்.

அப்படியென்றால், இன்னும் எங்களுக்கு உரித்தான வீடுகளுக்குச் சனங்கள் போக முடியாதிருப்பதை என்னவென்று சொல்வது? தங்கள் காணிகளை ஆள முடியாமல் அவர்களைத் தடுக்கும் சட்டம் எது? அதற்கான நீதி என்ன? இதைப்போய் எங்கே எடுத்துரைப்பது? யாரைக் கேள்வி கேட்பது?

இதுதான் தியாகண்ணையின் கேள்வி.

★★★

தியாகண்ணை இதைப் பற்றியெல் லாம் யோசித்திருக்கிறார்.

"போனால் போகுது, என்ன பாடுபட்டாவது தான் ஒரு தடவை ஜெனிவாவுக்குப் போய் இதைப்பற்றி யெல்லாம் பேசினால் என்ன" என்று.

"இலங்கைக்கு வாற வெளிநாட்டுத் தலைவர்களையும் தூதுவர்களையும் சந்திச்சு நாலு கேள்வி கேட்க வேணும்" என்று.

"சட்டமும் நீதியும் நல்ல மாதிரி நடக்கிறது என்று சொல்லும் ஜனாதிபதியிடம் ஒரு நாள் இதுக்கொரு விளக்கம் கேட்கவேணும்" என்று.

"நல்லாட்சியைப் பற்றிப் பக்கம் பக்கமாக பாராட்டுப் பத்திரம் வாசிக்கிறவர்களிடம் இந்த அத்து மீறலையும் அடாத்தையும் பற்றி என்ன சொல்லுறீங்கள் என்று அறிய வேணும்" என்று.

இலங்கையில் ஜனநாயகம் மேம்பட்டு வருகிறது. ஒப்பீட்டளவில் சிவில் வெளி அதிகரித்து வருகிறது. மைத்திரியின் சிரிப்பில் கள்ளம் கபடமில்லை. நல்லாட்சி நியாயமான நல்ல விசயங்களைச் செய்யும். ரணில் புதிதாகச் சிந்திக்கிறார். நல்லிணக்க முயற்சிகள் வெற்றியளிக்கும் என்று தெரிகிறது என்று சொல்வதெல்லாம் சத்தியமாக உண்மைதான்...?

மெய்யாகவே இதை நாமெல்லாம் நம்புவோமாக.

இறுதியாக ஒரு கேள்வி. இதுவும் தியாகண்ணை ஒரு நாள் கேட்டதுதான்

"இஞ்ச (தமிழ்ப் பகுதிகளுக்கு) வாற சிங்கள ஆட்கள் இந்த முகாம் களைப்பாத்து என்ன நினைப் பினம்? ஊருக்குள்ள ஏன் இப்பிடி படை முகாம்கள் இருக்கு? இந்தக் காணிகள் எல்லாம் ஆருக்குச் சொந்தமானவை? இதை ஏன் இன்னும் சனங்களின்ரை கையில குடுக்கவில்லை? இந்தக் காணிகளில இருந்த சனங்கள் எல்லாம் இப்ப எங்க இருக்கினம்? அவை என்ன செய்து கொண்டிருக்கினம்?..." என்று.

நிச்சயமாக ஒரு நாளைக்கு யாரோ ஒரு சிங்களப் பொது மகனிடமோ பொது மகளிடமோ தியாகண்ணை இதைக் கேட்கத்தான் போறார். அவர்கள் சொல்லப் போகும் பதிலில் தான் இருக்கிறது எல்லாமே.



● சோஷலிச இளைஞர் சங்கத்தின் சகோதரத்துவ தினம் ஜூலை - 07 கொண்டாடப்பட்டது.




● கடந்த வருடம் அதிகமாக குடித்த முதல் மூன்று மாவட்டங்களுமே உலகின் மூத்த குடியான தமிழ் குடியென்பதை பெருமையுடன் நினைவு கூருகிறோம்.



● 16 வருடங்கள் உண்ணாவிரத போராட்டத்தை முடித்து இரோம் சர்மிளா மணிப்பூர் அரசியலில் குதித்தார்



● ஒகஸ்ட் - 01 முதல் 07 வரை சர்வதேச கோமாளிகள் வாரம்







● ஒகஸ்ட் - 01 இல் புகழ்பெற்ற தனது டயரியின் கடைசி குறிப்பை 1944 இல் அன்னி பிராங் எழுதினார்.




● விரைவில் வெளிவரவிருக்கும் ஈழத்து திரைப்படத்தின் முன்னோட்டம் கடந்த வாரம் வெளிவந்து பலத்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருக்கிறது.



● அமெரிக்க அதிபராகக் கடைசிப் பிறந்த நாளை ஒகஸ்ட் - 04 இல் கொண்டாடப்போகிறார் ஒபாமா



● ஒகஸ்ட் - 06 இல் ஹிரோஷிமா மீது 'சின்னப்பெடியன்' என்ற அணுகுண்டு அமெரிக்காவினால் போடப்பட்டது.

# வாரப் பலன்

### மேடம்
மனையில் மகிழ்ச்சி. பயிர் பலிதம். பயண ஏற்பாடுகள். உறவால் சுகம். சோம்பல் மிகுதி. எதிர்பால் நட்பால் சுகம். கனவு பலிதம்.

### மிதுனம்
செய் தொழில் சிறப்பு. பெண்களால் மேன்மை. நண்பர்கள் சேருவர். பிறதேச சஞ்சாரம். கல்வியில் மேன்மை. ஆடை, அணிகலன் சேர்க்கை.

### சிம்மம்
கேளிக்கையில் நாட்டம். காரியச்சிறப்பு. கருத்து மோதல். கடன் தீரும். தூரதேச உறவால் நன்மை. அசௌகரியம். தர்மசெலவு. உணவுப்பிரியம்.

### துலாம்
பண்பாளனென போற்றுதல். பாவச் சேர்க்கை. தனித்து விடப்படல். தாவர நன்மை. உறவால் துன்பம். உண்மையால் உயர்ச்சி. மனச்சோர்வு. உறக்கமின்மை.

### தனுசு
மனையில் சிறப்பு. ஒழுக்க குறைவு, நிலை தடுமாற்றம். வருவாய்க்கேற்ற செலவு. வணிகம் சமநிலை. ஜலதோஷம். இயந்திரக்கேடு. வாக்கு வசீகரம்.

### கும்பம்
தடை நீக்கம். கல்வி தாமதம். ஆலய தரிசனம். சௌக்கியச் செலவு. பயணத்தால் வெற்றி. பொருட்கொள்முதல் செலவினம் அதிகரிப்பு. தானிய சேர்க்கை.

### ரிஷபம்
கைக்கடங்கா செலவினம். வீண் கற்பனை. காரியக்கேடு. மனைவி மக்கள் மேன்மை. சமூகத்தில் சிறப்பு. வேலையாட்களால் லாபம்.

### கடகம்
கலை மேன்மை. ஆன்மிக யாத்திரை. காரிய தாமதம். கள்வர் பயம். கொள்முதல் தாமதம். கோபம் அதிகம். வீண் விரயம். வாகன மேன்மை.

### கன்னி
தான தர்ம நாட்டம். துஷ்டர்கள் உறவு. கொடுக்கல் வாங்கல் பிணக்கு. கடன் மிகுதி. பணமுடை. தெய்வ அனுக்கிரகம். தேடலில் சிறப்பு. மக்களால் மாண்பு.

### விருச்சிகம்
மனவருத்தம். பிறதேச செய்தி மேன்மை. காரியம் தடைப்படல். கல்வி மேன்மை. காரிய தாமதம். தாழ்ந்த நிலை. பணபலம். கடன் தொல்லை. வீண் குழப்பம்.

### மகரம்
தரக்குறைவு. தானிய சிறப்பு. மறைமுக எதிரிகள் தோற்றம். தூய்மை வேட்கை. துன்பம் நீங்கும். மான நஷ்டம். தெய்வ வழிபாடு நன்மை. முயற்சியில் வெற்றி.

### மீனம்
மனையில் மாட்சி. மக்கள் இன்புறுவர். பொருட் சேதம். போக மிகுதி. ஏக்கமிகுதி. மருந்து செலவு. எண்ணிய காரிய பலிதம். நடைச் சிறப்பு. நாவரட்சி. தூக்கமின்மை.

# சீரிய மாணவர்களை செதுக்கும் சிந்தனைக் கூடம்

## கிளிநொச்சி பாரதி வித்தியாலயம்



**1989.02.17** இல் கிளிநொச்சிகல்வி வலயத்தின் கரைச்சிக் கோட்டத்தில் கிளி/பாரதி வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டது. 1992 இல் 1-5 வரையான வகுப்புக்கள் இயங்கி வந்தன. 1993 இல் 1-6 வரை உயர்த்தப்பட்டது.

1998 ஆம் ஆண்டு முதல் தடவையாக க.பொ.த சாதாரண தரம் பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றினர். 2012.04.01 இல் 1F பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டது. பின்னர் கணித-விஞ்ஞான பிரிவு தொடக் கப்பட்டு 2014.06.19 அன்று 1AB பாடசாலையாகத் தரமுயர்த்தப் பட்டது. இப் பாடசாலையில் 650 மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். தரம் 6-13 வரையான வகுப்புக்கள் உள்ளன. இதுவொரு தாய்ப் பாடசாலையாகக் காணப்படுகிறது.

இதற்கான ஊட்டப் பாடசாலை களாக கிளி/விவேகானந்தா வித்தியாலயம், கிளி/அன்னை சாரதா ஆரம்ப வித்தியாலயம், கிளி/ இராமகிருஷ்ணா ஆரம்ப வித்தியாலயம், கிளி/சிவபாத கலையக வித்தியாலயம் ஆகியன அமைந்துள் ளன. இப் பாடசாலை பாரதிபுரம், மலையாளபுரம், கிருஷ்ணபுரம், விவேகானந்த நகர், அம்பாள் குளம், அறிவியல் நகர் போன்ற கிராமங்களில் வாழும் பிள்ளைகளின் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றது. யுத்தத்தின் பின்னர் மெல்ல மெல்ல சமூக மட்டம் வளர்ந்து வரும் பிரதேசத்தில், இப்பாடசாலை எதிர்காலத்தில் குறித்த பிரதேசத்தை கட்டியெழுப்புவதற்கான சிந்தனை வளம் கொண்ட மாணவ சமூகத்தை வளர்த்து வருகின்றது.



### சாதனைகள்

“இவ்வளவு சவால்களுக்கு மத்தியில் கல்வியிலும் விளையாட்டிலும் கலைத்திறன் போட்டிகளிலும் எமது மாணவர்கள் பல சாதனைகளைப் படைத்துள்ளனர். 2015 இல் மாகாண மட்டக் கரப்பந்தாட்டப் போட்டியில் 3 ஆம் இடத்தையும் 2016 இல் அதே அணியினர் 19 வயதின் கீழ் பிரிவில் 1 ஆம் இடத்தையும் பெற்றுள்ளனர் 2016 இல் 15 வயதின் கீழ் பிரிவில் பெண்கள் கரப்பந்தாட்ட வலைப்பந்தாட்ட போட்டிகளில் 2 ஆம் இடத்தைப் பெற்றுள்ளனர். 2016 இல் மாகாணமட்டப் போட்டியில் ஆ.அன்ரன் சரோன் 13 வயதின் கீழ் பிரிவில் நீளம் பாய்தலில் 1 ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டார். ஆ.மேரிதயந்தினி மாகாண மட்டத்தில் நீளம் பாய்தலில் 2 ஆம் இடத்தையும், முப்பாய்ச்சலில் 4 ஆம் இடத்தையும், 100 மீற்றர் சட்டவேலிப் பாய்ச்சலில் 2 ஆம் இடத்தையும் பெற்றுக்கொண்டார். 2015 இல் மாகாண மட்டத்தில் மா.நிசாந்தன் என்ற மாணவன் 17 வயது பிரிவில் உயரம் பாய்தலில் 4 ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டார். இவ்வாறு பல மாணவர்கள் சாதனை வீரர்களாக உள்ளனர்.

கல்வியில் 2015 இல் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் ஜனார்த்தனி என்ற மாணவி.தனியார் கல்வி நிலையத்திற்குச் செல்லாமல் பாடசாலையில் மட்டுமே கல்வி கற்று 8A, B பெறுபேற்றைப் பெற்றுக்கொண்டார். தென்மோடிக் கூத்தானது மாகாண மட்டத்தில் 2014 இல் 2 ஆம் இடத்தையும் 2015 இல் 3 ஆம் இடத்தையும் பெற்றுக்கொண்டது. அத்துடன் வில்லுப்பாட்டு, கிராமிய நடனம், விவாதம், பேச்சு, சித்திரம் போன்ற போட்டிகளில் கோட்ட, வலய மட்டங்களில் வெற்றியீட்டியுள்ளது. இவ்வாறு கல்வியிலும் ஏனைய இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் வெற்றி பெற்று மிளிர்வதற்கு ஆசிரியர்களின் அயராத உழைப்பும் மாணவரது ஆர்வமும் பெற்றோர்களின் ஒத்துழைப்புமே காரணம்” என அதிபர் நா.கணேஸ்வரநாதன் கூறுகிறார்.

### சவால்கள்

பாடசாலை நகரப் பகுதியை அண்மித்திருந்த போதும் பாடசாலைக்கான போக்குவரத்து இன்மையால் மிக நீண்ட தூரத்திலிருந்து மாணவர்கள் நடந்து வருகிறார்கள். இதனால் அம் மாணவர்கள் கற்றலில் பெரும் சிரமத்துக் குள்ளாகின்றனர். பெற்றோரை இழந்த மாணவர்கள் அதிகம் காணப்படுவதால் வறுமை அவர்களின் கற்றலுக்குச் சவாலாகின்றது. இந்தப் பாடசாலையில் சில பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறையாக உள்ளதால் உரிய காலத்தில் உரிய கல்வியைப் பெற முடியாதுள்ளது. பாடசாலைக்கான பிரதான மண்டபம் இன்மையால் பாடசாலையில் வளர்க்கப்பட வேண்டிய பிரார்த்தனைகள், கூட்டங்கள், இணைப்பாட விதானச் செயற்பாடுகளை வளர்க்க முடியாதுள்ளது. அத்துடன் காணி பற்றாக்குறையாக் காணப்படுவதால் விளையாட்டு மைதானத் தில் விளையாட்டின் மூலம் வளர்க்க வேண்டிய திறன்களை வளர்க்க முடியா துள்ளது.

**பாடசாலையை வலுவூட்ட பொறுப்பான இடத்தில் இருப்பவர்கள் இதன் பொருட்டு கவனத்தைச் செலுத்த வேண்டும்.**



சிறுவர் தொடர்

செங்கை ஆழியான்

07



# பூதத்தீவுப்புதிர்கள்

“என்ன சேர்?” என்று வசந்தன் கேட்டபடி முன் வந்தான்.

“அவனைத் தொட்டுப்பார். கல் சிலை போல் இருக்கிறான்”

வசந்தன் வேடனைத்தொட்டுப்பார்த்தான். அசைத்துப் பார்த்தான்.

“சந்தேகமே இல்லை சேர், இது சிலை” என்றான் வசந்தன்.

“சாய்.. என்ன தத்ரூபமாகச் செய்திருக்கிறது” என்று மூர்த்தி வியந்து போனார். மாணவர் கள் அனைவரும் வியப்புடன் வந்து வேடனைத் தொட்டுப் பார்த்தனர்.

“நாங்கள் உயிருள்ள மனிதன் என்று எண்ணி ஏமாந்துவிட்டோம்” என்றாள் சசி.

“அதுதானே இந்தக் காலத்தில் வேடனா?” என்று சிரித்தாள் மாலா.

“சரி வாருங்கள்” என்றபடி மூர்த்தி முன்னால் நடந்தார். பாதையில் கீழிருந்த கோட்டைக் கடக்க வலது காலை எடுத்த போது ஒரு குரல் எழுந்தது,

“நில் அப்படியே!”

மூர்த்தி ஆசிரியர் அப்படியே காலைப் பின்னால் இழுத்துக்கொண்டார்.

“யார் பேசியது?”

எல்லோரும் பயத்துடன் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர். வசந்தன் மட்டும் கற்சிலையாக இருந்த வேடனின் வாய் உதடுகள் அசைந்ததைக் கண்டு கொண்டான்.அவனைப் பயமும் வியப்பும் ஆட்கொண்டன.

“பேசியது இந்தச் சிலை சேர்” என்றான் வசந்தன்.

மூர்த்தி பயத்துடன் சிலையைப்பார்த்தார்.

“ஐயா நீரா பேசினீர்? நீரா தடுத்தீர்?”

“ஆமாம்” என்றான் வேடன். அவன் உடலில் அசைவில்லை, உதடுகள் மட்டும் அசைந்தன.

“நாங்கள் அங்கால செல்ல முடியாதா?”

மாணவர்கள் பயத்துடன் ஒருத்தருடன் ஒருத்தர் ஒட்டிக்கொண்டனர், வசந்தன் வெகுதுணிச்சலாக நின்றிருந்தான்.

“செல்லலாம். ஆனால் அதற்குமுன் நான் கேட்கின்ற கேள்வி ஒன்றிற்கு சரியான பதில் தரவேண்டும். முதலில் அக்கோட்டை கடக்க முயன்றவர்தான் பதில் தரவேண்டும்.”

“சரியான பதில் தராவிட்டால்?” என்று பயத்துடன் மூர்த்தி ஆசிரியர் கேட்டார்.

வேடன் கட கடவெனெச் சிரித்தான். அவன் சிரிப்பின் ஒலி அப்பிரதேசம் எங்கும் எதிரொலித்தது.

“சரியான பதில் தராவிட்டால் அவர் என்னிடத்தில் கற்சிலையாக அமர்ந்து விட வேண்டும். அவராகவே சிலையாக மாறி அமர்ந்து விடுவார். ஒரு நாளைக்கு ஒரு மணிநேரம் சுய உருவம் வரும். அந்த வேளை வேட்டையாடிப் பசியாறிவிட்டு மீண்டும் இவ்விடத்தில் அமர்ந்து விட வேண்டியது தான்”

“ஐயோ நான் மாட்டேன். வாருங்கோ நாங்கள் எல்லோரும் திரும்பிப் போய்விடுவோம்”, என்றபடி ஆசிரியர் திரும்பியோடப் பார்த்தார். வேடனின் குரல் பலமாக ஒலித்தது.

“ஓடிப் பயனில்லை மூர்த்தி! இனி இங்கிருந்து தப்ப முடியாது. இது பூதத்தீவு. புதிர்கள் நிறைந்தது. புத்திசாலிகளே இங்கு பிழைக்க முடியும். நில் என் வினாவிற்கு பதில் கூறு, பத்து வினாடிகள் தரப்படும்”

எல்லோரினதும் உடல்கள் நடுங்கின. வசந்தன் அவதானமாகப் பார்த்தான். செவிகளைக் கூர்மை யாக்கிக் கொண்டான்.

(புதிர்கள் தொடரும்...)

# இளவரசனின் பூனைகள்



ஒரு நாட்டில் ஒரு இளவரசன் இருந்தான். அவன் சிறந்த போர் வீரன். அவனுடைய வாள் வீச்சிற்கு அந்த நாடே ஈடு கொடுக்க முடியாது. அந்த அளவிற்குச் சிறந்த வீரன்.

அவன் ஒருமுறை அரண்மனையில் வாள் வீசி பயிற்சி செய்துக் கொண்டிருக்கையில், ஒரு எலி குறுக்கே ஓடியது. உடனே அதன் மீது வாளை வீசினான். அந்த எலி லாவகமாக தப்பித்துச் சென்றது. பிறகு மீண்டும் அதனைத் துரத்தி வாளை வீசினான், மீண்டும் தப்பித்து வளைக்குள் புகுந்துகொண்டது. உடனே மனம் உடைந்து போனான்.

அப்போது வந்த அரசர் “ஏன் சோகமாக இருக்கிறாய்?” என கேட்க “இந்த நாடே எனது வாள் வீசும் திறமைக்கு ஈடு கொடுக்க முடியாத போது, இந்த சாதாரண எலியை என்னால் கொல்ல முடியவில்லையே!” என விவரித்தான் இளவரசன்.

மன்னர் சிரித்துவிட்டு “எலியைக் கொல்ல வாள் பயிற்சி எதற்கு? அரண்மனைப் பூனையைக் கொண்டு வந்தாலே போதுமே!” என்றார். உடனே அரண்மனை பூனை வரவழைக்கப்பட்டது.

அந்தப் பூனையும் எலியை வேட்டையாட முயன்றது. ஆனாலும் அந்த எலி எளிதாக அதனிடம் இருந்து தப்பித்து, தப்பித்துச் சென்றது. மீண்டும் இளவரசருடன் அரசரும் சோகமானார். அப்போது மந்திரி வந்தார். “என்ன அரசே.. நீங்களும் இளவரசரும் சோகமாக இருக்கிறீர்கள்?” என்றார்.

அதற்கு அரசர் நடந்ததை கூறினார். “நம் நாட்டு பூனைகள் எதற்கு லாயக்கு...? ஜப்பான், பாரசீகம் போன்ற நாடுகளில் உள்ள பூனைகள் புலி உயரம் உள்ளன. எனவே அங்கிருந்து வரவழைப்போம்” என்றார் மந்திரி. அதேபோல் அந்த நாடுகளில் இருந்து பூனைகள் வரவழைக்கப்பட்டன.

ஆனால் அவற்றிடமிருந்தும் அந்த எலி சாமர்த்தியமாகத் தப்பித்துச் சென்று வளைக்குள் புகுந்தது. எலிக்கு இவ்வளவு திறமையா! என அனைவரும் வியந்து கொண்டிருக்கையில், அங்கே இருந்த அரண்மனைக் காவலன் “இளவரசே! இந்த எலிக்குப் போய் ஜப்பான், பாரசீகப் பூனையெல்லாம் எதுக்கு? எங்க வீட்டுப் பூனையே போதும்” என்றான். மன்னருக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. “என்ன.. அரண்மனையில் வளர்ந்து வரும் பூனையால் முடியாதது சாதாரண பூனையால் முடியுமா?” என்றார்.

உடனே இளவரசர் மறித்து “சரி...எடுத்து வா உனது பூனையை” என்றார். வீட்டிற்குச் சென்று தனது பூனையைக் கொண்டு வந்தான் காவலன். அந்தப் பூனை அந்த எலியை ஒரே தாவலில் ‘லபக்’ என்று கவ்விச்சென்றது. இதனைப் பார்த்த இளவரசருக்குப் பெருத்த ஆச்சரியம். “என்ன இது அதியசம்! ஜப்பான், பாரசீக, அரண்மனையில் வளர்ந்த பூனைகளிடம் இல்லாத திறமை எப்படி இந்தச் சாதாரண பூனைக்கு ஏற்பட்டது? எப்படி சாத்தியம்? என்ன பயிற்சி கொடுத்துப் பூனையை வளர்க்கிறீர்கள்?” என்று வியந்த வாறே கேள்விகளை கேட்க தொடங்கினார்.

அதற்குக் காவலாளி “பெரிதாக என் பூனைக்குத் திறமையோ, பயிற்சிகளோ எதுவும் இல்லை இளவரசே... என் பூனைக்கு ரொம்பப் பசி அவ்வளவு தான்” என்றான்.

உடனே இளவரசருக்கு ‘சுரீர்’ என்றது. அரண் மனைக்குள் பூனைகள் நன்கு தின்று கொழுத்திருப் பதால் அவற்றுக்கு பசி என்பதே என்னவென்று தெரிய வாய்ப்பில்லை, எனவே அவற்றால் எலியை எப்படி பிடிக்கமுடியும்?

ஆக எந்த ஒரு வேலையையும் வெற்றிகரமாகச் செய்து முடிக்க வேண்டுமென்றால், முதலில் அதனைப் பற்றிய பசி அல்லது தேவை இருக்க வேண்டும். அப்போதுதான் அந்தக் காரியத்தை கச்சிதமாகச் செய்து முடிக்க முடியும்.

## குட்டீஸ் பரிசுப் பொதி – 03

**ஒரு தந்தைக்கு நான்கு பெண் பிள்ளைகள் இருந்தனர். நான்கு மகள்களுக்கும் ஒவ்வொரு ஆண் சகோதரர் இருந்தார். எனின் அவருக்கு எத்தனை பிள்ளைகள்?**

விடை அனுப்ப வேண்டிய முகவரி:

**குட்டீஸ் பரிசுப்பொதி - 03**
புதுவிதி, 107, இராசவீதி,
கோப்பாய் திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

**முடிவுத்திகதி: 10.08.2016**

★ தரம் 11 க்கு உட்பட்ட மாணவர்கள் மட்டுமே பங்குபற்றலாம்.

★ குட்டீஸ் பரிசுப்பொதி - 1 முடிவுகள் 18 ஆம் பக்கத்தில்




# பேனா பேசுகிறேன்



செல்வங்களே! பேனா பேசுகிறேன். எப்போதும் உங்களுக்கு பிரியமான எழுது கருவியாக இருப்பதில் எனக்கும் பெருமைதான். சிறுவர்கள் முதல் பெரியவர் வரை பயன்படுத்தும் என்னுடைய வரலாறு சுவாரஸ்யமானது.

பழங்காலத்து எகிப்தியர் பாப்பிரசு (papyrus) சுருள்களில் எழுத சிறு நாணலால் (reed) ஆன எழுதுகோல்களைப் பயன்படுத்தினர். எழுது கோலை பயன்படுத்தும் முறை கி.மு 3000 ஆண்டு தொடக்கத்திலேயே வழக்கில் இருந்திருக்கலாம் என்று கூறுகின்றனர் ஆய்வாளர்கள். இவ்வகை எழுது கோல்களே என்னுடைய முன்னோர்களாவர்.

ஐரோப்பாவில் இப்பழக்கம் கி.பி 700 களில் அறிமுகப்படுத்தப்பட்டது. அப்போது ஐரோப்பியர்கள் தூவல் எழுது கோல் என்னும் வகையைப் பயன்படுத்தினர். இவ்வகை தூவல் எழுதுகோலே 1787 இல் ஐக்கிய அமெரிக்காவின்அரசியல் சட்டம் எழுதவும், கையெழுத்திடவும் பயன்பட்டது. எழுதுகோல்கள் 19 ஆம் நூற்றாண்டு வரையில் வழக்கில் இருந்தன.

சாமுவேல் பெப்பீசு 1663 ஆம் ஆண்டில் உலோக நுனியுடன் மை நிரப்பி எழுதும் பேனாக்களை கண்டறிந்தார். அதன் பின்னர் படிப்படியாக என்னுடைய வடிவம் வளர்ச்சியடைந்து. இன்று பல்வேறு வடிவத்தில் என்னை உற்பத்தி செய்கிறார்கள்.

செல்வங்களே என்னில் எத்தனை வகைகள் உள்ளன என்று உங்களுக்குத் தெரியுமா?

★ மைப்பேனா (Ball Point)

★ உருளைப்பந்து எழுதுகோல் (Rollerball Pen)

★ ஊற்று எழுதுகோல் (Fountain Pen)

ஊற்று எழுதுகோல் பலர் எழுதப் பயன்படுத்தும் பொருள். இது மை எனப்படும் சாயம் கலந்த திரவம் கொண்டு எழுதக்கூடியது.

# சண்டைக்காட்சியில் அக்ஷராஹாசன்



● தனது படத்தில் இரண்டாவது கதாநாயகியாக அக்ஷராஹாசனை தேர்வு செய்ததே அஜித் தான் என கூறப்படுகிறது. இரண்டாவது கதாநாயகிக்கு சண்டைக் காட்சியும் உண்டாம்.

# பொம்மலாட்ட முதற்பார்வை




● நடிகர் நகுல், பாலிவுட் நடிகை ஆஞ்சல், பிரகாஷ் ராஜ், நாசர் உள்ளிட்ட பலர் நடித்து வரும் 'செய்' படத்தின் முதல்பார்வை போஸ்டர் வெளியாகியுள்ளது.

# மாரி- 2



● இயக்குனர் பாலாஜி மோகனின் இயக்கத்தில் தனுஷ் நடிப்பில் சென்ற வருடம் வெளியான மாரி திரைப்படம் வணிக ரீதியில் பெரு வெற்றி பெறாமல் போனாலும் இளைஞர்களிடையே வரவேற்பை பெற்றது. இந்நிலையின் இயக்குனர் பாலாஜி மோகன் 'மாரி 2' இற்கான வேலைகளை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



● ஜீவா நயன்தாரா ந...
டுள்ளது. காஜல் அக...
வெளிவருகிறது.

# மேஜிக் மஞ்சுவாரியர்



● நடிகர் மோகன்லாலுக்கு அடுத்தபடியாக மலையாள நடிகை மஞ்சு வாரியரும் மேஜிக் கற்றுவருகிறார். இவரது மேஜிக் நிகழ்ச்சி திருவனந்தபுரத்தில் நாளை நடக்கிறது. மலையாள நடிகர் மோகன்லால், கேரளாவைச் சேர்ந்த பிரபல மேஜிக் நிபுணர் கோபிநாத் முதுக்காட் என்பவரிடம் மேஜிக் பயின்றார். பின்னர் மேஜிக் நிகழ்ச்சியும் நடத்தினார். சினிமாவிலும் தனது வித்தையை காட்டினார். இவருக்கு அடுத்த படியாக நடிகை மஞ்சுவாரியரும் கோபிநாத் முதுக்காட்டிடம் மேஜிக் பயின்று வருகிறார்.



● 'தேவதையைக்கண்டேன்' நாயகியும் நடிகர் விஜயகுமாரின் மகளுமான ஸ்ரீதேவிக்கு ஜூலை 13 ஆம்
திகதி குழந்தை பிறந்துள்ளது.

# மாவீரன் கிட்டு



● வெண்ணிலா கபடி குழு, 'நான் மகான் அல்ல', 'அழகர் சாமியின் குதிரை', 'பாண்டியநாடு', 'ஜீவா', 'பாயும் புலி' ஆகிய படங்களைத் தந்த சுசீந்திரன் இயக்கத்தில் விஷ்ணுவிஷால் நடிக்கவிருக்கும் படத்திற்கு 'மாவீரன் கிட்டு' என்று பெயரிட்டுள்ளது படக்குழு.

"மாவீரன் கிட்டு ஈழ விடுதலை பற்றிய திரைப் படம் அல்ல. 1985 காலகட்டத்தில் நம் தமிழகத்தில் மக்களின் உரிமைக்காக போராடிய ஒரு வீரனைப் பற்றிய திரைப்படம்" என்கிறார் இயக்குநர் சுசீந்திரன்.

# சிவாவுடன் நயன்



● 'ரெமோ' படத்தின் பின்னர் சிவகார்த்திகேயன் மோகன் ராஜா இயக்கத்தில் நடிக்கிறார்.

"எதிர்நீச்சல்" படத்தில் சிவகார்த்திகேயனுடன் ஒரு பாடலுக்கு டான்ஸ் ஆடிய நயன்தாரா, இப்படத்தில் அவருக்கு ஜோடியாகவே நடிக்கிறார். வழக்கம் போல் அனிருத் இசையமைக்கிறார். 'ரெமோ' வின் டப்பிங் வேலைகள் முடிவடையும் தறுவாயில் இருப்பதால், இம்மாத இறுதியில் மோகன் ராஜாவின் படத்திற்கான ஷூட்டிங்கில் சிவகார்த்திகேயன் கலந்துகொள்வார் என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. விரைவில் இது குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகும்.

# செம கலாய் செம கலாய்...

● ரெமோ முன்னோட்டத்தைப் பார்த்த விஜய்சேதுபதி உடனே சிவகார்த்திகேயனை தொடர்பு கொண்டு 'செம பிகர் சார் நீங்க' என்று கூறினாராம். 'முடிஞ்சா இவன பிடி' படத்தில் கலந்து கொண்ட சிவகார்த்திகேயன் இதை தெரிவித்துள்ளார்.





● கரண் சுபா இயக்கத்தில்...
'தெற்கத்தி பெண்ணே'. சி...
வரியிலும், இசையிலும் ...
பாடலில் ஸ்ரீநிரோஷன், சுகி...
நடித்துள்ளனர். இப்பாடல்...
யாக அறிமுகமாகி உள்ளா...
பதிவாளராக ஜனாகரனும்...
ரொமேஷும் அறிமுகமாகி...
முன்னோட்டம் மிக விரை...
தற்போது 'போஸ்டர்' மட்...

# எப்போது திருநாள்?



● ஜீவா நயன்தாரா நடித்துள்ள 'திருநாள்' படம் ஒகஸ்ட் 5 ஆம் திகதி வெளியாகவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. காஜல் அகர்வாலுடன் ஜீவா நடித்த "கவலை வேண்டாம்" திரைப்படம் ஒக்ரோபர் 7 ஆம் திகதி வெளிவருகிறது.

## மீண்டும் பூஜா தேவரியா



● இறைவி படத்தில் விஜய் சேதுபதிக்கு ஜோடியாக துணிச்சலான கதாபாத்திரத்தில் நடித்து அதிகம் பேசப்பட்டவர், பூஜா தேவரியா. தற்போது பூஜா "ஆண்டவன் கட்டளை" படத்தில் நடிக்கிறார். இப்படத்தை மணிகண்டன் இயக்குகிறார். கதாநாயகியாக ரித்திகா சிங் நடிக்கிறார். மணிகண்டன் இயக்கியுள்ள "குற்றமே தண்டனை" படத்திலும் முக்கிய வேடத்தில் பூஜா தேவரியா நடித்திருக்கிறார். 2 ஆவது முறையாக மீண்டும் அவரது இயக்கத்தில் நடிக்கிறார்.



தையைக்கண்டேன்'
யகியும் நடிகர்
நமாரின் மகளுமான
க்கு ஜூலை 13 ஆம்
ழந்தை பிறந்துள்ளது.



● ஈழத்து இசையமைப்பாளர் சன்சிகனின் உருவாக்கத்தில் 'என் நிலாவே' பாடல் இணையத்தில் வெளியாகியுள்ளது. வருண் துஸ்யந்தனின் வரிகளின், சுதர்சன் பாடலைப் பாடியுள்ளார். மேலதிக குரல் சேர்க்கையை நிக்ஸனும் இசைக்கோர்ப்பை சஞ்சித் லக்ஸ்மனும் செய்திருக்கிறார்கள். இசையமைப்பாளார் சன்சிகனின் முதலாவது பாடல் இதுவாகும். ஏற்கனவே குறும்படங்களுக்கு பின்னணி இசையமைப்பை செய்திருக்கும் சன்சிகன் இயக்குனரும் கூட.

# 'கருடா' விரைவில் ஆரம்பம்



● 'இருமுகன்' படத்தைத் தொடர்ந்து விக்ரம் அடுத்ததாக 'கருடா' படத்தில் நடிக்கவுள்ளார். திரு இயக்கவுள்ள இப்படத்தில் விக்ரமுக்கு ஜோடியாக காஜல் அகர்வாலை படக்குழு ஒப்பந்தம் செய்துள்ளது. விக்ரமுக்கு வில்லனாக மகேஷ் மஞ்சரேக்கரும் முக்கிய வேடங்களில் நாசர், கருணாஸ் ஆகியோரும் நடிக்கின்றனர். சில்வர்லைன் பிலிம் பேக்டரி இப்படத்தை மிகுந்த பொருட்செலவில் தயாரிக்கிறது.

# படமாகுமா சானியாவின் கதை?



● இந்திய டெனிஸ் வீராங்கனை சானியா உலக அளவில் பல சாதனைகளை படைத்தவர். இவர் விரைவில் பிரேசிலில் நடக்கும் ஒலிம்பிக்கில் பங்கேற்கவுள்ளார். இந் நிலையில் சமீபத்தில் இவர் தன் சுயசரிதை ஒன்றை வெளியிட்டார், இந் நிகழ்ச்சியில் ஹாலிவுட் நடிகர் சல்மான் கான், நடிகை ப்ரனீதி சோப்ரா ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் உங்கள் வாழ்க்கையை படமாக எடுத்தால் எந்த நடிகை நடித்தால் நன்றாக இருக்கும் என கேட்க, "என் கதாபாத்திரத்தில் அனுஷ்கா ஷர்மா, தீபிகா அல்லது ப்ரனீதி இவர்களில் யார் நடித்தாலும் நன்றாக இருக்கும்" என கூறியுள்ளார்.




ன சுபா இயக்கத்தில் உருவாகும் புதிய பாடல்
த்தி பெண்ணே'. சி.வி லக்ஸின் குரலிலும்,
ம், இசையிலும் உருவாக்கி உள்ள இந்த
ல் ஸ்ரீநிரோஷன், சுகிஸ்ரீதரன் கதாநாயகர்களாக
ள்ளனர். இப்பாடலில் அபிராமி கதாநாயகி
றிமுகமாகி உள்ளார். இப்பாடலுக்கு ஒளிப்
னராக ஜனாகரனும், நடன இயக்குனராக
ஷும் அறிமுகமாகியுள்ளனர். இப்பாடலின்
ாட்டம் மிக விரைவில் வர உள்ள நிலையில்
து 'போஸ்டர்' மட்டும் வெளியாகியுள்ளது.


# பாடலாசிரியரான வெங்கட்பிரபு




● 'சென்னை -28' படத்தினை தயாரித்து இயக்கும் வெங்கட்பிரபு இப்படத்தில் ஒரே ஒரு பாடலை எழுதி பாடலாசிரியராகவும் அறிமுகமாகிறாராம்.

யுவன் ஷங்கர் ராஜா இசையமைக்கும் இப்படத்தின் படப்பிடிப்புக்கள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளன.

# சைபர் மீன்கள்








ஒரு சமூகம் எவ்வாறு நாகரிகம் அடைந்துள்ளது என்பது அது பெண்களை எவ்வாறு நடத்துகின்றது என்பதில் தங்கியுள்ளது.

பச்சா ஹான்

# சுவரில் கொய்தவை

**Rimzan Amanullah**

'Military of Turkey claims power.' - NewsFirst · 'வல்லவராயன் படையெடுத்து வருகிறான் மன்னா!' - பாலபத்திர ஓணாண்டி

**Bala Singaravela**

புகழும் சாக்கடையும் ஒன்றுதான். அள்ளி எடுத்து பூசிக் கொள்ளும் போது ஊரே பார்க்கத்தான் செய்யும்.

**Sivakaran Nithiyanantan Senathirajah** feeling missing.

"சாப்பிடு மகன்" என்று சொல்ல அப்பா அருகில் இல்லாத போது "சாப்பிடுவோம் வாடா" எனக் குரல் கொடுக்கும் நன்பன் ஒருவனாவது நம்மோடு இருத்தல் அவசியம்.!!

**Kiruthikan Nadarajah**

நாரதர் எல்லா இடங்களிலும் வசிக்க முடியாது...
அதனால் தான் உறவினர்களை கடவுள் படைத்தான்...!!
படித்ததில் பிடித்தது
#fact_fact

**Perinparaja Ive Ino**

ஆணின் இனம் அது கிளை மாதிரி
பெண்ணின் இனம் அது வேர் மாதிரி,
கிளை பேசினால் அதை ஊர் கேட்குமே
வேர் பேசினால் அதை யார் கேட்பது.. .. #ஆணாதிக்கம்

**Raj Mayuran**

சரியான நேரத்தில் வந்து எங்காவது மறைந்து கொள்வேன்.....!!

நீண்ட நேர காத்திருப்பின் அழகிய கோபத்தில் அவள் நடத்தும் குட்டி குட்டி செயல்கள் எல்லாம் அழகியல் கவிதைகள்...!!!

#அவளதிகாரம்

**Aberam Wijayakumar**

நாளைக்கு கபாலி படம் பார்க்க போறவங்க பக்கெட் ல தண்ணி எடுத்துட்டு போங்க சென்ட்ரல்ல யார்னா #நெருப்புடா ன்னு அலறுனா தண்ணி ஊத்தி அணைச்சிடுங்க

#நெருப்புடா
#கபாலிடா

**Rimaz Ahamed**

அப்பா போட்டோவ Facebook ல போட்டு "My Hero" ன்னு போட்ற பொண்ணுங்கள பாக்கும்போது என் மைண்ட் வாய்ஸ்,

"பாத்தா அரக்கிறுக்கன் மாதிரி இருக்கான், இவன் ஹீரோவா?"

# படித்ததில் பிடித்தது

'அப்பா மாறவேயில்லை!!'

8 வருடங்களுக்கு முன்னால் -

எனக்கு வேலை கிடைத்த புதிதில், நான் வாங்கிய முதல் மாதச் சம்பளம் 28000 ரூபாய். அதுவும் அந்த மாதத்தின் 27 ஆம் திகதி தான் போடப்படும்.

அப்படி முதல் மாதச் சம்பளம் பேங்கில் போடப்பட்டதும், தலைகால் புரியவில்லை! வீட்டிற்கு போன் செய்தேன்.... அப்பா தான் எடுத்தார்.

அவரிடம் நான் அதிகமாக பேசுவதில்லை. மெல்லியதாக குசலம் மட்டும் விசாரித்து விட்டு,

"உங்களுக்கு எதாச்சும் வேணுமா?"

அப்பா பதில் சொல்லவில்லை. "அம்மாட்ட பேசு.." என்றவாறே போனை அம்மாவிடம் தந்து விட்டார்.

நானும் அம்மாவிடம், "பாத்தியா...?! நான் என்னமாச்சும் வேணுமான்னு அப்பாட்ட கேட்டேன், பதிலே சொல்லல..... இவரெல்லாம்....." என்று துவங்கி அப்பாவை சிறிது வசை பாடிவிட்டு, மற்ற கதைகளை, அந்தக் கதைகளை எழுபத்தியெட்டு முறை அம்மாவிடமே சொல்லியிருந்தாலும்.... எழுபத்தி ஒன்பதாவது முறையும் முதல் தடவை போல கேட்பாள் அம்மா...! பேசிவிட்டு போனை வைத்துவிட்டேன்.

ஓரிரு நாட்கள் கழித்து, என் வங்கிக் கணக்கை எதேச்சையாகப் பார்த்தேன். அந்த அக்கவுண்ட் என் கல்லூரி காலத்தில் இருந்து நான் பயன்படுத்துவது. என் அப்பா என் செலவுக்காக என்று அதில் தான் பணம் போடுவார்.

பணியில் சேர்ந்த தகவலும், சம்பள விவகாரங் களும் அப்பாவிற்கும் தெரியும்!

அதனால் இனி மாதச் செலவுக்காக அதில் பணம் போடமாட்டார் என நினைத்திருந்தேன். அதோடு இனி அப்பா காசு நமக்கெதுக்கு என்ற ஆணவமும் என் தலையில் ஏறிக்கொண்டதால்.... அந்த வங்கிக் கணக்கைப் பார்க்கவில்லை.

முதல் மாதச் சம்பளம் வாங்கி..., அது தீரும் நிலை



வந்து.... பழைய அக்கவுண்டில் ஏதாவது இருக்கிறதா என்று அக்கவுண்டைப் பார்த்தால்

அதில் வழக்கம் போல, அந்த மாதமும் 30 ஆம் திகதியே ஐயாயிரம் ரூபாய் போட்டிருந்தார் அப்பா!!. அதற்கடுத்த மாதங்களிலும் இதுவே தொடர்ந்தது!

அது மட்டுமின்றி அந்த வருடமும் வழக்கம் போலவே, தீபாவளிக்கும், பொங்கலுக்கும், என் பிறந்த நாளுக்கும்... நான் வீட்டிற்கு வரும் முன்னமே துணிமணிகள் எடுத்து வைக்கப்பட்டிருந்தன.

கையில் கொஞ்சம் காசு வந்தவுடன் நான் தான் மாறியிருந்தேன்.

"அப்பா மாறவேயில்லை!!"

DR.ஷேத்திரபாலன்



Thevaratnam Shethirabalan

**கபாலி டா**

அடக்குனா அடங்கிற ஆளா நீ...
முடியுமா...

அவசரம் தெரியுமா...





அடையாளம்

'கால்கள்
தாங்கித் தாங்கி நடப்பார்.
கண் பார்வை குறைவு.
மனநிலை
சற்று சரியில்லாதவர்' என
காணாமல்போன தாத்தாவைக்
கண்டுபிடிக்க ஏதுவாய்
தொலைக்காட்சியில்
அடையாளம் சொன்னார்கள்.
இந்த அடையாளங்களுக்காகத்தான்
தொலைக்கப்பட்டார்
அந்தத் தாத்தா!

- தீபக் தாமஸ்

ஒரு ஆசிரியர் நினைத்தால் ஒரு மாணவனுக்கு மிக சுலபமாக பாடத்தை சொல்லிக் கொடுக்க முடியும்...

நான் ஐந்தாம் வகுப்பு படிக்கும்போது என் ஆசிரியர் என்னிடம் 'உனக்கு எவரெஸ்ட் சிகரத்தின் உயரம் தெரியுமா..?' என கேட்டபோது நான் படித்ததை மறந்துபோய் திருதிருவென விழித்தேன்...
அப்போது என் ஆசிரியர் சொன்னது 'எட்டு எட்டா போனா நாலு எட்டுல எவரெஸ்ட் சிகரத்துக்கு போய்டலாம். ஞாபகம் வச்சிக்கோ நம்பி..!
அவர் அப்போது 8848 மீட்டர் எவரெஸ்ட்டின் உயரம் என சாதாரனமாக சொல்லி கொடுத்திருந்தால் நான் அப்போதே மறந்திருப்பேன்...
ஆனால் இப்போதுவரை என் நினைவில் இருப்பது 'எட்டு எட்டா போனா நாலு எட்டுல எவரெஸ்ட் சிகரத்துக்கு போய்டலாம்!' என்பது மட்டுமே...!
(படித்ததில் பிடித்தது)

# இந்தவார மீம்ஸ் (Meme)

**Ruban Phillip**
17 July at 16:20

தமிழன் சொல்றான் இது என் மண்ணுன்னு
சிங்களவன் சொல்லுறான் இது நம்மளோட புத்ததேசம்னு..
ஆனா இது எதுவுமே தெரியாம இந்த நாட்டோட உண்மையான சொந்தக்காரன் மஹியங்கன காட்டுக்குள்ள மஞ்ஞொக்கா (மரவள்ளி) அவிச்சு திண்ணுட்டிருக்கான்.







**இணையவாசிகளுக்கு** உங்களது சமூக வலைத்தள பதிவுகளை எமது முகநூல் பக்கத்திற்கு அனுப்புங்கள். சிறந்த பதிவுகள் புதுவிதியில் பிரசுரமாகும். https://www.facebook.com/puthuvithieditorial/



C/A/M/P என்ற கண்காட்சியை 'விபவி' நுண் கலை கற்கைப் பீடம் ஜூலை 24 ஆம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரை கொழும்பில் ஏற்பாடு செய்துள்ளது. இதில் பல தமிழ் இளம் ஓவியர்களின் படைப்புக்கள் இடம் பெற்றுள்ளன.

யாழ் இலக்கியக் குவியமும், மகிழ் வெளியீட்டகமும் இணைந்து நடத்திய கறுப்புப் பிரதி வெளியீடாக வந்துள்ள நெற்கொழுதாசனின்- 'வெளிச்சம் என் மரண காலம்' தர்மினியின் 'இருள் மிதக்கும் பொய்கை' ஆகிய கவிதைத் தொகுதிகளுக்கான அறிமுகவிழா 24-07-2016 ஞாயிறு மாலை 3 மணிக்கு திருமறைக் கலாமன்ற கலைத்தூது அழகியற் கல்லூரியில் நடைபெற்றது.







IFI என்னும் அமைப்பினரால் புதுவிதியின் ஊடக அனுசரணையுடன் கடந்த ஜூலை 09 ஆம் திகதி நல்லூர் மகேஸ்வரன் மண்டபத்தில் இரத்ததான முகாம் ஒன்று நடைபெற்றது. இதில் ஏராளமான இளைஞர்களும், யுவதிகளும் ஆர்வத்துடன் கலந்துகொண்டு குருதிக் கொடையில் ஈடுபட்டனர்.









50 ஆவது வயதை எட்டியது சர்வதேச இஸ்லாமிய இலக்கிய ஆராய்ச்சி மாநாடு!..

சர்வதேச இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆராய்ச்சி மாநாடுகளின் 50 ஆவது ஆண்டு நினைதல் நிகழ்வு இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டின் பூர்வீக பூமியான இலங்கையின் மருதமுனை அல்-மனார் வித்தியாலயத்தில் மிகவும் சிறப்பாக 24.07.2016 அன்று இடம் பெற்றது.

இந் நிகழ்வை இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆராய்ச்சி மாநாடுகளின் ஆரம்பகர்த்தாவான தாஜுல் அதீப் எஸ்.ஏ.ஆர்.எம் ஷெய்யது ஹசன் மௌலானா அவர்கள் தலைமையேற்று நடாத்தி வைத்தார்.

இந்த நிகழ்வில் எழுத்தாளர்கள், கவிஞர்கள், கல்வியலாளர்கள், தொழிலதிபர்கள் மற்றும் கலை, இலக்கிய செயற்பாட்டாளர்களும் ஆர்வலர்களும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.



மறுபாதி குழுமத்தின் ஏற்பாட்டில் எழுத்தா க. சட்டநாதனின் பொழிவு சிறுகதைத் தொ அறிமுக நிகழ்வு 17.07.2016 ஞாயிறிறுக்கிழ மாலை 3.30 மணி ஆரியகுளம் சந்திக்கு அரு அமைந்துள்ள புதிய உயர் கல்லூரி மண்டபத் நடைபெற்றது.

தி. செல்வமனோகரனின் தலைமை நடைபெற்ற இந்த நிகழ்வில், தொடக்கவுரையி சி.ரமேஷும், மதிப்பீட்டுரைகளை ச. சத் தேவனும் இ. இராஜேஸ் கண்ணனும் வழங்கினர்

பதிலுரையினை நூலாசிரியரும், நன்றியுரையி சித்தாந்தனும் நிகழ்த்தினர். எளிமையாக சிறப்பாகவும் இந்த நூல் அறிமுக நிகழ்வு இ பெற்றது.

சிறுகதை

தர்சினி குணச்சந்திரன்

அபிஷா.. ரோமியோவாய் நான் துரத்தி துரத்தி காதலித்த என் ஜூலியட். வட்ட முகம், எலுமிச்சம் பழநிறம், கூரான நாசி கள், தோடம்பழ சுளைகள் போல உதடுகள் என பிரம்மன் நீண்ட நேரமாய் இரசித்து இரசித்து செதுக்கிய சிலையவள். அவள் வெட்கத்தை சிரிப்பை முறைப்பை எல்லாவற்றையும் இரசித்தேன்.



# தாய்மை

“இப்ப எதுக்கு ஓமெண்டமாட்டேன் எண்டுறீங்கள்?” என்று பெண் சிறுத்தையாய் சீறினாள் என் மனைவி.

“எத்தனை தடவை சொன்னாலும் உனக்கு புரியாதா அபிஷா? நாங்கள் கலியாணம் கட்டி ஒண்டரை வருஷம் தான் ஆகுது. கொஞ்சம் பொறுத்துத் தான் பார்ப்போமே.. இப்ப என்ன அவசரம்?” பதிலுக்கு நானும் சீறினேன்.

“உங்களுக்கென்ன? எனக்குத்தான் வயசு போட்டுது. அப்பவே நான் கெதியா கட்டுவம் என்று ஒற்றைக் காலில் நிண்டன்.. கேட்டீங்களா? இப்ப எனக்கு 30 வயசாப் போச்சு. எனக்கும் பயமாக்கிடக்கு. ஒத்துக் கொள்ளுங்கோவன். பிளீஸ்....” என்று ஆத்திரமாய் தொடங்கி அழுகையில் முடித்தாள் என் மனைவி. அவள் பயப்படுகிறாள் என்று உணர்ந்ததும் என் கோபத்தை தணித்துக் கொண்டு அவளை ஆறுதல்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டேன்.

“சரி எப்ப போவம்?...”

தண்ணீரில் விண்மீனைக் கண்ட அதிசயத்துடன் முகம் மலர என்னை நோக்கினாள்.

“உண்மையாவோ?” என்றாள்.

அவளை கனிவுடன் நெஞ்சில் சாய்த்துக் கொண்டேன். சேட்டு பொத்தான்களை முறுக்கிக் கொண்டே விசும்பலுடன் மழையில் நனைந்த ஆட்டுக்குட்டியாய் ஒண்டிக் கொண்டாள்.

***

அபிஷா.. ரோமியோவாய் நான் துரத்தி துரத்தி காதலித்த என் ஜூலியட். வட்ட முகம், எலுமிச்சம் பழநிறம், கூரான நாசிகள், தோடம்பழ சுளைகள் போல உதடுகள் என பிரமன் நீண்ட நேரமாய் இரசித்து இரசித்து செதுக்கிய சிலையவள். என் ஒரு தலைக் காதல் சுபமாய் முற்று பெற்ற போது தான் எப்பேர்ப்பட்ட அரிய தேவதை எனக்கு கிடைத்திருக்கிறாள் என்பதை என்னால் உணர முடிந்தது. அவள் எண்ணங்கள், சிந்தனைகளில் பத்தோடு பதினொன்றாய் இல்லாது தனித்து நின்றாள். ஆம். அபிஷா அடக்கமும் அமைதியுமே உருவானவள். எதைச் செய்வதாக இருந்தாலும் முன்பின் விளைவுகளை ஒன்றுக்கு இரு தரமாய் யோசித்துச் செய்பவள். மற்றவர்கள் மனத்தை புண்படுத்தாது தன்னுடைய கருத்துக்களை வெளிப்படுத்தும் வகை அறிந்தவள். மற்றவர்களின் கருத்துக்களை ஏற்கத் தெரிந்தவள். கைக்கு எட்டாத சந்தோசங்களுக்காக கவலைப்படுவதை விட்டு கைக்கு எட்டிய சந்தோசங்களை முழுமையாக அனுபவிக்கத் தெரிந்தவள்.

எப்படியும் வாழலாம் என்ற சிந்தனையை விடுத்து இப்படித் தான் வாழ வேண்டும் என்று எல்லையிட்டு வாழத்தெரிந்தவள். திருமணத்திற்கு முன்பு அவள் என்னை உயிராய் காதலித்த போதும் பெற்றவர்களுக்கு கௌரவம் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்திலே நேரடி சந்திப்புக்களை முற்றாக தவிர்த்தவள். “நேரடிப்பார்வை இல்லா விட்டால் லவ் குறைஞ்சிடாது தினேஷ்.. எதிர்பார்ப்பு அதிகமாகி அது கூட நல்லாகத்தான் இருக்கும்.. எங்களை பெத்தவங்களுக்கும் கௌரவம் கொடுக்கிற போல இருக்கும்.. வித்தியாசமாத்தான் இருந்து பார்ப்போமே” என்று அவள் கிள்ளை மொழியில் மிழற்றிய போது கிடைத்தற்கரிய பொக்கிஷமாய் மினுமினுத்தவள். அவளோடு பழகத் தொடங்கிய சில காலங்களிலேயே என்னிடம் இருந்த முன் கோபம், பிடிவாதம், எதற்கும் ஆலாய்பறக்கும் குணம், பொறுமையின்மை போன்ற குணங்களை மெதுமெதுவாக மாற்றி என்னை முழு மனிதனாக்கியவள். மொத்தத்தில் என்னுள் முறுக்க வேண்டியதை முறுக்கி தளர்த்த வேண்டியதை தளர்த்திய என் இனிய ஸ்குரூட்றைவர் அவள். இருவீட்டார் சம்மதத்துடன் திருமண நாளன்று வண்ணக் கனவுகளுடனும் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத உணர்ச்சிகளுடனும் என் தேவதையைக் கரம்பிடித்தேன்.

***

ஒரு நாள் கோயிலுக்கு போய் வந்த அபிஷா விபூதியை என் நெற்றியில் பூசியவாறு மருதாணியாய் முகம் சிவக்க சொன்னாள்

“ஏதும் விசேஷம் இருக்கா என்று கமலமக்கா கேட்டவா” என்று.

“ம்ம்ம்ம்... என்ன அவசரம்? இப்ப தானே கலியாணம் நடந்திச்சு “என்று பூமாலையாய் அவளை அணைத்துக் கொண்டு, மெதுவாய் அவள் கைரேகைகளை பார்த்து “எனக்கு 60 வயசு மட்டும் ஓய்வில்லாத ஓட்டம் தான்..” ஏன் என்று புரியாமல் குழம்பிய அவளுக்கு சொன்னேன்.

“பின்ன? 3 பிள்ளைகளையும் கரை ஏற்ற வேண்டாமோ?” மின் குமிழாய் பிரகாசித்தன அவள் கண்கள்.

“உங்களுக்கு சோதிடம் கூடத் தெரியுமா தினேஷ்? என்னைப் போல தனிப் பிள்ளையாய் இல்லாமல் கனக்க சொந்தங்கள் இருந்தால் நல்லம் என்ன...” என்று மறைமுகமாய் தன் ஆசையை வெளிப்படுத்தினாள்.

பின் தொடர்ந்த மாதங்களில் இப்படியான உரையாடல் அடிக்கடி நிகழத் தொடங்கியது.

கமலமக்கா போல மற்றையோரும் ஆர்வப்படத் தொடங்கினர். ஆரம்பத்தில் நாணத்துடன் கேள்விக் கணைகளை எதிர்கொண்ட அபிஷா பின்னாளில் குழப்பமடைய தொடங்கினாள். தாய்மையை ஒருவித அவசரத்துடன் எதிர் நோக்கத் தொடங்கினாள். மாதவிலக்கு வரும் போது நோயினால் பீடிக்கப்பட்டவள் போல வருந்தத் தொடங்கினாள். காரணமின்றி கோபப்பட்டு எந்நேரமும் மன உளைச்சலில் சிக்கித் தவித்தாள். சோதிடத்தில் துளி கூட நம்பிக்கையற்ற அவளை புத்திரதோஷம் இருக்குமோ என்று நினைக்குமளவிற்கு இச் சமூகம் அவளை மாற்றியது. காலப்போக்கில் என் ஆறுதல் வார்த்தைகளின் வலிமையும் நலியத் தொடங்கியது.

திருமணமாகி ஒரு வருடம் கடந்த நிலையில் அவளது நெருங்கிய தோழி நிஷாந்தியினது திருமணம் வந்தது. நெருங்கிய தோழி என்பதால் இரண்டு நாட்களுக்கு முன்பே அவளது வீட்டுக்குச் சென்று உதவுவதும் திருமணத்திற்கு எப்படி அலங்கரிப்பது என்று உற்சாகமாய் திட்டமிடுவதாகவுமாய் இருந்தாள். பழைய அபிஷாவாய் அவள் நடந்து கொண்ட விதத்தில் நானும் நிம்மதியாய் இருந்தேன்.

ஆனால் என் நிம்மதியை தகர்க்கும் விதமாய் சிவந்த கண்களும் வீங்கிய முகமுமாய் திருமணத்தன்று பாதியிலேயே என்னை பிடிவாதமாய் வீட்டுக்கு அழைத்து வந்து தேம்பித்தேம்பி அழத் தொடங்கினாள். அவளை மீறிய விக்கல்களில் என் இதயம் அதிர்ந்தது. விக்கல்களின் மத்தியில், அவள் சொன்ன கதையில் என் இதயம் ஒரு கணம் துடிக்க மறந்தது. ஆம்.. நிஷாந்தியை மணவறைக்கு அழைத்துச் செல்லும் போது அபிஷாவை எல்லா விஷயங்களிலும் கவனமாய் தவிர்த்திருக்கிறார்கள்.

ஆரம்பத்திலேயே அபிஷா இதை உணர்ந்த போதும் பெரிதாய் அலட்டிக் கொள்ளவில்லை. ஆனால் சற்றே சரிந்திருந்த நிஷாந்தியினுடைய தலையலங்காரத்தை சரி செய்ய முயன்ற அபிஷாவை “ஏன் பிள்ளை நீ முன்னுக்கு போறாய்?” என்ற நிஷாந்தியின் அம்மாவின் கடுமையான குரல் தடுத்து அபிஷாவை கவனமாய் தவிர்த்ததன் உண்மையான காரணத்தை சொல்லாமல் சொல்லியிருக்கிறது. “என்னால முடியேலை தினேஷ்”

(18 ஆம் பக்கம் பார்க்க...)

# மாயாவின் டயரி



## –பார்க்கப்படாத பக்கங்கள்–

### அன்பின் டயரி!

இந்த இரவுகளை எப்படிக் கடப்பது என்று தெரியவில்லை. வெளியே அனலடித்துக் கொண்டிருக்கின்றது. உலகின் ஒட்டுமொத்தப் புயல்களும் என் கூரையின் மேல் வீசுவது போல் இருக்கின்றது. நம்பிக்கையை இன்னும் இறுக்கப் பற்றிக் கொள்கின்றேன். எனக்கு இப்போது இருப்பது அது ஒன்றுதான். தனிமை இரண்டு வகைப்பட்டது என்பதை அறிவாயா? ஒன்று நாமே எடுத்துக் கொள்ளும் தனிமை மற்றொன்று மற்றவர்களால் நமக்கு கொடுக்கப்படும் தனிமை. நான் இந்த இரண்டையும் சூடிக் கொண்டு சுவர்களாலான இரவுகளில் இருளை எண்ணியபடி ஒற்றை வெளிச்சத்தில் உன்னுடன் பேசுகின்றேன். இந்த வெளிச்சமும் இன்னும் சற்று நேரத்தில் உருகிவிடக் கூடும் அதற்குள் நான் பேசிவிட வேண்டும்.

சமீப நாட்களாக நான் சந்தித்த பெண்கள் அனைவரும் ஏதோ ஒருவகையில் புறக்கணிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள். வெளியில் இருந்து பார்ப்பவருக்கு இது ஒரு மன ரீதியான ஏமாற்றம் இரண்டொரு நாளில் சரியாகிவிடும் என்பதாகத் தோன்றும். ஆனால் அது அப்படி இல்லை. அது மனம் உடல் இரண்டும் தொடர்புபட்டது. காதல்; அதை ஒரு புனிதமாகவும் அது வாழ்க்கையின் மிகை நிரப்பியாக இருப்பதாகவும் எனக்குள்ளும் ஒரு பிரமை இருந்தது. அந்த நாட்களிலெல்லாம் நான் அடிமைத்தனத்தை விரும்பி ஏற்றேன். எனக்கு நானே விதி முறைகளை இட்டுக் கொண்டேன். கற்பு என்கின்ற மாயையை என் மீது போர்த்திக் கொண்டேன். எனக்கே தெரியாமல் நான் தனிமைப்படுத்தப்பட்டேன். அதன் முழுப் பொறுப்பையும் நான்தான் ஏற்கவேண்டும். ஏனெனில் நம் ஆண்கள் எப்போதும் பெண்களை ஒரு உடமைப் பொருளாக வைத்திருப்பதைத்தான் விரும்பினார்கள். என் போன்ற சுதந்திரமான சிந்தனை உடையவர்க்கு அந்த இலக்குகள் இலகுவானதல்ல. அதனாலேயே நான் தற்போது தனிமைப்படுத்தப்பட்டேன். உலகில் நான் மட்டும்தானா இப்படி என்ற கேள்வியோடு திரும்பிப் பார்த்தால் என்னைப் போலவே பல பெண்கள் அந்த தனிமைச் சிலுவையைச் சுமந்தபடி. இந்த தனிமை எனக்கு இன்னொருவரால் கொடுக்கப்பட்டது.

ஆனால் என்னுடைய தாய்க்கு நிகழ்ந்தது அவ்வாறானது அல்ல. இந்த அறை தாண்டி கசங்கிய விழிகளோடு விட்டத்தை வெறித்துப் பார்த்தபடி கந்தலாகிக்க கிடக்கின்ற என் தாய் தனிமையை விரும்பி ஏற்றுக் கொண்டார். அவரால் குடும்பம், குழந்தைகள் இவர்களுக்காக வாழ்வதைத் தவிர வேறெந்த வழியும் புலப்படவில்லை. என் தாய் நன்றாகப் பாடுவார். சமைக்கும்போது பாடிக்கொண்டே சமைப்பார். கேட்கும்போது அந்த குரலில் இருக்கும் ரம்மியம் இணைந்த துயர் எதிலும் இருப்பதாகத் தெரியவில்லை. இரவுகளில் தந்தையின் அரக்கத்தனத்திற்கு பலியாகி அவர் அழும்போதும் அந்தத் துயரிசை இன்னும் பீறிடும். அதைக் கேட்டுக் கேட்டே வளர்ந்தேன். எத்தனை துயரம் வந்த போதிலும் அவர் தற்கொலையை தீர்வாக எடுக்கவில்லை. எடுத்திருந்தால் நான் அன்பின்றி தவித்திருப்பேன். அவர் குடும்பம் என்ற வட்டத்திற்குள் தன்னை வருத்திக் கொண்டு வாழ்வதை என்னால் சகிக்க முடியவில்லை. ஆனால் இந்த சமூகத்தின் அடிப்படைக்கு கட்டமைப்புக்களில், சிந்தனை முறைமையில் மாற்றம் ஏற்படாதவரை இந்தத் துணிகரமான முடிவுகளும் பிறழ்வான அம்சமாகவே கருதப்படும் என்பதை நான் அறிவேன்.

ஆண்கள் ஏன் குடித்துவிட்டு பெண்களைச் சித்திரவதை செய்கின்றார்கள்? வன் சொற்களால் ஏன் ஏசுகின்றார்கள்? இதற்கான விடையை விபரமறிந்த வயதிலிருந்து நான் தேடிக் கொண்டுதான் இருக்கின்றேன். கிடைக்கவேயில்லை. உயிரை சிருஷ்டிக்கும் பெண் உறுப்பு எப்படி கெட்டவார்த்தையானது? உறவுகள், நட்புக்கள், உலகம் இவற்றிலிருந்தெல்லாம் நம் ஊர்ப் பெண்கள் தனிமைப்படுத்தப்படுகின்றார்கள். அதை அவர்கள் அறிவதற்குள் அவர்கள் வாழ்வின் பாதி முடிந்துபோய் அவர்களின் கடமைகள் கனத்துப் போய் இருக்கும். இந்த மாதிரியான திட்டமிடப்பட்ட தனிமையை பெண்கள் விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைப்பாட்டில் இருக்கின்றோம்.

இருபதுகளின் தொடக்கங்களிலேயே நம் வாழ்க்கையை நாம் தீர்மானிக்க வேண்டும். அதற்கு கல்வி எவ்வளவு அவசியம். எங்கள் சிந்தனையை நாங்கள்தான் விரிவுபடுத்திக் கொள்ள வேண்டும். ஆடைகளைத் தளர்த்துவதிலும் முடிகளை கத்தரிப்பதிலும் அல்ல எம் சுதந்திரம். அது நாம் நாமாக இருப்பதால்தான் இருக்கின்றது என்பதை புரிந்து கொண்டேன். தனிமைப்படுத்தி துயர் கொடுத்தல் என்னும் மறைமுகமான தாக்குதலை சமாளிக்க நான் தயாராக வேண்டும். அதை நான் அறிவார்ந்த ரீதியாகத்தான் எதிர்கொள்ள வேண்டும். நான் இப்பொழுது இந்த சுவரில் பொருத்தப்பட்டுள்ள கதவை திறக்கப் போகின்றேன் அல்லது உடைக்கப் போகின்றேன்.

**"வாழ்தல் ஒரு கலை எதிர்ப்புடைத்து வாழ்தல் ஒரு உன்னத கலை!"**

● மாயா

# மதகுருமார் மட்டும்...

## ஒரு உண்மைச் சம்பவம்




● வழிப்போக்கன்

கடந்த வாரம் மதியம் ஒரு மணிக்கு திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணத்திற்குப் புறப்பட்ட இ.போ.ச பேருந்தின் இரண்டாவது வரி இருக்கையில் அமர்ந்திருக்கிறேன். பேருந்து நிறைந்த பயணிகள்.

புறப்பட்டு பதினைந்து நிமிடங்களில் பேருந்து நிறுத்தப்படுகிறது. திடீரெனப் பேருந்து பெரும்பரபரப்பாகிறது. அங்கு பௌத்த பிக்கு ஒருவர் ஏறுவதற்குக் காத்துநிற்கிறார். அப்பொழுது எனக்கு முன்வரிசையில் அமர்ந்திருந்த இளைஞனை எழும்புமாறு அங்கு நின்ற சிங்கள மக்கள் கட்டளையிடுகிறார்கள். அங்கே ஒட்டப்பட்டிருந்த 'மத குருமாருக்கு ஒதுக்கப்பட்ட ஆசனம்' என்ற அறிவித்தலைக் காட்டி இதில் "நீ உட்காரக்கூடாது என்று உனக்குத் தெரியாதா?" என்று கடும் தொனியில் பேசுகிறார்கள்.

ஆனால் அவனோ அவர்கள் சொல்வதைக் காதுகொடுக்காமல் இருக்கிறான். அந்த மக்கள் கத்தத் தொடங்கிவிட்டார்கள்!

அவன் திடீரென எழுந்து நின்று தன்னுடைய சேர்ட்டை விலக்கி அதற்குள் இருந்த பூ நூலை எடுத்துக் காட்டி "நானும் ஒரு மதகுரு தான் நான் ஏன் எழும்ப வேண்டும்" என்று வீறாய்ப்பாய் சிங்களத்தில் பதில் சொல்லிவிட்டு அமர்ந்து விடுகிறான்.

இப்பொழுது சிங்களப் பயணிகள் கோபத்தின் உச்சிக்குப் போய் பேருந்தே அதிரும் வண்ணம் அந்த இளைஞனை துளைத்தெடுக்கிறார்கள், அந்தத் தமிழ் இளைஞனின் மேல் அவர்கள் பாயத்தயார்.

நிலைமை மோசமாகிறது.

அவன் சட்டென எழுந்து இடம்கொடுத்துவிட்டு விலகி நிற்கிறான்.

மூவர் இருக்கக்கூடிய அவ்விருக்கையில் இப்பொழுது மக்களின் கவனம் அங்கு அமர்ந்திருந்த முஸ்லிம் பெண்ணின் மேல் செல்கிறது. அதே தொனியில் பேச்சுக்கள், அந்தப் பெண்ணும் எழுப்பப்படுகிறார். இப்பொழுது அங்கு நின்ற முஸ்லிம் மக்கள் அவரை எழுப்பியதற்கு எதிர்ப்பைக் காட்டத் தொடங்கினார்கள், மீண்டும் அந்தப் பெண் அமருகிறார். மீண்டும் பெரும்பான்மை இனத்தின் அதிகாரம் அவரை எழுப்பி ஓரமாக நிற்க வைக்கிறது. அதற்குப் பின்னரே அந்த மகத்தான 'ஆமத்துறு' வந்து இருக்கையில் அமர்ந்துகொள்கிறார். மூன்று பேர் இருக்கக் கூடிய அந்த ஆசனத்தில் இன்னுமொருவரும் அமர்ந்திருந்தார். ஆனால் அவரை அதட்டவோ எழுப்பவோ இல்லை. ஏனெனில் அவர் பெரும்பான்மை இனத்தவர்.

பேருந்து நகரத்தொடங்க எனது பிடரியில் சடாரென அடி விழுகிறது. மக்களின் கவனம் என்னை நோக்கி. மீண்டும் சிங்களத்தில் கட்டளையிட்டு என்னையும் எழுப்பிவிடுகிறார்கள். அந்த எழுப்பிய பெண்ணிற்கு என்னை இடம்கொடுக்கட்டாம்.

இதுதான் இலங்கையில் மனிதாபிமானம்: நல்லிணக்கம்.

நமோ நமோ தாயே...!

# தாய்மை

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்றவாறு அழுத அபிஷாவை சமாதானப்படுத்த வார்த்தைகளின்றி கண்ணீருடன் அணைத்துக் கொண்டேன்.

அதன் பின் அவள் எந்த நிகழ்ச்சிகளிலும் பங்கு கொள்ளவில்லை. ஆமையாய் தன்னை வீட்டினுள்ளேயே முடக்கிக் கொண்டாள். நான் ராசியில்லாதவள் என்ற முத்திரையைத்தானே குத்திக் கொண்டாள். என் அபிஷா பூப்போல தாங்க தயாராக இருக்கையில் கரு உருவாவதற்கு எதற்கு இப்படி தாமதமாகிறது? என்று எண்ணும் போது பிறக்க போகும் அந்த குழந்தை மீது எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்து. சந்தோஷமாக இல்லாவிட்டாலும் பரவாயில்லை, நிம்மதி கூட இல்லாமல் என் அபிஷா மாதங்களை உந்தித்தள்ளிக் கொண்டிருந்தாள் நம்பிக்கையற்ற எதிர்பார்ப்புடன்.

ஒரு வாரத்திற்கு முன்பு ஒரு நாள் ஏதோ கதைக்க ஆரம்பிப்பதும் பின் விடுவதுமாய் இருந்தாள். கேள்வியுடன் பார்த்த என் பார்வைக்கு பதிலாய் "கோபப்படக் கூடாது" என்று பீடிகை போட்டாள்.

"இல்லை சொல்லு" என்றேன் புயலொன்றை எதிர்பார்த்தபடி.

"இல்லை கமலமக்கா சொல்லுறா ஒருக்கால் டொக்டரிட்டை காட்டுறது நல்லம் எண்டு" என்றாள்.

"யாரை? என்னவாயிற்று?" என்றேன் உண்மையிலேயே புரியாமல். "எங்களைத் தான் தினேஷ்.. முதலிலேயே காட்டினால் ஏதும் பிரச்சனை என்றால் தீர்க்கலாம் எல்லோ.. அதோட ஷியாமளன் டொக்டர் கைராசிக்காரராம்.." என்று இழுத்தாள்.

"அப்ப எல்லாம் முடிவு பண்ணிட்டு தகவல் சொல்லுறாய் அப்பிடித்தானே" வெடித்தேன் நான்.

"ஓம் இந்த வெட்டி கௌரவம் தான் உங்களுக்கு.. நான் படுற பாடு தெரியுமா? கலியாணம் கட்டா விட்டால் ஒரு கவலை கட்டினால் ஆயிரம் கவலை.." எனக்கு பதிலுக்கு அவளும் வெடித்தாள் அழுகையுடன். அவள் கண்ணீரை கண்டதும் என் மனம் அவளிடம் மண்டியிட்டது. "அழாதே அபிஷா.. எங்களுக்கு ஒரு பிரச்சனையும் இல்லை... நடக்க வேண்டிய நேரத்தில எல்லாம் நடக்கும்" என்றேன் அணைத்துக் கொண்டு. அவள் அந்த நிமிடத்தில் சமாதானமானாலும் தொடர்ந்து வந்த நாட்களில் என்னை நச்சரிக்கத் தொடங்கினாள்.

பழையபடி தூக்கமின்றி மன உளைச்சலில் தவிக்கத் தொடங்கினாள். எனக்கு எங்கள் உடல் நிலைகளில் திடமான நம்பிக்கை இருந்த போதும் அவள் படும் பாட்டை எண்ணி இன்று ஒத்துக் கொண்டுவிட்டேன். சில சமயம் மருத்துவர் நல்ல விதமாக ஏதும் சொன்னால் அவளை பழைய அபிஷாவாகக் காணலாமே என்ற நம்பிக்கையுடன். இருந்தும் இந்த சமூகத்தை என்னால் வெறுக்காமல் இருக்க முடியவில்லை. என்ன சமூகம் இது? ஒரு இளம் பெண்ணை இப்படியா வருத்துவது? திருமணமாகி ஒன்றரை வருடங்களில் வாழ்க்கையின் எல்லை வரையிலுமா ஒரு பெண்ணை விரட்டுவது? எப்பேர்ப்பட்ட தேவதை என் அபிஷா? பொறுமையின் சிகரம் என ஒரு காலத்தில் என்னை வியப்புடன் பார்க்க வைத்தவள். இன்று பொறுமையே இன்றித் தவிக்கிறாள். தாய்மை என்ற ஒரு சொல்லுக்காய் அபிஷாவை தலைகீழாய்ப் புரட்டிப் போட்ட இந்த சமூகத்தை நொந்து கொண்டு அடுத்த கட்ட வேலைகளை ஆரம்பித்தேன், என் பழைய அபிஷா தாய்மையுடன் கிடைப்பாள் என்று நம்பிக்கையோடு.

சக்தீ பால– ஐயா:

# ஒரு சரிதம்

(20 ஆம் பக்கத் தொடர்ச்சி)



"கொட்டகலையிலிருந்து நான் மட்டுமே வந்தேன்" என்றேன். "கொட்டகலையிலிருந்து எதில் வந்தீர்கள்? எவ்வளவு கட்டணம்?" என்றார். பஸ்ஸில் வந்தேன் என்றும் கட்டணத் தொகையையும் சொன்னேன். "நேரம் எவ்வளவு?" என்றார். எல்லாம் சொன்ன பின்பு நிதானமாக அத்தனையையும் கணித்து விட்டு "இவ்வளவு தூரத்தில் இருந்து இவ்வளவு பணம் கொடுத்து என்னை பார்க்க வந்தீர்களாம்மா..? நன்றியம்மா" என்றார் அதே தெளிவான தமிழில்.

இப்படிதான் ஒவ்வொரு விடயத்தையும் மிக நுட்பமாக அவதானிப்பார். பேசிக் கொண்டு இருந்த போதே அவ்வப்போது உறங்கிப் போனார். மாஸ்டருடன் நேரடியாக நான் பேசியது அது தான் கடைசி முறை.

இந்திரா அக்கா சொன்னார்கள் "அடுத்த மாதம் வரை தனது வேலைத் தளத்திற்கான சகல கட்டணங்களையும் செலுத்தி பற்றுச் சீட்டுக்களை கோவைப்படுத்தி இருக்கிறார்" என்று மாஸ்டரின் நேர்த்தி கண்டு வியந்தேன்.

### எளிமை... எளிமை... எளிமை


எளிமையாக வாழ்வதாக கூறிச் சிலர் மலின வாழ்க்கை வாழ்வதுண்டு. அன்றேல் எளிமையாக வாழ்வதாகக் கூறி பந்தா காட்டுவதுண்டு. உண்மையான எளிமையோடு வாழ்ந்தவர் மாஸ்டர் என்பதற்கான ஆதாரத்தை அவரின் மரண சாசனம் மூலம் அறிய கிடைத்தது. தனது மரணத்தின் போது தனக்கு வெறும் வெண்ணிற ஆடை அணிவித்து, ஒரே ஒரு மண்ணாலான விளக்கை மட்டும் ஏற்றி வைத்து, பின்பு 24 மணி நேரத்துக்குள் தகனம் செய்யப்பட வேண்டும் என்றும், எவ்வித மத கிரிகைகளும் செய்ய வேண்டாம் என்றும், தனது மரணச் செய்தியை யார் யாருக்கு சொல்ல வேண்டும் என்றும், அவர்கள் பெயர் பட்டியலையும் தரம் பிரித்து எழுதி வைத்திருந்ததையும் இந்திரா அக்கா சொன்னார்கள்.

### பக்குவ ஞானி

இவைகளையெல்லாம் கேட்கும் போது வழமை போலவே என்னால் ஆச்சரியப்பட மட்டுமே முடிகிறது. மாஸ்டரைப் பொறுத்தளவில் நிறைவாக வாழ்ந்து நிறைவடைந்தார் என்பதே உண்மை. வயதுக்கு பொருத்தமான பக்குவத்துடன் ஞானியைப் போல வாழ்ந்தார்.

கலாபவனத்தில் இருந்து கனத்தைப் பொதுமயானத்தை நோக்கிய அவரின் இறுதிப் பயணத்தின் போது அன்புக்குரிய ஐயா தெளிவத்தை ஜோசப் அவர்கள் என்னிடம் சொன்னார்கள். "ஒரு மனுசன் 89 வயசு வரை நல்லவராக வாழ்வது என்பது அத்தனை சாதாரணமான விசயமா? அதை சக்தி செய்து இருக்கு" என்றார். அது எத்துணை சத்திய வார்த்தை..!

## மாற்றங்களும், மயக்கங்களும்...



ஒரு நாள் கடவுள்
பூமிக்கு வந்தார்...
விளை நிலங்கள் எல்லாம்
விண்ணளவு உயர்ந்த
கட்டடங்களாகியிருந்தன.
புல்வெளிகளில்...
புதியதாய் விடுதிகள் பூத்து நின்றன.
ஆற்றங்கரைகள்,
ஆய்வு கூடங்களாய் மாறிக்கிடந்தன.
குளங்கள்
குட்டைகளாய் குறுகிக்கிடந்தன.
உயிர்கள்
உணவிற்காய் சண்டையிட்டு
உயிரை மாய்த்துக் கொண்டன.
கடவுள் குழம்பினார்...
இடம் மாறி வந்து விட்டேனோ?????????
நான் படைத்த இடம் இதுவல்லவே..!!!


ச.ஆனந்தி




## குட்டீஸ் பரிசுப் போதி – 01 முடிவுகள்

### வெற்றியாளர்கள்

- நா.அபிகா
  தரம் -09
  கைதடி
- வா.அத்விகா
  துன்னாலை மத்தி
  கரவெட்டி
- ஜெ.புருசோத்
  வசந்தபுரம்
  இளவாலை



### விடைகள்

01. எறும்பு
02. முட்டை
03. குடை
04. பென்குயின்
05. கடிகாரம்

## நீங்களும் எழுதுங்கள்!

'புதுவிதி' வாரசஞ்சிகையில் உங்கள் படைப்புக்களும் இடம்பெற வேண்டுமென்று விரும்புகிறீர்களா? தயக்கம் வேண்டாம். சிறுகதை, கவிதை, கட்டுரை, பத்தி எழுத்து, நிகழ்வுக் குறிப்பு எதுவாயினும் எழுதி அனுப்புங்கள். தரமான படைப்புகளுக்கு புதுவிதியில் பிரசுரமாக களம் அமைத்துக் கொடுக்கப்படும். படைப்புகளை தபால்/மின்னஞ்சல் மூலம் அனுப்பலாம்.

அனுப்பவேண்டிய முகவரி:

புதுவிதி, 107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

puthuvithi@gmail.com

# வேட்டையாடிகள் 03

எஸ்.கிருபானந்தகுமாரன்
(கால்நடை வைத்தியர் )



**ஒவ்வொரு விலங்கும் ஒவ்வொரு பறவையும் ஒவ்வொரு தாவரமும் தான் வாழும் சூழல் தொகுதியில் ஒரு பணியை ஆற்றவே படைக்கப்பட்டிருக்கின்றன. சூழலின் நிலை பேறு தன்மையை தீர்மானிக்கும் பங்குதாரர்கள்.**

வேட்டையாடப்படும் சிறிய வகை விலங்குகள் வேட்டையாடுபவர்களின் தேவைக்கே பயன்படுத்துவர். எனினும் மான், மரை, காட்டுப் பன்றிகள் போன்ற விலங்குகளின் இறைச்சிகள் பங்கு போடப்பட்டு விற்கப்படும். சில வேளைகளில் வற்றல் போட்டு சில நாட்கள் வைத்திருந்து விற்பார்கள். சராசரியாக ஒரு கிலோ வற்றல் எடுக்க நான்கு கிலோ இறைச்சி பயன்படுகிறது.

பொலிஸ் மற்றும் வன விலங்கு துறையின் அதிகரித்த கெடுபிடி காரணமாக பெரும்பாலும் இன்றைய நாட்களில் வற்றல் போடப்படாது விலங்குகளை பிடித்த கையோடு காதும் காதும் வைத்தது போல தூர இடங்களுக்கு அனுப்பி விடுவார்கள். காட்டு இறைச்சியை வாங்க சில நகரங்களில் ஆட்கள் இருக்கிறார்கள்.

சில வேளைகளில் வேட்டை மனிதர்கள் காவல் துறையிடமோ அல்லது வன விலங்கு திணைக்களத்திடமோ சிக்கி விடும் போது வழக்கு பதிவிடப்படும். சிறிய விலங்குகளுக்கே மிகப் பெரும் அபராதம் விதிக்கப்படும். விலங்கு மருத்துவராக அந்த இறைச்சியை உறுதிப்படுத்தி நீதிமன்றத்துக்கு நாங்கள் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டிவரும்.

ஒரு முறை உடும்பு பிடித்து உரித்த ஒரு நபர் கைது செய்யப்பட்டிருந்தார். சிங்கள மொழி பேசும் காவல் துறை அதிகாரிகள்தான் அவரை கைது செய்திருந்தனர். சிங்கள மக்களில் பெரும் பாலானவர்கள் உடும்பு இறைச் சியை உண்ணமாட்டார்கள். உடும்பை கொலை செய்யவோ அவற்றுக்கு தீங்கு இழைக்கவோ மாட்டார்கள்.

ஆனால் தமிழ் மக்கள் அதனை விரும்பி உண்பார்கள். உடும்பின் இறைச்சி மிக விரைவாக உடலில் சேரும் என்றும் நீரிழிவு போன்ற நோய்களுக்கு நல்ல மருந்து என்றும் சொல்லுவர்.இதனால் அங்கு ஒரு முரண்பாடு தோன்றும். இலங்கை சட்டத்தின் படி உடும்பை வேட்டையாட முடியாது. அந்த நபர் கடும் அபராதத்தை செலுத்த வேண்டி ஏற்பட்டது.

மக்களுடைய காட்டு விலங்குகள் தொடர்பான கரிசனைகள் அதிகரித்திருப்பதை அண்மைக் காலத்தில் காண முடிகிறது. அண்மையில் ஒரு கழுகை சிலர் வேடையடுவது பற்றியும், மான், முள்ளம் பன்றி காட்டுப் பன்றி போன்ற விலங்குகளை வேட்டையாடும் பிறிதொரு ஒரு கும்பல் பற்றியும் முகப் புத்த கத்தில் புகைப்படங்களாக வந்து மிகப் பெரிய சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது என்பதை கருத்தில் கொள்க.

உண்மையில் வேட்டை என்பது நான் மேலே குறிபிட்டது போல இன்று நேற்று தொடங்கிய ஒன்று கிடையாது. பாரம்பரியமாக நடைபெறும் மனித வாழ்வியலோடு இணைந்த ஒரு விடயம். எனினும் மித மிஞ்சிய வேட்டையாடுதல் குறித்த விலங்குகளை இல்லாமல் செய்வதோடு மொத்த சூழல் சம நிலையையும் பாதித்துவிடும்.

ஒவ்வொரு விலங்கும் ஒவ்வொரு பறவையும் ஒவ்வொரு தாவரமும் தான் வாழும் சூழல் தொகுதியில் ஒரு பணியை ஆற்றவே படைக்கப்பட்டிருக்கின்றன. சூழலின் நிலை பேறு தன்மையை தீர்மானிக்கும் பங்குதாரர்கள். அவற்றின் தொடர்புகள் மற்றவற்றுடன் பின்னிப் பிணைந்தவை.

ஒரு பங்காளி அழிக்கப்படும் போது ஏனைய தொடர்புகளும் தொடர்ச்சியற்று அழிந்துவிடுகின்றன. இந்த நிலை எதிர்காலத்தில் மனித மற்றும் இதர உயிரிகளின் நிலவுகைக்கே உலை வைத்துவிடும். ★



## சொல்லுங்கள் – 07 — வெல்லுங்கள்

கீழுள்ள வினாவுக்குரிய விடையைத் தபால் அட்டையில் எழுதி அனுப்புங்கள். சரியான விடை எழுதும் ஐவருக்கு பணப்பரிசு காத்திருக்கிறது. பலர் சரியான விடையை எழுதி அனுப்பியிருப்பின் குலுக்கல் முறையில் வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

வினா - இந்திய முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் எப்போது காலமானார்?

விடை:.........................................

முதற்பரிசு - ரூபா. 2000.00
இரண்டாம் பரிசு - ரூபா. 1500.00
மூன்றாம் பரிசு - ரூபா. 1000.00
ஆறுதல் பரிசுகள் - ரூபா. 500.00 இருவருக்கு

**முடிவுத்திகதி: 10.08.2016**

அனுப்பவேண்டிய முகவரி:

"சொல்லுங்கள் வெல்லுங்கள்" - 07
⇨ புதுவிதி, 107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

## சொல்லுங்கள் வெல்லுங்கள் -05 முடிவுகள்

**விடை : ஜூலை 8ஆம் திகதி காஷ்மீரில் சுட்டுக் கொல்லப்பட்ட போராளி புர்ஹான் வானி ஆவார்.**

**முதலாம் பரிசு - ரூ. 2000**
1. க.றஜிதா
புதன் வயல், முள்ளியவளை.

**இரண்டாம் பரிசு - ரூ. 1500**
2. எஸ்.சர்மாளா
கே.கே.எஸ். றோட், மாவிட்டபுரம்,
யாழ்ப்பாணம்.

**மூன்றாம் பரிசு - ரூ. 1000**
3. யோகப்பிரியா நவநீதன்
வெள்ளாங்குளம், மன்னார்.

**ஆறுதல் பரிசு - (தலா ரூ.500 வீதம்)**

i. அ.அமரதேவர்
3ஆம் குறுக்குத்தெரு,
சின்னத்தோட்டம், பருத்தித்துறை.

ii. ஏ.சீ.எம்.நுதம்மில்
இல.179, நிவ்எல்பிட்டிய, கெலிஓயா.


(பரிசில்கள் விரைவில் அனுப்பி வைக்கப்படும்)

புதுவிதி PUTHU VITHI

### பாராட்டுப்பெறுவோர்

பு.சிவசங்கர் - திருநெல்வேலி
கே.எஸ்.சிவஞானராஜா - கொக்குவில்
குகன்ஜா பிரமதாஸ் - தையிட்டிப் புலம்
கே.குகேஸ் - கந்தர்மடம்
கே.சுவர்ணலதா - அல்வாய்
சு.கெங்காதரன் - கரவெட்டி
ஞா.இம்மனுவல் - குருநகர்
சு.மாதவி - சண்டிலிப்பாய்
இ.சிவசிறிதரன் - வட்டுக்கோட்டை
கு.அட்சரன் - யாழ்ப்பாணம்
ர.சயூன்சன் - மானிப்பாய்
வ.வித்தகன் - துணுக்காய்
திருமதி ரூ.ஸ்ரீனிவாசன்
மு.ந.ஸஹீட் சுவைஹர் - திருகோணமலை

# சக்தீ பால- ஐயா: ஒரு சரிதம்



ஸ்ணு கலை - ஸ்ரீ

**‘26-07-2016 ஆம் ஆண்டு லிந்துலையில் பிறந்த கவிஞர் அ.சக்தீ பால- ஐயா அவர்கள் தமது 10 ஆவது வயதிலே காந்தி பக்தனாகி கதரணிய தொடங்கியவர். எழுத்தாளர், ஊடகவியலாளர் என பல்வகைப் பரிமாணங்களோடு மக்களுக்கு அறிமுகமானவர். பல்வேறு நூல்களை எழுதி தமிழுக்கு பெருமை சேர்த்தவர். 02.08.2016- அவரின் 3 ஆவது நினைவாண்டாகும்.’**

மாஸ்டர் என்று எல்லோராலும் மதிப்போடு அழைக்கப்படும் சக்தீ பால - ஐயா அவர்களை நினைக்கும் பொழுது பிரமிப்புத்தான் வருகிறது.

“எப்படி எல்லாம் வாழ கூடாதோ அப்படி எல்லாம் வாழ்ந்தவன் நான்” என்றார் கவியரசர்.

எப்படியெல்லாம் வாழ்வது கடிதோ அப்படி வாழ்ந்த ஓர் அற்புதமானவர் மாஸ்டர்.

உயர்வானவற்றைப் புரிந்துக் கொள்ளுதல் சிரமம். மாஸ்டரை புரிந்துக் கொள்ளுதலும் கூட அப்படித் தான் சிரமமான ஒன்று.

2009 ஆம் ஆண்டளவில் தான் அவருடனான நேரடித் தொடர்பு எனக்குக் கிட்டியது. அதற்கு முன் பல முறை கொழும்புத் தமிழ்ச் சங்கத்திலும், புறக் கோட்டையிலும் அவரை கண்டிருந்த போதும் அவருடைய அதீத தனிமைப் போக்கால் மற்றவர்களுடன் போல என்னால் அவருடன் நெருங்க முடிந்திருக்கவில்லை.



**தெளிவத்தை ஜோசப் அவர்கள் என்னிடம் சொன்னார்கள். ஒரு மனுசன் 89 வயசு வரை நல்லவராக வாழ்வது என்பது அத்தனை சாதாரணமான விசயமா? அதை சக்தி செய்து இருக்கு என்றார். அது எத்துணை சத்திய வார்த்தை..!**

நானாக என்னை அறிமுகம் செய்து கொள்ளும் அளவுக்கு என்னிடம் எந்த அடையாளங்களும் இல்லை.

2009 ஆம் ஆண்டு ஒரு மரபுக் கவிதைப் போட்டியில் எனக்குக் கிடைத்த முதலாமிடத்தை பாராட்டி ஒரு கடிதம் அனுப்பி இருந்தார். நான் தொழில் புரிந்த பீபள்ளல் தொகுதிக்கு மாஸ்டர் அடிக்கடி வருவதுண்டு.

அப்படி ஒரு நாளில் தான் மாஸ்டரின் கடிதத்திற்கும் வாழ்த்துக்கும் நன்றி சொன்னதோடு அறிமுகம் ஆனேன்.

### மாஸ்டர் தந்த அதிர்ச்சி

2011 ஆம் ஆண்டு அவருடைய நூல் வெளியிட்டு விழாவில் கவி வாழ்த்து நிகழ்த்துமாறு கேட்டுக் கொண்ட போது ஒரு கணம் அதிர்ந்து போனேன்.

ஏறத்தாழ எனக்கும் மாஸ்டருக்குமான வயது இடைவெளி 60 ஆக இருந்தது. மாஸ்டர் எழுதிய எழுத்துக்கள், ஓவியங்கள், பெற்ற விருதுகள் குறித்த மல்லிகை, ஞானம் போன்ற சஞ்சிகைகளில் வாசித்தறிந்திருந்தேனே அன்றி அவரால் மொழி பெயர்க்கப்பட்ட சி.வி.வேலுப்பிள்ளையின் ‘தேயிலை தோட்டத்திலே’ என்ற நூல் இவையன்றி வேறேதும் அறிந்திலேன்.

அந்நூல் வெளியீட்டு விழாவை மலை நாட்டு எழுத்தாளர் மன்றமே ஏற்பாடு செய்திருந்தது. மாஸ்டர் குறித்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள திலகரை வினாவிய போது, திலகர் அண்ணா சொன்னார்கள்.

“அவரைப் பற்றி அறிந்து கொள்ளணும் என்றால் அவர் வீட்டில் சென்று பாருங்கள் புரியும்” என்று. பின்பு அண்ணாவே என்னை அழைத்தும் போனார்.

### இதுதான் அவர் வாழ்க்கை

துறவறக் கோலம் பூண்டு கொண்டு சம்சார வாழ்க்கை செய்பவர்கள் மத்தியில் சுத்த பிரம்மச் சாரியாய் ஓர் அறைக்குள் அடக்கமாக இருந்தார் மாஸ்டர், வத்தளையில் பாத்திமா வீதியில் உள்ள தனது சகோதரரின் மகள் வீட்டில்.

அவ்வறைக்குள் திரைச் சேலை இடப்பட்ட ஒரு பகுதிக்குள் சுவாமிப் படங்களும் மறு சுவரில் அவரது குருவான தத்துவமேதை ஜிட்டு கிருஸ்ண மூர்த்தியின் புகைப்படமும் இருந்தன. தவிரவும் ஒரு கட்டில், தாயாரினதும் அவரினது மானசீக மேசை, புத்தகங்கள் என ஒரு சராசரி படைப் பாளியின் அடையாளங்களுடன் மேற்சொன்ன பொருட்கள் மாஸ்டரைப் போலவே பெறுமதிமிக்க பழமையுடனும் இருந்தன. கூடவே சமையலறைப் பாத்திரங்களும் பொருட்களும். அந்த ஒற்றை அறைக்குள்ளே தானே சமைத்து, எழுதி, தொழிலுக்குச் சென்று வந்து ஓய்வெடுத்திருந்தார். இந்த இடத்தில் ஒரு விடயத்தை குறிப்பிட வேண்டும்.

மாஸ்டரின் அண்ணன் மகள் குடும்பத்தினர் அவரை கவனிக்கவில்லை என்றோ 89 வயது வரை அவரே சமைத்து சாப்பிட்டார் என்றால் அவர்கள் ஒரு வேளை உணவு கூடச்செய்து கொடுக்கவில்லை என்றோ பொருள் இல்லை. இந்த வாழ்க்கை முறைமை மாஸ்டராகவே விரும்பி ஏற்றுக் கொண்டாரே அன்றி அவர் கவனிப்பாரற்று அவ்வாறு வாழ்ந்தவர் கிடையாது.

### பிடித்துப்போன பிடிவாதம்

மாஸ்டரின் அண்ணன் மகள் இந்திரா அக்கா அவர் மீது அத்தனை அன்பு கொண்டவர்.

அவருக்காக எதையும் செய்ய எப்போதும் முழுமனதுடன் இருந்தவர். ஆயினும் மாஸ்டர் யாருக்கும் இடையூறாக இருந்துவிடக் கூடாது என்பதில் மிக உறுதியாய் இருந்தார். எனக்கு அவரில் மிகப் பிடித்ததே அவரின் அந்தப் பிடிவாதம் தான். அந்தப் பிடிவாதம் எத்தனை அர்த்தமானது என்று எனக்குத் தெரியவில்லை. அந்தப் பிடிவாதத்தில் இருந்த அழுத்தம் கனதியானது. எவரிடத்திலும் எந்த உதவியோ, கடனோ எதுவுமின்றி தன்னை மட்டுமே நம்பி தனது தேவைகளை தானே நிறைவேற்றி வாழ்ந்த அந்த பிடிவாதம் பிடித்திருந்தது.

### தத்துவ வழியில் வாழ்வு

தத்துவமேதை ஜிட்டு கிருஸ்ணமூர்த்தியைப் பற்றி மாஸ்டர் மூலமாக அதிகம் அறிந்துக் கொண்டேன்.

ஜிட்டுவைப் பற்றி வியந்து, வியந்து எனக்கு விபரித்துக் கொண்டிருந்தார். ஆனால் மாஸ்டரின் வாழ்க்கை முறை முன் தத்துவமேதை ஜிட்டு கிருஸ்ணமூர்த்தி எனக்கு எந்த பெரிய தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை என்பது உண்மை. தத்துவங்கள் சொல்வது இலகுவாக இருக்கலாம். அதை அப்படியே நடைமுறைப்படுத்தி ஒழுகுவது என்பது இலகுவானதா? தத்துவமேதை ஜிட்டு கிருஸ்ணமூர்த்தி எப்படி வாழ்ந்தார் என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் மாஸ்டர் ஒரு தத்துவமாகவே வாழ்ந்து கொண்டிருந்தார். அன்று தான் “சக்தீ பால - ஐயா கவிதைகள்” புத்தகம் கிடைக்கப் பெற்றேன்.

ஒரே ஒரு பிரதியே அவரிடன் இருந்ததால் மிகவும் கவனத்தோடு கையளித்தார்.

### மின்சாரத்துக்குத் தடை

மாதம் ஒருமுறையேனும் மாஸ்டரின் தொழிலிடத்திற்குச் சென்று அவரைச் சந்தித்து வருவதுண்டு. அவரின் இருப்பிடம் போலவே தொழிலிடமும் ஓர் அசாதாரணமானது தான். டேம் வீதியிலுள்ள ஒரு வியாபார கட்டிட தொகுதியில் 2 ஆம் மாடியில் ஓர் அறை. அங்கும் சில சுவாமிப் படங்கள், ஒருமேசை, இரண்டு கதிரைகள், சில புத்தகங்கள், ஒரு தட்டச்சு இயந்திரம். 83 ஆம் ஆண்டு இனக் கலவரத்தில் பறிபோன புத்தகங்கள், ஓவியங்கள், பத்திரிகைகள் இன்னும் சில வியாபார கட்டடங்கள் போக, எஞ்சியவை கொண்டு 89 வயது வரை மொழி பெயர்ப்பு, எண் சோதிடம், தட்டச்சு என சுய தொழில் புரிந்தார்.

அந்த தொழிலிடத்திலும் ஓர் ஆச்சரியம் இருந்தது. மாஸ்டரின் அந்த கட்டடத்திற்கு மட்டும் மின்சாரம் கிடையாது. அதுவும் மாஸ்டரே விரும்பி ஏற்றுக் கொண்ட விதி தான். சூரிய ஒளிபடும் திசையில் தனது தட்டச்சு இயந்திரத்தை இடம் பெயர்த்து வைத்துக் கொண்டே தொழில் பார்த்தார். அதன் மூலம் பெறும் வருமானத்தைக் கொண்டே சமையல் பொருட்கள் மருந்துப் பொருட்கள், பஸ் கட்டணங்கள் போன்றவற்றை நிர்வகித்தார்.

### ஓய்வில்லா உழைப்பாளி

மாஸ்டரைக் காண சென்ற எந்தப் பொழுதும் அவர் ஓய்வாக இருந்து நான் கண்டதில்லை. மொழி பெயர்த்துக் கொண்டு தட்டச்சு செய்து கொண்டு இருப்பார். தன்னைப் பற்றியோ பிறரைப் பற்றியோ மாஸ்டர் என்னுடன் பேசிய எந்த பொழுதிலும் பேசியது கிடையாது.

என்னைப் பற்றி என்னிடம் பேசுவார். எங்கு தங்கி இருக்கின்றீர்கள்? தங்கி இருக்கும் இடம், எவ்வளவு உழைக்கின்றீர்கள்? எவ்வளவு சேமிக்கின்றீர்கள்? இருக்கும் இடம் எப்படிப் பாதுகாப்பானதா? என்பதாய் இருக்கும். இருக்குமிடம் ஒழுக்கமான இடமாக இருக்க வேண்டும். அவசியம் உழைப்பதில் ஒரு பகுதி சேமிக்க வேண்டும் என்பதை அடிக்கடி வலியுறுத்துவார். அழகான தெளிவான மொழியிலே பேசுவார். கொச்சை தமிழிலோ கடிந்தோ யாரையும் குறை கூறியோ நான் கேட்டதில்லை. விரிந்த மனதால், வாக்கால், உடலால், சுயநலமற்று தூய்மையாக வாழ்ந்தார்.

### நுட்பமான அவதானிப்பு

மாஸ்டர் உடல்நலம் குறைந்து காணப்படுகிறார் என்று அறிந்து கடந்த 2013 ஆம் ஆண்டு மே மாதம் அவரைக் காண அவர் இல்லம் சென்றேன். கொஞ்சம் நினைவுகள் அழிந்து, அழிந்த நினைவு மீட்டி உரையாடினார்.

அப்பொழுதும் கூட “எங்கிருந்து இப்போது வந்தீர்கள்? யாருடன் வந்தீர்கள்” எனக் கேட்டார்.

**(08 ஆம் பக்கம் பார்க்க...)**



# கல்வேலிகள்

நெடுந்தீவு மேற்கில் சுண்ணக் கற்பாறைகள் காணப்பட, தீவின் கிழக்கில் முருகை கற்பாறைகள் காணப்படுகின்றன. தீவின் மத்திய பிரதேசத்தில் நில மட்டத்திற்கு மேலே வெளிப்பட்டவாறு இக் கற்பாறைகள் காணப்படுகின்றன. இவை நீர் முருகை, மாமுருகை என்ற பெயர்களால் அழைக்கப்படுகிறது. நெடுந்தீவின் மேற்கே மிக வலிமையுடைய கோழாங்கற் பாறைகள் காணப்படுகின்றன. இவை சாறாப்பிட்டி, பெரியதுறை போன்ற இடங்களில் அதிகம் படர்ந்துள்ளன. கற்பாறைகள் உடைப்பதற்கு கடினமானவையாக காணப்பட்டாலும் இங்குள்ள மக்களால் தமது வச்சிரம் பாய்ந்த கைகளினால் இலகுவாக உடைத்துவிட முடிகின்றது.

நெடுந்தீவின் மத்திய பகுதியானது முன்னோர்களின் கால்த்திற்கு முதல் கடல் பகுதியாக இருந்திருக்கலாம் என ஆய்வாளர்களால் ஊகிக்கப்படுகின்றது. காரணம் மத்திய பகுதியின் நிலத்தினை தோண்டும் பொழுது அதிக ஆழம் வரை சிப்பிகள், சங்குகள், ஊரிகள், போன்றனவும் மண் உவர்க்களியாகவும் நிலக்கீழ் நீரானது அதிக உப்புத்தன்மையாகவும் வெளியே தெரியும் பாறைகள் கரடு முரடாகவும் இருப்பதும் இதற்கான காரணமாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தில் நெடுந்தீவு மற்றும் இடைக்காட்டு பிரதேசங்களில் காணப்படும் கல்வேலிகள் யாழ்ப்பாணத்தின் ஒரு மரபுசார்ந்த கட்டடக்கலையின் ஆதாரமாய் இருக்கின்றன. கல்வேலிகளை பொறுத்தவரை அவை கிட்டத்தட்ட நூறு வருடங்களுக்கும் அதிகமான மரபுவழி விவசாயத்தின் விளைவென்றே கூறுதல் சிறப்பானது, பயிர் நிலங்களை கால் நடைகளின் தாக்கத்தில் இருந்து பாதுகாக்க இவை ஆரம்பத்தில் உருவாக்கப்பட்டன, கற்களை ஒன்றன் மேல் ஒன்று அடுக்கி செப்பனிட்டு கட்டப்படும் வேலிகள் ஒரு அலங்கார கட்டடக்கலையின் ஆரம்பம் என்பதும் சான்று.

முருகைக்கல் பாறைகள், சுண்ணக்கல் போன்றவற்றால் பொதுவாக இவை அமைக்கப்பட்டாலும், நவீன கட்டிடக்கலையின் விளைவினால் யாழ்ப்பாணத்தின் பல பிரதேசங்களில் இவை அருகிப்போயுள்ளன. ஆகக் கூடுதலான கல்வேலிகள் தற்போது நெடுந்தீவுப்பிரதேசத்திலையே காணப்படுகின்றன. நெடுந்தீவை கட்டமைக்கும் ஒரு மரபுசார் சின்னமாக இந்தக் கல்வேலிகள் இருக்கின்றன.

நெடுந்தீவில் காணப்படும் கல்வேலிகள் பவளப்பாறைகளால் ஆனவை. அதுவே நெடுந்தீவின் கடல்வளத்தின் அடையாளம். கல்வேலிகளைப் போலவே அவை அமைக்கப்படும் பவளப்பாறைகளும் மிக முக்கியமானவை. இலங்கையை பொறுத்தவரையில் பவளப்பாறைகள் அதிகம் காணப்படும் இடங்களாக. அம்பலாங்கொட, மாத்தறை கடற்கரைப்பகுதி. தங்காலை கடற்கரைப்பகுதிகள் மட்டக்களப்பு - பாசிக்குடா, கல்குடா பகுதிகள். மன்னார், கற்பிட்டி கடற்கரை. யாழ்ப்பாணம், பருத்தித்துறை, நெடுந்தீவு பகுதிகள். திருகோண மலைக் கடற்கரைப் பகுதிகள் - புறாத்தீவு, பவளப் பாறைத் தீவுப்பகுதிகள் இருக்கின்றன.

நெடுந்தீவின் ஒரு தனியான கனிமவளமாக இருக்கும் பவளப் பாறைகளும், அதனால் அமைக்கப்படும் கல்வேலிகளும் திருடப்படுதல் அகல்தல் மரபழிந்து போதல் போன்ற காரணங்களிலிருந்து பாதுகாக்கப்படு தலை உறுதிப்படுத்த வேண்டும்.

## மரபுரிமைப்போட்டி - 07

**நல்லூர் கோயில் அமைந்துள்ள காணியின் பண்டைய பெயர் என்ன?**

சரியான விடை எழுதி அனுப்புபவர்களில் ஒருவருக்கு குலுக்கல் முறையில் ரூபா. 1000 பரிசாக வழங்கப்படும். முடிவுத் திகதி 10.08.2016

அனுப்பவேண்டிய முகவரி: புதுவிதி, 107, இராச வீதி, கோப்பாய், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

## மரபுரிமைப்போட்டி - 05 முடிவு

சரியானவிடை - **மாயக்கை நிலக்கீழ் கற்குகை அல்வாயில் அமைந்துள்ளது.**

வெற்றிபெற்றவர்: **சரியான விடை எதுவும் அனுப்பப்படவில்லை.**



# துலா


விவசாயத் தேவைக்காகவும், வீட்டுத் தேவைக்காகவும் நீரைப் பெற்றுக் கொள்வதற்காக கண்டறிந்த பொறியே துலா ஆகும். பெரும்பாலும் பூவரசு மரத்தால் அமைக்கப்பட்ட ஆடு காலில் தென்னை அல்லது பனை மரத்தைச் சீவி செய்யப்பட்ட துலா பொருத்தப்படுகிறது.

விவசாய நிலங்களில் இருந்த கிணறுகள் மிகவும் ஆழமானவை. இந்தக் கிணறுகளில் இருந்து தண்ணீரை விவசாய நிலத்துக்கு பாய்ச்சுவதற்கு துலா மூலம் அள்ளி ஊற்றுவது, சூத்திரப் பொறி முறையை பயன்படுத்தி இறைப்பது என்ற இரண்டு வழிமுறைகள் கையாளப்பட்டன.

துலா மூலம் அள்ளி ஊற்றும் போது துலா கயிற்றை பிடித்து தண்ணீரை அள்ளி ஊற்றுவதற்கு ஒருவரும் துலாவின் மேல் ஏறி நின்று முன்பின் அசைந்து (துலா மிதித்தல்) தண்ணீர் அள்ளுவதை இலகுவாக்க இருவரும், அதை பயிருக்கு வாய்க்கால் மடைகளை திறந்து பாய்ச்சவதற்கு ஒருவரும் என்று குறைந்த பட்சம் நான்கு பேர் தேவைப்பட்டார்கள்.

தமிழர் வாழ்வோடு ஒன்றிப் பிணைந்த இதுவும் இன்று மறக்கப்பட்டுவிட்டது. எனினும் ஊர்ப்புறங்களில் இதை இன்றும் காணும் போது மெய் சிலிர்க்கும்.

# தேசவழமைச் சட்டம்



தேச வழமைச் சட்டம் என்பது ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்துக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் வழங்கிய வழக்கங்களை (customs) அடிப்படையாக வைத்து யாழ்ப்பாண முதலிமாரின் உதவியுடன் ஒல்லாந்தரால் தொகுக்கப்பட்ட ஒரு சட்டம் ஆகும்.

தேசவழமை என்பதன் பொருள் ஒரு தேசத்தின் வழக்கம் என்பதாகும். மக்களிடையே இதற்கிருந்த பிரபலத்துவம் காரணமாக ஒல்லாந்தரால் இது 1707 ஆம் ஆண்டு எழுத்து மூலமாக்கப்பட்டது.

பின்னர் ஆங்கிலேயரால் 1806 ஆம் ஆண்டு சட்ட மூலமாக்கப் பட்டது. இச் சட்டமானது பின்னர் 1869 இலும் பின் 1911 இலும் கடைசியாக 1948 இலும் திருத்தியமைக்கப்பட்டது.

இச் சட்டமானது உடமை, உரிமைகள் பற்றியும் திருமணம் பற்றியும் விபரமான வரையறைகளை விபரிக்கின்றது. இலங்கையில் பொதுவான சட்டமான பொதுச்சட்டக் கோவைக்கு மேலதிகமாக உள்ள மூன்று சட்டங்களில் தேசவழமைச் சட்டமும் ஒன்று. ஏனையவை இரண்டும், கண்டிச் சட்டம், இசுலாமியச் சட்டம் ஆகியவையாகும்.

கண்டிச் சட்டமானது கண்டி வாழ் பௌத்தர்களுக்கும், இஸ்லாமியச் சட்டமானது இலங்கை வாழ் இஸ்லாமியர்களுக்கும், தேச வழமைச் சட்டமானது வட மாகாணத்தில் வாழும் மக்களுக்கும் மாத்திரமே இயல்புடையதாகிறது.

# கச்சான்... கடலை... காலங்கள்....!

நேர்காணல் -
கணபதி சர்வானந்தா



‘ஆரம்பத்தில் இரண்டு சதத்திற்கு ஒரு சரை கச்சான் விக்கத் தொடங்கினன். இப்ப அதே அளவு கச்சான் இருபது, அம்பது எண்டு ஏறிட்டு. அந்தக் காலத்தில இந்தியாவில இருந்து கச்சான், பட்டாணி, கொண்டைக் கடலை எண்டு கொண்டு வருவினம். அதுகள் நல்ல தரமும், ருசியும்’

என்றும் போல், அன்றும் வண்ணார் பண்ணைச் சிவன் கோவிலருகில் ‘வறுத்துக் கொட்டும்’ அந்த உச்சி வெயிலிலும் தனது கடமையில் கண்ணாயிருந்தார் ஜானகி சங்கர ஐயர் என்கிற அந்த கச்சான் ஆச்சி. சிவன் கோவிலைக் கும்பிட வராதவர்கள் கூட, ஜானகி ஆச்சி/ஜானகிப் பாட்டியிடம் கச்சான் வாங்க தவறாமல் வந்துவிடுவார்கள். அந்தளவுக்கு ஆச்சியின் கச்சான் பிரபலம்.

கணவன் இல்லாத தனிக் கட்டையான ஜானகி ஆச்சிக்கு ஒரு மகன். அவர் இந்தியாவில் குடியேறிப் பல வருடங்களாகின்றன. அவ்வப்போது ஆச்சி சென்று அவரைப் பார்த்துவிட்டு வருவார். மரபு சார்ந்த அடையாளங்களோடு காட்சி தருகின்ற வண்ணைச் சிவன் ஆலயத்திற்கு அழகு சேர்க்கும் விடயங்களுள் ஜானகியின் குட்டிக் கடலைக் கடையும் ஒன்று. ஜானகி வராத நாட்களில் கோயில் முகப்பு வெறுமையாகக் காட்சிதரும். அந்த நாட்களில் எமக்குள்ளும் ஒரு வெற்று உணர்வு வந்து போகும். தனது கரங்களை அதிகம் நம்பி வாழ்வபவர். தனது உழைப்பில் அதிகம் நம்பிக்கை கொண்டவர், ஜானகி.

உச்சி வெயிலில் கச்சான் வாங்க ஆட்கள் வருவதாக இல்லை. அந்த இடைவெளியில் கச்சானுக்கான கடதாசிப் பைகளை ஒட்டிக் கொண்டிருந்தார். அவரிடம் லேசாகக் கதைக்க ஆரம்பித்தோம்.

“அம்மா! எப்படி இருக்கிறீங்கள்?” யாரு? என்னையா கேக்கிறீங்க? பார்த்தா தெரியலை..! நான் என்ரை பாட்டிலை ‘பாக்’ ஒட்டிக்கொண்டே இருக்கிறன். என்ன இந்த நேரம்? சிரித்துக் கொண்டே பேசினார் ஜானகி.

“உங்களோடை கொஞ்சம் பேசோணும்” - இது நாம்.

“சனிக்கிழமை காலையிலை வாங்க. வடிவா சொல்லுறன். நீங்க கேக்கிற எல்லா கேள்விகளுக்கும் பதில் சொல்லலாம்” என்று சற்றுப் பின்னடித்தார் ஆச்சி.

கொஞ்சம் நிமிர்ந்து பார்த்தார். நாம் அவரிடம் கேட்க வேண்டியதைக் கேட்டு முடிக்காமல் நகரமாட்டோம் என்பது போல அருகிலேயே உட்கார்ந்து கொண்டோம்.

நாங்க இந்திய வம்சாவழி. ஆனால் நான் பொறந்தது வளர்ந்தது எல்லாம் யாழ்ப்பாணம். இந்த இடத்திலை இந்த சிவன் கோயில் வாசலிலை ஐம்பது அறுபது வருஷமா கடலை யாவாரம் பண்ணிக் கொண்டு வாறன். அவர் உரையாடலில், இந்தியத் தமிழ் யாழ்ப்பாணத் தமிழோடு இணைந்து செல்வதைக் கேட்க செவிக்கு இன்பமா இருந்தது.

“எங்கடை வீடு கோயிலுக்குப் பின்னாலை தான் இருந்திச்சு.நான் படிச்சது அங்க பக்கத்திலை இருக்கிற வித்தியா சாலையிலை. இப்ப அதுக்கு வேறை பேர். ஐஞ்சு வரையும் தான் படிச்சன். எனக்கு படிப்பிச்ச வாத்தியார் கொக்குவிலிலையிருந்து வருவார். நல்லா படிப்பிச்சுக் கொடுத்தாரு. ஆனால் அந்தக் காலத்திலை அதுக்கு மேலை படிக்க வீட்டிலை விடேல்லை. அந்தக் காலம் அப்பிடித்தான். எனக்கு இப்ப எண்பத்திரண்டு வயசாகுது. இந்த யாவாரத்தைத் தொடங்கி எப்பிடியும் ஐம்பது வருஷத்திற்கு மேலைதான் இருக்கும். இது எங்க பரம்பரைத் தொழிலே இல்லை. எங்க ஐயா சாக்கு யாபாரம். அவருக்கு ஒத்தசையாயிருக்க வேணுமேயெண்டு இதை தொடங்கீட்டன். அப்பா வகுப்பு வேலை. அம்மா கடையளுக்கும் வீடுகளுக்கும் கூலி வேலை செய்யப் போவா. அப்பிடித்தான் நம்ம குடும்பம் இருந்திச்சு.பிறகு எல்லாரும் கச்சான் யாவாரத்துக்கு வந்திட்டம்” ஆச்சி பிரேக் போட்டு விட்டு , ஒருவருக்கு கச்சான் விற்பதில் மும்முரமானர்.

மீண்டும் ஆச்சியை பழைய இடத்துக்கு கூட்டி வருவதற்காக கேள்வித்தூண்டிலை வீசினோம்.

“கச்சான் கடலையெல்லாம் இங்க கொண்டுவந்தோ வறுக்கிறானீங்கள். இல்லாட்டி வீட்டில தானோ?”

எதிர்பார்த்த மாதிரி எங்கள் கேள்வி வேலை செய்தது. ஆச்சி விட்ட இடத்துக்கு வந்திட்டா.

“நாங்க கச்சான் யாவாரம் துடங்கின காலத்தில இருந்து வீட்டிலை இருந்துதான் கடலையை வறுத்துக் கொண்டு வருவம். காலையிலை 9 மணி 10 மணிக்கு வந்தா, சாயாந்தரம் 5 மணி வரை இங்கேயே இருப்பன். காலையிலையே சமைச்சு எடுத்து கிட்டு வருவன். சாப்பாடு கொண்டு வராத நாட்களிலை இங்கை கொண்டு வாறவங்ககிட்ட வாங்கிடுவன்.

கடலை வாங்க நிறையப்பேர் வருவாங்க. அவங்களை யார் யார் எண்டு நான் நினைவு வைச்சுக் கொள்றேலை. பெரிய பெரிய ஓபிஸர்மார், கோயிலுக்கு வாறவங்க,றோட்டாலை போறவங்க, பஸ்ஸுக்காக ‘டெயிலி’ வந்து நிற்கிறவங்க எல்லாரும் கடலை வாங்குவாங்க. வீட்டுக்கும் வாங்கிக் கொண்டும் போவாங்க. கடலை வறுக்கோணும். அதை சுத்தமாக்கோணும். வீட்டு வேலை எண்டு எந்த நாளும் பல ஜோலிகள் இருக்கே. என்னத்தை செய்ய. ஓய்வே இல்லாம வாழ்க்கை ஓடுது” கொஞ்சம் சலித்துக் கொண்டார். பஸ்ஸுக்கு காத்திருக்கும் நேரத்தில் கொஞ்சம் கடலை போட்டு.. மன்னிக்கவும்... கடலையைக் கொறித்து நேரத்தைப் போக்காட்டுபவர்கள் பலர். அந்த வகையில் பஸ்களின் வருகைத் தாமதம் கூட ஆச்சியின் விற்பனை அதிகரிப்புக்கு காரணமாகிவிடுகிறது.

“ஒவ்வொரு நாளும் காலமை வந்து பொழுதுபட வீட்டை போறாதெண்டா, கோயில் குளம், கலியாண வீடு - செத்த வீடு இப்பிடி நல்லது கெட்டது ஒண்டுக்கும் போறதில்லையா?”

இது என்ன அர்த்தமற்ற கேள்வி என்பது போல ஆச்சி ஒரு பார்வை பார்த்தார்.

“எனக்கு எல்லாமே இதுதான். வீண் ஜோலிக்குப் போறதேயில்லை. அங்க இங்க போறதெல்லாம் தேவையில்லாத வேலை. நான் உண்டு என்ர வேலை உண்டு. அவ்வளவு தான். நான் சந்நிதி, நல்லூர், நயினாதீவு கோயில் எண்டு எல்லாத் திருவிழாக்களுக்கும் போய் கடலை யாபாரம் பண்ணுவன். அந்த நேரங்களில மட்டும் சிவன் கோயிலடிக்கு வரமாட்டன். மற்றும் படி நித்தமும் இங்க தான். முன்னம் எப்பவாவது ஒரு தடவை ஆசை வந்தா சினிமாப் படம் பாக்க ஐயாவோட (ஆச்சியின் கணவர்) தியேட்டருக்கு போவன். அந்தக் காலத்திலை வின்ஸர் தியேட்டரிலை நிறையப் படம் பார்த்திருக்கேன். பேர்தான் ஞாபகமில்ல. ஆராரோ எல்லாம் நடிச்ச படம். ஐயாவும் நானும் தான்போய் பார்த்திருக்கோம். இப்பெல்லாம் சினிமாக்குப் போறதில்லை. கண்வேற ஓப்ரேஷன் பண்ணிக் கிடக்கு. முன்னைய மாதிரி பாக்கேலாது”

“இந்தக் கச்சான் வியாபாரத்தில அந்தக் காலத்துக்கும் இந்தக் காலத்துக்கும் என்ன வித்தியாசம்?” எங்களின் இந்தக் கேள்வி காதில் விழுந்ததும், நாற்சார் வீட்டைப் பாக்கிறா செவ்வாய்க்கிரகவாசி போல மலங்க மலங்க முழித்தார். பிறகு எங்கள் கேள்வியை கொஞ்சம் கொஞ்சமா அவருக்கு விளங்கும் வகையில் மொழிபெயர்க்க, தெளிந்தார்.

“ஆரம்பத்தில் இரண்டு சதத்திற்கு ஒரு சரை கச்சான் விக்கத் தொடங்கினன். இப்ப அதே அளவு கச்சான் இருபது, அம்பது எண்டு ஏறிட்டு. அந்தக் காலத்தில இந்தியாவில இருந்து கச்சான், பட்டாணி, கொண்டைக் கடலை எண்டு கொண்டு வருவினம். அதுகள் நல்ல தரமும், ருசியும். ஆனா இப்ப அந்தளவிற்கு தரமான கச்சானோ கடலையோ இங்க எடுக்க ஏலாது. கடுதாசிப் பையில கச்சான் போட்டுக் குடுத்தாத்தான் நல்லம். கச்சானோ கடலையோ கடுதாசிப் பையில போட்டா ருசி கெடாது. இப்ப கனபேர் கடுதாசிப் பையை விட்டிட்டு சொப்பிங் பையில கச்சான் போட்டுக் கட்டிக் குடுக்கினம். என்னதான் இருந்தாலும் கடுதாசிப்பையுக்க போடுற கச்சானுக்கு அது ஈடாகாது.

எனக்கு தெரிஞ்ச ஒரே தொழில் இதுதான். சாகிற வரைக்கும் இப்பிடியே கச்சான், கடலையோடே பொழுதை போக்காட்டிடுவன்” என்று விட்டு, கடலையை ‘ஆட்டையை’ போட திட்டமிட்டு வந்து கொண்டிருக்கும் காகங்களை ‘சூய் சூய்’ என்று விரட்டத் தொடங்கினார். “சொல்றதெல்லாம் சொல்லியாச்சு தானே. பிறகும் எதுக்கடா நிக்கிறீங்கள்?” என்று, காகங்களை சாக்காக வைத்து எங்களைத்தான் விரட்டுகிறாரோ என்று ஆளை ஆள் பார்த்து விட்டு நடையைக் கட்டினோம்.



# பனித்தேச வடலி

● கபிலன்

07

நான் 9 ஆவது வயதில் இங்கே வந்திருந்ததால் எனது ஆரம்பக்கல்வி என்பது ஊரிலும் முழுமையடையவில்லை. இந்த நாட்டிலும் முழுமையடையவில்லை. 5 வருடங்களிற்கு மேலாக நான் மொழிபடிப்பதிலேயே காலத்தை செலவிட வேண்டியிருந்தது. அதன் பின்னர் கற்றதெல்லாம் என்னவோ அரைகுறை கல்விதான். பாடசாலை நேரங்கள் தவிர ஏனைய நேரங்களில் எனது அறைக்குள்ளேயே அடைந்து கொண்டேன். சாப்பாட்டு நேரத்தையும் தனிமையிலயே கழித்தேன். இந்நாட்டு மொழியில் வருகின்ற கடிதங்களை மொழிபெயர்த்து சொல்லும்படி அப்பா கேட்பார். அந்தளவு மொழியறிவு எனக்கு இருந்ததில்லை. எப்படியும் பேச்சு வாங்குவேன் என்பதை அறிந்தே இருந்தேன். எனவே அப்பா இருக்கின்ற நேரங்களில் வீட்டிலில்லாமல் இருப்பதற்கான அனைத்தையும் செய்தேன். எனதுநண்பர்கள் பலரின் வீட்டிலும் இதே நிலைதான்.

இந்த இடத்தில் சுய மரியாதைக்கும் தன்னம்பிக்கைக்கும் உள்ள வேறுபாட்டை சுட்டிக்காட்டுவது அவசியம் என கருதுகின்றேன்.

ஒரு பிள்ளையிடம் உனக்கு ஒன்றும் தெரியாது. நீ ஒரு முட்டாள். என்று சொல்வதனால் அந்த பிள்ளை தன்னம்பிக்கையில் குறையப்போவதில்லை. மாறாக தன் மீதுள்ள சுயமரியாதையை குறைத்துக் கொள்ளும். ஒரு கட்டத்தில் உண்மையிலயே தனக்கு ஒன்றும் தெரியாதா என்ற மனநிலைக்கு வந்துவிடும்.

> **இன்று வரை நான் ஒரு தனிமை விரும்பியாக ஆனதற்கு எனது சிறுவயது அனுபவங்கள் ஒரு முக்கிய பங்காற்றுகின்றன.**

இந்த மனநிலை ஏற்படும் போது அந்த பிள்ளை தனக்கு எங்கு ஏற்ற அங்கீகாரம் கிடைக்கின்றதோ அதனை நோக்கியே செல்லும்.

அறிவை மட்டும் வைத்துக் கொண்டு ஒரு பிள்ளையின் சுய மரியாதையை மட்டந்தட்டி விட முடியாது. உடலமைப்பை வைத்தும் செய்துவிட முடியும். குண்டான பிள்ளைகள் இதற்கு இன்னொரு உதாரணம். என்னை எடுத்துக் கொண்டால் நான் 13 வயதிலயே உருவத்தில் பெரியவனாக இருந்தேன். அத்துடன் மெல்லிய உடல். கொக்குத்தடி போல் வளர்ந்திருக்கிறேன் என்றார்கள். ஒரு கட்டத்தில் இப்படி வளர்ந்திருப்பது தவறான ஒரு செயல் என்ற மன நிலைக்கு நானே வந்துவிட்டேன். அந்த வயதில் பல தடவை நான் கடவுளிடம் இதற்கு மேல் நான் வளரவே கூடாது என்று வேண்டியிருக்கின்றேன்.

என்மீது எனக்கிருந்த சுயமரியாதை அறவே தொலைந்து போனது. பாடசாலையில் ஏனைய மாணவர்களிற்கு முன்னின்று பேசுகின்ற தருணங்கள் வந்தால் நான் பாடசாலை செல்வதையே தவிர்த்து விட்டேன். உச்சக் கட்டமாக எனது உடலமைப்பு பெண்களிற்கு பிடிக்கவே பிடிக்காது என்ற நிலைப் பாட்டிற்கு வந்து சேர்ந்தேன்.

இதனால் எனக்கு தன்னம்பிக்கையெல்லாம் எந்த விதத்திலும் குறைந்துவிடவில்லை. விளையாட்டுப் பாடங்களில் எனது பாடசாலையிலயே நான் தான் சிறந்த மாணவன்.

ஒரு ஆரோக்கியமான எதிர்காலத்திற்கு பிள்ளை முதலில் தன்னைதானே அங்கீகரிக்கும்படி வளர்க்க வேண்டும். நான் இப்படித்தான். எனது உடலமைப்பு இதுதான். இதில் எனக்கு எந்த பிரச்சினையும் இல்லை என்ற மனநிலைக்கு பிள்ளை தானாகவே வரும். அது எப்போது வருமென்றால் சுற்றாடல் முதலில் அந்த பிள்ளையை இயற்கை எப்படி படைத்ததோ அப்படியே ஏற்றுக்கொள்ளும் போது.

பெற்றோர் ஒன்றை கவனத்திற்கொள்ள வேண்டும். பிள்ளைகள் பெற்றோர்களின் கைவண்ணத்தில் உருவான ஓவியங்கள். அந்த ஓவியத்தில் தவறுகள் இருக்குமானால் அது உங்களின் கைவண்ணத்தின் எதிர்வினையே. இன்று வரை நான் ஒரு தனிமை விரும்பியாக ஆனதற்கு எனது சிறுவயது அனுபவங்கள் ஒரு முக்கிய பங்காற்றுகின்றன.

எனது பதின்ம வயதை எட்டியதும் எனது வயதையொத்தவர்களிற்கு வருகின்ற அனைத்துமே எனக்கும் வந்தது. எனது ஏனைய தமிழ் நண்பர்களிற்கும் இதே பிரச்சினை. பெண்கள் மீதான ஈர்ப்பு எங்களிற்கும் வந்தது. பல ஆண்டுகள் நாங்கள் இதனை வெளிப்படுத்த முடியாமல் தமிழ் சமூகத்திற்கு நல்லவர்கள் என்ற பெயருடன் வாழ வேண்டியிருந்தது. மறுபக்கம் இந்நாட்டு பாடசாலையில் படிக்கின்ற சக மாணவர்கள் எங்கள் கண்முன்னே அவர்களின் காதலியுடன் சுற்றியதையும் பார்த்தோம். உணர்வுகளை அடக்கி பெற்றவர்களிற்கும் தமிழ் சமூகத்திற்கும் நல்லவர்களாக இருப்பதே எங்களிற்கு முக்கியமாக பட்டது. ஆசைகளை அடக்கிக்கொண்டு ஒரு புறமும், ஏக்கத்துடன் மறுபுறமும் சில ஆண்டுகளை கழித்துக் கொண்டிருந்தேன். இந்த ஆண்டுகளில் எனக்குள் இருந்த நான் யார் என்று என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. எனக்குள் இருந்த நான் என்றுமே முன்னேற்றமடையவில்லை. அதற்கு தமிழ் சமூகத்திற்கு நல்லவன் என்ற பெயரை பலிகொடுக்க வேண்டியிருந்தது. அது என்னால் முடியாத காரியமாக இருந்தது.

பதின்ம வயது எங்களின் ஆசைகளை தூண்டி விட்டுக்கொண்டே இருந்தது. அதற்கு தமிழ் சினிமாவும் ஒரு காரணம். அது எப்பொழுதும் காதலைச் சுற்றியே அமைக்கப்பட்டது. தமிழ் சினிமாவில் காட்டப்படுகின்ற காதல் என்பது நிஜத்திற்கு மாறானது என்பதை அந்த வயதில் எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. சினிமாவில் வரும் கதாநாயகர்களின் வசனங்களை பேசி, அவர்களின் பாடல்களை பெண்கள் முன்கேட்டு, அவர்களை ஈர்க்க முயற்சிப்பதே அன்றைய காலத்தில் உயிர்போகும் வேலை. தமிழ் பெண்ணை காதலிப்பதன் மூலம் தமிழ் சமூகத்தில் உள்ள நல்லவன் என்ற பெயரை முழுவதும் கெட்டுப் போகாமல் பார்த்துக் கொள்ளலாம் என்றது எங்களின் அறிவு. இதுவே இந்நாட்டு பெண் என்றால் நாங்கள் தள்ளி வைக்கப்படுவோம்.

இந் நாட்டு பெண்கள் மீது எங்களிற்கு ஈர்ப்பு இருந்தாலும் அவர்களை நோக்கி நாங்கள் சென்றதில்லை. எங்களின் உடை நடை அனைத்தும் தமிழ் பெண்களிற்கு பிடித்தமான சினிமா கதாநாயகர்கள் போலவே இருந்தது. சுருக்கமாக சொல்லப்போனால் சற்று பின்தங்கியே இருந்தோம்.

எனக்கும் எனது உணர்சிகளுக்குமிடையிலான போராட்டத்தின் உச்சம் உக்கிரமடைந்து கொண்டே சென்றது. இதன் விளைவு நான் தமிழ் சமூகத்திற்கு நல்லவனாகவும் எனது உணர்வுகளிற்கு கட்டுப்பட்டவனாகவும் நடக்க வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டேன். இதிலிருந்தே எனது இரட்டை வாழ்க்கை ஆரம்பமாகியது.

(இன்னும் வளரும்...)

## உன்னுடைய மற்றும் என்னுடைய கிராமங்களின் மீதொரு பாடல்

1

எனக்குத் தெரியாது.
ஒரு ஆர்ப்பரிக்கும் கடலோரமோ
அல்லது
வனத்தின் புறமொன்றிலோ
உன் கிராமம் இருந்திருக்கும்
பெரிய கூழாமரங்கள் நிற்கின்ற
செம்மண் தெருக்களை,
வஸந்தத்தில் வந்தமர்ந்து பாடும்
உன் கிராமத்துக் குருவிகளை
எனக்குத் தெரியாது.
மாரிகளில்
தெருவோரம் கண்மலரும் சின்னஞ்சிறிய பூக்களை
நீள இரவுகளில்
உடுக்கொலித்து நீ பாடிய கதைகளை
நிலவு கண்ணயரும்
உன் வாவிகளை
நானறியேன்.

2

காற்றும் துயரப்படுத்தும்
இவ்விரவில்
நானும், நீயும் ஒன்றறிவோம்;
ஒரு சிறிய
அல்லது பெரிய
சுடுகாட்டு மேடு போலாயின
எமது கிராமங்கள்.
அலைபாடும் எங்கள் கடலெல்லாம்
மனிதக் குருதி படர்ந்து மூடியது
விண்தொடவென மரமெழுந்த வனமெல்லாம்
மனிதக் குரல்கள் சிதறி அலைய,
சதைகள் தொங்கும் நிலையாயிற்று...
முற்றுகையிடப்பட்ட இரவுகளில்
தனித்து விடப்பட்ட நாய்கள்
ஊளையிட
முந்தையர் ஆயிரம் காலடி பரவிய
தெருவெல்லாம் புல்லெழுந்து மூடியது,
நானும் நீயும் இவையறிவோம்.
இறந்து போன பூக்களை,
கைவிடப்பட்டுப்போன பாடலடிகளை...
நினைவு கூரப்படாத கணங்களை
அறிவோம்.

3

ஆனால்,
கருகிப்போன புற்களிற்கு
இன்னும் வேர்கள் இருப்பதை.
கைவிடப்பட்ட பாடல்
சொற்களின் மூலத்துள் அமர்ந்திருப்பதை
நீ அறிவாயா?
குருதி படர்ந்து மூடிய
கடலின் ஆழத்துள்
இன்னும்
எங்களின் தொன்மைச் சுடர்கள் மோனத்திருப்பதை
நீயும் அறியாது விடின்
இன்றறிக,
'ஓராயிரம் ஆண்டுகள் ஓய்ந்து கிடந்த பின்'
ஓர் நாள் சூரியன் எழுந்து
புலர்ந்ததாம்.

மாசி 1993

● **பா. அகிலன்**


(நன்றி - பதுங்குகுழி நாட்கள்)

# மாற்றாந்தாய் மனப்பாங்கா?

அயர்லாந்து - ஆப்கானிஸ்தான் அணிகளுக்கிடையிலான ஒருநாள் போட்டியில் அயர்லாந்து வீரர் எட் ஜோய்ஸை ஆப்கான் வீரர் முகம்மது நபி மோசடியாக ஆட்ட மிழக்கச் செய்தமை கண்டனத்துக் குள்ளாகி உள்ளது. எட்ஜோய்ஸ் தான் அடித்த பந்து பவுண்டரிக்குச் சென்றதாக நினைத்து மூன்றாவது ஓட்டத்தைப் பூர்த்தி செய்யாமல் நிற்க நபி பந்தை எடுத்து வீசியதனால் ரண்அவுட் முறையில் அவர் ஆட்டமிழந்துள்ளார். மூன்றாவது நடுவர் இப்போட்டிக்கு இல்லாத காரணத்தால் நடுவர் நபியிடம் கேட்டபோது பவுண்டரி எல்லைக்குள்தான் பந்தைப் பிடித்ததாக நபி கூற அதனை நம்பி நடுவரும் ஆட்ட மிழப்பைக் கொடுத்துள்ளார். பின்னர் புகைப்படங்களில் பவுண்டரி எல்லைக்கு வெளியில் இருந்தே நபி பந்தைப் பிடிப்பது தெளிவாகத் தெரியவந்ததால் குற்றத்தை ஒப்புக்கொண்ட அவருக்கு கிரிக்கெட் ஆட்ட நேர்மை உணர்வு எனும் நடத்தை விதி மீறல் பிரிவில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற ஒரு சம்பவம் 2008 ஆம் ஆண்டு இந்திய அணி அவுஸ்ரேலியாவில் விளையாடிய சிட்னி டெஸ்ட் போட்டியில் கங்குலி பிரட்லீயின் பந்துவீச்சில் மைக்கல் கிளார்க்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்ததாக ஆட்சேபம் எழுந்த பொழுது நடுவர் மார்க்பென்சன் அணித்தலைவரான பொண்டிங்கிடம் இது குறித்துக் கேட்க அவரும் ஆட்டமிழந்ததாகக் கூறியதனால் நடுவரும் ஆட்டமிழப்பை வழங்கி இருந்தார். ஆனால் அன்றைய போட்டியில் மூன்றாவது நடுவர் இருந்ததனால் பந்து தரையில் பட்டே பிடியாகி உள்ளமை தெரிந்தும் அவரது முடிவுக்கு விடாமல் கங்குலிக்கு ஆட்டமி ழப்பு வழங்கப்பட்டமை சர்ச்சையை ஏற்படுத்தி இருந்தது.

நடுவர்கள் போட்டிகளில் தவறிழைப்பது அவ்வப்போது நடந்தாலும் உள்ளூர் போட்டியான ரஞ்சி கிண்ணம் போன்ற தொடர்களிலேயே மூன்றாவது நடுவரின் பங்களிப்புடன் போட்டிகள் நடைபெற்று வருகின்ற நிலையில் இரண்டு தேசிய அணிகள் விளையாடுகின்ற ஒருநாள் போட்டியொன்றில் அதுவும் தொழில்நுட்பம் வளர்ச்சி அடைந்த இன்றைய காலத்தில் மூன்றாவது நடுவர் இல்லை என்பது சர்வதேச கிரிக்கெட் சபை டெஸ்ட் அந்தஸ்து பெற்ற நாடுகளுக்கும், வளர்ந்து வரும் நாடுகளுக்கும் இடையே கிரிக்கெட் கட்டமைப்புக்களில் சமச்சீர் தன்மையைப் பேணாது பேதம் பாராட்டுகிறதோ என எண்ணத்தோன்றுகிறது.




## வெற்றிப் பயணம்

சானியா மிர்சாவின் சுயசரிதை நூலான ACE against ODDS வெளியிடப்பட்ட தினத்திலேயே சர்ச்சைக்குள்ளாகி இருக்கிறது. நூலிலுள்ள விடயம் குறித்தே சர்ச்சை கிளம்புவது வழமை என்றாலும் இந் நூலில் சானியா குழந்தை பெறுவது குறித்தோ குடும்பத்தின் எதிர்காலம் குறித்தோ எதுவும் தெரிவிக்காததைக் குறிப்பிட்டு ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்வியால் சானியா நிதானமிழந்துள்ளார். சாதனைகள் படைக்கத் துடிக்கும் தன் மீது பெண்களின் பால் நிலைசார் நெருக்கடிகள் முன்னேற்றத்துக்குத் தடையாக இருப்பது தெரிந்தும் அவ்வாறானதொரு கேள்வியை எவ்வாறு கேட்கலாம் என்பதே சானியாவின் ஆதங்கமாக இருந்தது.

பிறப்பால் இஸ்லாமியரான சானியா மிர்சாவின் விளையாட்டுலக வரவு மகிழ்ச்சிக்குரிய ஒன்றாக அமையவில்லை. அவர் அணியும் குட்டைப் பாவாடை குறித்தும் இந்தியப் பண்பாடு பாரம்பரியம் சார்ந்தும் மத ரீதியாகவும் சந்தித்த அழுத்தங்களும் பாகிஸ்தான் வீரர் சொகைப் மலிக்கை திருமணம் புரிந்ததனால் அவரது தேசப்பற்று கேள்விக்குள்ளாக்கப்பட்டமை போன்ற தெரிந்த விடயங்களும் ரெனிஸ் உலகில் தாம் சந்தித்த பல பிரபலங்களுடனான அனுபவங்களையும் நூலில் எழுதியுள்ளார். குறிப்பாக றோஜர் பெடரர் குறித்து அவர் எழுதிய பதிவு பெடரரின் மனித நேயத்தைப் வெளிப்படுத்திய தோடு புதிய தகவலாகவும் இருந்தது.

தகவல் தொழில் நுட்பம் வளர்ச்சி அடைந்த இன்றைய கால கட்டத்தில் பிரபலங்கள் குறித்த தகவல்கள் உடனுக்குடனாகவே ரசிகர்களைச் சென்றடைவதனால் அவர்களின் சுயசரிதை வெளிவரும் போது இவற்றைவிடப் புதிதாக என்ன விடயத்தைக் கூறியுள்ளார் என்பதை அறியும் எதிர்பார்ப்பு ஏற்படுவது தவிர்க்க முடியாதது. அதிலும் சுயசரிதை என்றாலே பரபரப்பை எதிர்பார்க்கும் ரசிகர்களுக்கு இந் நூல் ஒரு போதாமையைத் தந்தாலும் ஒரு பெண்ணாய் பிறந்து மத ரீதியான எதிர்ப்புக்களையும் தாண்டி சர்வதேச ரெனிஸ் உலகில் நட்சத்திரமாக ஜொலித்து இன்று இளஞ்சந்ததியினருக்கு ஆதர்சமாகத் திகழும் சானியாவின் சுயசரிதை ஒரு பாடமாக விளங்குவதற்கான தகுதியைக் கொண்டிருப்பதாகவே தோன்றுகிறது.




விளையாட்டு

தொகுப்பு: சி. விமலன்

## காசேதான் கடவுளடா!

பொருளாதார நலன்களைக் கருத்திற் கொண்டு சர்வதேச உதை பந்தாட்ட வீரர்கள் பலரும் தொழில்முறை விளையாட்டு வீரர்களாகவே இருக்கின்றார் கள். விளையாட்டை மட்டும் நம்பியே ஜீவிக்கும் அவர்களது செயற்பாட்டை பிழையென்று கூறமுடியாது. என்றாலும் கழகங்களுடனான ஒப்பந்தங்கள் சில சந்தர்ப்பங்களில் தேசிய அணிகளுக்குக் கூட அவர்களை விளையாடச் செய்ய முடியாத துயரத்துக்கு ஆளாக்குவதுதான் துரதிர்ஷ்டவசமானது.

நடைபெற்ற 'கோபா' அமெரிக்கத் தொடரில் பிறேசில் விளையாடி இருந்த பொழுதிலும் அதில் நெய்மர் பங்கேற்று இருக்கவில்லை. பார்சிலோனா கழகம் 'கோபா அமெரிக்கா' அல்லது ஒலிம்பிக் போட்டி ஏதாவது ஒன்றிலேயே கலந்து கொள்ள அனுமதித்ததனால் சொந்த நாட்டில் நடக்கும் ஒலிம்பிக் போட்டிகளைக் கருத்திற் கொண்டு நெய்மர் 'கோபா அமெரிக்காவில்' விளையாடவில்லை. இத்தொடர் நடைபெறும் பொழுது ஸ்பானிஸ் உதைபந்தாட்டத் தொடரில் போட்டிகள் நடைபெறாத போதும் வீரர்களுக்கு ஏற்படும் காயம் தங்களது கழகத்தின் வெற்றியைப் பாதிக்கும் என்ற வகையில் கழகங்கள் வீரர்களுக்குக் கட்டுப்பாடுகளை விதிக்கின்றன.

தற்போது ஆர்ஜென்ரீனா உதைபந்தாட்ட அணியின் பயிற்சியாளர் ஜெரால்டோ மார்டினோ தனது பதவியை ராஜினாமா செய்தமைக்கும் இதுவே காரணமாகியுள்ளது. கோபா அமெரிக்கா இறுதிப் போட்டியில் தோற்றும் கூட தனது பதவியை ராஜினாமா செய்யாத அவர் ஒலிம்பிக் போட்டிகளுக்காக அணியைத் தயார் செய்த பொழுது தான் ஒன்பது வீரர்கள் மட்டுமே கழகங்களினால் விடுவிக்கப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது. இதனால் பலம் குன்றிய அணியோடு ஒலிம்பிக்கில் கலந்து கொள்ள விரும்பாததால் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.




இன்று விளையாட்டு உட்பட அனைத்துமே வணிகமயமாகிவிட்ட நிலையில் நாட்டுக்கு முக்கியத்துவம் கொடுத்து விளையாட வீரர்களோ தேசிய உணர்வின் தார்ப்பரியத்தை புரிந்து கொள்ளும் நிலையில் கழகங்களோ தயாராக இல்லை என்பதை ரசிகர்களும் உணர்ந்து கொண்டதாலேயே ஒவ்வொரு தொடரையும் இலகுவாகக் கடந்து செல்ல முடிகின்றது. இத்தகைய சூழலில்தான் நாட்டுக்கு கிண்ணத்தைப் பெற்றுக் கொடுக்க முடியாத ஆதங்கத்தில் மெசி சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்ற விசித்திரமும் நடைபெற்றுள்ளமை இன்றைய விளையாட்டு உலகு சந்தித்துள்ள முரண்பாட்டின் உச்சம் எனலாம்.

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 30.07.2016 அன்று
107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.